# திருக்குறள் கதைகள்
# பொருட்பால்
# 981 – 1030

## தமிழறிஞர்
## கே.வி.குணசேகரம்

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | திருக்குறள் கதைகள் (981 – 1030) |
| நூலாசிரியர் | :- | தமிழறிஞர் கே.வி.குணசேகரம் |
| பதிப்பாண்டு | :- | 2010 |
| மொத்தப் பக்கங்கள் | :- | |
| விநியோகம் | :- | லங்கா புத்தகசாலை<br>கு.டு 1.14, டயஸ் பிளேஸ்<br>குணசிங்கபுர,<br>கொழும்பு – 12 |
| தொ.பேசி | :- | 011-2341942 |
| விலை | :- | |

# என்னுரை

திருக்குறள் கதைகள் பொருட்பால் 981 - 1030 வரையான 50 குறள்களுக்கான கதைகள் இந்நூலில் உள்ளன. இது வரை 930 குறள்களுக்கான கதைகள் வெளிவந்துவிட்டன. 1330 குறள்களுக்கும் இதுவரை யாரும் தொடர்கதை எழுதவில்லை. ஒரு நாவலாக இதை நான் எழுதிய போதும் தனித்தனியாகவும் வாசிக்கலாம். ஒவ்வொரு குறளுக்கும் பொருள், விளக்கம், கதை எழுதியுள்ளேன். இப்படியும் இதுவரை யாரும் எழுதவில்லை. குறளுக்கு உரையே எழுதியுள்ளனர். நான் குறளுக்குக் கதை எழுதியதால் குறளை யாபேரும் விளங்கிக் கொண்டனர்.

எழுத வாசிக்கத் தெரிந்த ஒருவர் குறளின் அர்த்தத்தையும் கருத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தே கதைகளாக எழுதினேன். எனது எண்ணம் பெருவெற்றி பெற்றது. தரம் ஐந்தில் கற்கும் பத்து வயது மாணவி எனது குறள் கதைகளை வாசித்துவிட்டு வகுப்பில் தன்னுடன் படிக்கும் மாணவர்களுக்கு அக்கதையை விளக்கமாகக் கூறியதை நான் நேரில் கண்டேன். இது எனக்குக் கிடைத்த வெற்றி மட்டுமல்ல குறளுக்குக் கிடைத்த வெற்றியுமாகும். குறளை மனனம் செய்வதாலோ, அதன் கருத்தைக் கூறுவதாலோ பயனில்லை. அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளல் வேண்டும். அந்தப் புரிந்துணர்வை எனது குறள் கதைகள் நிறைவேற்றியுள்ளன.

இந்த வகையில் இந்து தத்துவ நூல்கள் பலவற்றைக் கதைகளாக்கி வருகிறேன். அவற்றைச் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை விருப்புடன் வாசித்து வருகிறார்கள். இந்த வகையில் திருவருட்பயனையும், சிவஞானபோதத்தையும் தற்பொழுது கதைகளாக எழுதியுள்ளோன். இக்கதைகள் இந்து தத்தவத்தை மக்களுக்குப் புரிய வைக்கும் என்று நினைக்கிறேன். நான் படிக்கும் போது என்னால் புரிந்துகொள்ள முடியாதவற்றை இந்து தத்துவ நூல்களைத் திரும்பத்திரும்பப் படித்துப் புரிந்து கொண்டேன். அவற்றை இந்துக்கள் எல்லோரும் புரிந்து அதன்படி நடக்க வேண்டுமென்பதே எனது விருப்பம். இக்கதைகளிலுள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையேயாகும். யாரையும் குறிப்பிடுவனவல்ல.

நான் எழுதும் நூல்களில் உள்ள எழுத்துப் பிழைகளை நீக்கிச் சீர்செய்து தரும் ஓய்வுபெற்ற அதிபர்களான திரு வா. ஜெயரட்ணம், திரு. தி.கிருஷ்ணகுமார் அவர்களுக்கும், எழுத்துப் பிழைகளை நீக்கித் தருவதோடு, தகுந்த ஆலோசனைகளை வழங்கி என்னை உற்சாகப்படுத்தும் ஆசிரியை செல்வி ப.இறைமகளுக்கும், எனது கதைகளை அழகாக கணனி மயப்படுத்தித்தரும் செல்வி. க.தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூலை வெளியிடும் கொழும்பு 12இல் அமைந்துள்ள லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அன்புடன்

**கே. வி. குணசேகரம்**

ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்,

கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம். கோப்பாய் மத்தி, கோப்பாய்.

# அணிந்துரை

திரு. கே. வி. குணசேகரம் அவர்கள் எழுத்துத்துறையில் நீண்டதொரு வரலாற்றைக் கொண்டவர். இவர் வீரகேசரி, மித்திரன், பத்திரிகைகளில் எழுதத்தொடங்கி அன்பான வேண்டுகோள், வாழ்க்கை என்பது... வரை ஏறத்தாழ மூவாயிரத்திற்கும் அதிகமான கதைகளை எழுதிக் குடித்தவர். சமயநூல்களை ஆழ்ந்து ஆராய்ந்து அதன் மையக்கருத்துக்கள் கலையாது எளிய மொழிநடையில் சாதாரண மக்களைச் சென்றடையும் வகையில் கதைகளாக வடித்து வாசகர் இதயங்களைக் கவர்ந்தவர்.

“யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்” என்னும் கூற்றுக்கிணங்க, தன் அனுபவப்பாதையில் கண்ட, அனுபவித்த விடயங்களையெல்லாம் ஏனையோருக்கும் அவை படிப்பினையாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் எழுதிய கதைகளுக்கு மெருகூட்டும் வகையில் இடையிலே புகுத்தி நடைமுறை

உண்மைகளை மக்கள் அறியவேண்டும் என்ற நோக்கில் வெளிப்படுத்தி வருவதை வாசகர் உள்ளங்கள் அறியும்.

இயல்பாகவே வசீகர முகமும் எல்லோரையும் கவர்ந்திழுக்கும் பேச்சு வண்மையும் கொண்டவர். அதிகார தோரணையில் அல்லாது வேண்டுகோள் பாணியிலேயே இவரது கட்டளைகள் அமைந்திருப்பதனால் நல்லூர்க் கல்விக்கோட்டச் சமூகம் மிக விருப்புடன் அவரது வேண்டுகோளுக்குச் செயலுருக் கொடுத்து வந்தது.

பெயருக்காகவோ, புகழுக்காகவோ, பரிசிற்காகவோ எழுதாது தான் பெற்ற அறிவை, அனுபவத்தை சமூதாயத்திற்கு வழங்கவேண்டும் என்ற உயரிய நோக்கில் கதைகளாக வடித்து வரும் திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் எழுத்துத்துறையில் ஒரு வரலாற்று நாயகனாகத் தடம் பதித்துள்ளார். அவரை அறியாமலே அவரது புகழ் உலகெங்கும் வியாபித்து வருகின்றது. இத்தகு கனவானின் எழுத்துலகச் சேவை மேலும்

மேலும் விருத்தியடைய சாயி பகவானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டுகின்றேன்.

முருகேசு முரளிதரன் வுசுனு. டீ.யுஇ ீபுனுநு இ ஆ.நுனு
அதிபர்
ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்.

## கடமைகள்

வருணன் தனது மனைவி பூரணியுடன் தணிகாசலத்தையும் அழைத்துக் கொண்டு விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தான். அவன் வரும்போது இரவு எட்டுமணி. வேலையால் வந்த விக்னேஸ்வரமூர்த்தி குளித்துவிட்டுச் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்து அன்றைய தினத்தாளை வாசித்துக்கொண்டிருந்தார்; ‘‘போர் நடவடிக்கைகளால் பெற்றோரை இழந்த ஆயிரக்கணக்கான பிள்ளைகள் குடா நாட்டில் வாழ்கிறார்கள்’’ என்ற செய்தி அன்றைய தினத்தாளில் கட்டமிடப்பட்டு பிரசுரமாகியிருந்தது. நிசாந்தன் என்ற எட்டுவயதுச் சிறுவனின் படம் போட்டு அவனது சோகவரலாறு எழுதப்பட்டிருந்தது.

விக்னேஸ்வரமூர்த்தியின் காலடியில் படுத்திருந்த அவரது நாயான ‘கண்ணன்’ திடீரென்று குரைத்தவாறு எழுந்து ஓடியது, ‘‘யாரோ வருகிறார்கள்’’ என்று நினைத்த விக்னேஸ்வரமூர்த்தி பத்திரிகையை மடித்து அருகில் இருந்த மேசையில் வைத்துவிட்டுப் பார்த்தார். வாசலில் இரண்டு மூன்று பேர் நின்றார்கள்.

கண்ணன் மகிழ்ச்சியாரவாரம் செய்தது 'யாரோ தெரிந்தவர்கள் தான் வருகின்றார்கள்' என்று நினைத்த விக்னேஸ்வரமூர்த்தி சாய்வு நாற்காலியால் எழுந்தார். கண்ணன் மகிழ்வுடன் துள்ளிக் குதித்துத் தணிகாசலத்தை அழைத்து வந்தது. "வாருங்கோ" வரவேற்ற விக்னேஸ்வரமூர்த்தி அவர்கள் உள்ளே வந்ததும் "இருங்கோ" என்று கூறிவிட்டு தான் பழையபடி சாய்வு நாற்காலியில் அமர்ந்தார்.

"நீங்கள் முருகையாவுக்குக் காணி கொடுத்ததை என்னால் மறக்க முடியாது. சனசமூக நிலையம், சிறுவர் பாடசாலை, கூட்டுறவுப் பண்டகசாலை எல்லாம் ஓர் இடத்தில் இருக்கப் பொதுமண்டபம் இன்னோர் இடத்தில் இருந்தால் பெருங் கஷ்டம். நீங்கள் காணி தந்ததால் தான் எல்லாம் ஓர் இடத்தில் அமைந்து விட்டன" என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

வருணன் சிரித்தான். அந்தச் சிரிப்பில் பெருமையோ கர்வமோ இருக்கவில்லை "எம்மிடம் நிறையக்காணி பூமி உள்ளது. நான் வெளிநாட்டில் கைநிறையச் சம்பாதிக்கிறேன் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். என்னைப் போல எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும் என்பது தான் எனது விருப்பம். ஆனால் எமது நாட்டு மக்கள் யுத்தத்தினால் எத்தனையோ துன்பங்களை அனுபவிக்கிறார்கள். இன்றைய பத்திரிகையில் நிசாந்தன் என்ற பெற்றோரை இழந்த சிறுவனின் கதையை வாசித்த பின்பு என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை. இந்த

மண்ணில் துன்பப்படும் அனாதைச் சிறுவர்களுக்கு இன்பமும் மகிழ்ச்சியும் அளிக்கவேண்டுமென்று விரும்புகிறேன். அதனால் தான் தணிகாசலம் அண்ணையையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன்'' என்றான் வருணன்.

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசாது வருணனின் முகத்தைப் பார்த்தார். அது வேதனையால் களையிழந்திருந்தது. தணிகாசலத்தைப் பார்த்தார். அவர் யோசனையுடன் இருந்தார்.

''ஐயா, பத்திரிகையில் அச்செய்தியை வாசித்ததிலிருந்து என்னால் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. அப்பாவிடம் ஏராளமான நிலமிருக்கிறது சேனைகள் இருக்கின்றன் தோப்புக்கள் இருக்கின்றன. தென்னந்தோப்புக்குள் ஒரு பெரிய வீடு உள்ளது. அது இப்போது கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. அதைத்திருத்தித் துப்பரவு செய்யுமாறு கூறியுள்ளேன். அப்பா நாளையிலிருந்து அதைத் துப்பரவு செய்வதாகக் கூறியுள்ளார். தில்லைநடராசா மாமாவும் உதவி செய்வதாகச் சொல்கிறார். நவராசாவும் தணிகாசலமண்ணையும் உதவி செய்வார்கள். அதனால் பெற்றோரை இழந்த ஐம்பது பிள்ளைகளை நான் பராமரிக்கலாம் என்று நினைக்கிறேன்''. என்றான் வருணன்.

விக்னேஸ்வரமூர்த்திக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அன்றைய பத்திரிகையை வாசித்த பின்பு அவரால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. ''ஐயாஇ எனது அம்மாவும்

அப்பாவும் மூன்று சகோதரர்களும் எறிகணை வீச்சால் இறந்துவிட்டனர். நான் நான்காம் வகுப்புப் படிக்கின்றேன். அம்மாவின் தங்கையுடன் நான் வாழ்கின்றேன். சித்தப்பா ஒரு நாள் வேலைக்கெனச் சென்றவர் பின் திரும்பிவரவில்லை. சின்னம்மாவுக்கும் தொழில் இல்லை. பாவம் அவா. மூன்று பிள்ளைகளுடன் கஷ்ரப்படுகிறா. நான் சோறு சாப்பிட்டு ஐந்து நாட்கள் ஆகின்றன'' என்று நிசாந்தன் கூறியதாகப் பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது.

''இப்படி இங்கு ஒரு நிலைமை நிலவுகின்றதா?'' என்று விக்னேஸ்வரமூர்த்தி வருந்திக்கொண்டிருந்த போது தான் அவர்கள் வந்தார்கள்.

''நான் தேவையான பணத்தை அனுப்புகின்றேன். நீங்கள் அதைப் பொறுப்பேற்று நடத்த வேண்டும். கடமையை நினைத்துப் போற்றும் நல்ல குணமுடையவர்கள், நல்லவை அனைத்தையும் செய்வது தமது கடமை என்று நினைப்பார்கள். நீங்கள் அப்படியானவர் என்பதால் தான் வந்தேன்'' என்றான் வருணன்.

''நீங்கள் தான் அப்படியானவர். நாம் உங்களது எண்ணத்தை நிறைவு செய்பவர்கள்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

---

**981. கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.**

---

தனது கடமைகள் இவையென உணர்ந்து நடக்கும் சான்றோர்கள் நல்லவை எல்லாவற்றையும் தமது இயல்பான கடமை என்று கொள்வார்கள்.

## குணங்களின் சிறப்பு

“சான்றோரின் சிறப்பு என்று கூறப்படுவது அவர்களின் நல்ல குணங்களேயாகும். அது அவர்களிடம் உள்ள வேறு எந்தப் பொருட்களிலும் இல்லை. மலைபோலப் பொருட்களைக் குவித்து வைத்திருக்கும் மக்கள் எத்தனை பேர் இங்கு இருக்கிறார்கள். அவர்களால் துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்ய முடியவில்லையே. தாம் வாழும் வீட்டையும், தமக்கு உதவுவதாக அவர்கள் நினைக்கும் தெய்வங்களின் கோயில்களையும் இடித்து இடித்துப் புதிய வடிவில் கட்டுகிறார்களே தவிர, ஒரு பாடசாலைக்கட்டிடத்தையோ, ஓர் அனாதை விடுதியையோ கட்ட எண்ணுவதில்லை. நீங்கள் கொஞ்சப்பேர் இங்கிருந்து கொண்டு எவ்வளவு சேவை செய்கிறீர்கள். நல்லவர்கள் பலர் வாழ்கிறார்கள் ஆனால் அவர்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று தெரிவதில்லை. காலையில் நவராசா என்னைத்தேடி வீட்டிற்கு வந்து நிசாந்தனின் கதையைக் கூறி அழுதான். அவன் கொண்டுவந்த அந்தப் பத்திரிகையைப் படித்த பின்பு தான் எனக்கு இங்குள்ள நிலைமை புரிந்தது. தவராசா நிசாந்தனுக்குஏதாவது உதவி

செய்யவேண்டும் என்று துடித்தான். அந்தக் குணந்தான் சிறந்தது என்று நான் நினைக்கிறேன்'' என்றான் வருணன்.

''நமது ஊரில் தேவையில்லாத விடயங்களைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு தமது நேரத்தை வீணாக்குவதோடு மற்றவர்களையும் சேவை செய்யவிடாது தடுத்துக்கொண்டிருப்பவர்கள்தான் அனேகர். ஆனால் வயதில் இளையவனான நீ பெருந்தொண்டாற்ற நினைத்ததை நினைக்க எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. நிசாந்தன் கூறியதை வாசித்த பின் எனது மனதிலும் இப்படியோர் எண்ணம் உருவாகியது. தணிகாசலத்தையும் ஊரில் உள்ள பிரமுகர்களையும் அழைத்துக் கலந்தாலோசித்து மணிவண்ணன் அமைத்திருக்கும் விடுதியைப் பெருப்பித்து யுத்தத்தால் தமது பெற்றோரை இழந்த அனைத்துப் பிள்ளைகளையும் பராமரிக்க வேண்டும் என்று நினைத்தேன். நீங்கள் அந்த எண்ணத்துடன் வந்துவிட்டீர்கள். எல்லாம் நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதியின் மகிமை தான்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''பெற்றோரை இழந்த பிள்ளைகளைப் பராமரிப்போர் எம்முடன் தொடர்புகொள்ளுமாறு பத்திரிகையில் ஒரு விளம்பரம் கொடுப்போம். அதன் பின் முடிவெடுப்போம். நான் பிள்ளைகளைப் பராமரிப்பதற்குத் தேவையான நிதியை வெளிநாடுகளில் திரட்டி அனுப்புகிறேன். நீங்கள் தலைவராக இருந்து எல்லாவற்றையும் கவனியுங்கள்'' என்றான் வருணன்.

“தணி, நீ வந்த நேரம் முதல் பேசாமலிருக்கிறாய். உனது அபிப்பிராயத்தைச் சொல். விடுதியின் பொறுப்பாளராக உன்னைத்தான் நான் நியமிக்க விரும்புகிறேன். இளமையில் துன்பங்களால் துவண்டிருக்கும் சிறுவர்களுக்கு உற்சாகத்தையும்மகிழ்ச்சியையும் உன்னால் தான் கொடுக்க முடியும்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“நல்லவை எல்லாவற்றையும் செய்வதைக் கடமையாகக் கொண்டுள்ள நீங்கள் சொல்வதை நான் எப்போதாவது மறுத்திருக்கிறேனா? இது எமது தார்மீகக் கடமை “ஓர் ஏழைக்கு உணவில்லை என்றால் உலகை அழிக்க வேண்டும்” என்று சொன்ன பாரதியாரின் தாசன் நான். அதனால் இதற்கு எனது முழு ஒத்துழைப்பையும் வழங்குவேன். பணம் படைத்தவர்கள் இங்கு ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். நல்ல மனம் படைத்தவர்கள் தான் எமக்குத் தேவை. மகாகணபதியிடம் நம்பிக்கை வைத்தால் திட்டங்கள் எதுவும் எமக்குத் தேவையில்லை. அவரே எல்லாவற்றையும் செய்வார். நீங்கள் சிறிது நேரத்திற்கு முன் நிசாந்தன் கூறியவற்றை நினைத்து மனம் வருந்தி மகாகணபதியைத் துதித்தீர்கள். உங்கள் நல்ல குணத்தை அறிந்து மகாகணபதி வருணனை அழைத்து வந்துள்ளார். பிறரின் நலத்திற்காகக் கடவுளை வேண்டினால் நாம் வேண்டிய அத்தனையும் கடவுளிடமிருந்து கிடைக்கும்” என்றார் தணிகாசலம்.

“அப்பாவால் எமது தோப்புக்களையும் வயல்களையும் பராமரிக்கமுடிவதில்லை. அவற்றைக்

கூலியாட்களை அமர்த்திப் பராமரியுங்கள். இன்றிலிருந்து அவற்றிலிருந்து வரும் வருமானங்கள் முழுவதையும் அனாதைச் சிறுவர்களின் பராமரிப்புக்காக உங்களிடம் ஒப்படைகிறேன். நீங்கள் நல்லதொரு நாளில் கூடி ஆகவேண்டியவற்றைச் செய்யுங்கள்'' என்றான் வருணன்.

விக்னேஸ்வரமூர்த்திக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ''பாவம் நிசாந்தன். காலையில் எழுந்ததும் முதல் வேலையாக அவனைச் சென்று பார்க்க வேண்டும். அவனுக்குத் தேவையான உடுபிடைவைகளையும் உணவையும் முதலில் கொடுக்க வேண்டும். தணி, நீயும் வா'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''நானும் வருகிறேன்'' என்றான் வருணன்.

**982. குணநலம் சான்றோர் நலனே; பிறநலம்**
**எந்நலத்து உள்ளதூஉம் அன்று.**

சான்றோரின் நலம் என்று கூறப்படுவது அவர்களது குணங்களின் சிறப்பே ஆகும்;. அது வேறு எந்த நலத்திலும் சேர்ந்தது அல்ல.

## தாங்கும் தூண்கள்

விக்னேஸ்வரமூர்த்தி தனது மனைவியைக் கொண்டு காலையில் சோறு சமைப்பித்திருந்தார்.

சரியாகக் காலை ஆறுமணிக்கு வருணனும் தணிகாசலமும் பரமேஸ்வரனும் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு மோட்டார் வண்டியில் வந்தார்கள்.

‘‘பரமேஸ்வரனும் வரவிரும்பினார், அதனால் அவரையும் அழைத்து வந்தேன்’’ என்றார் தணிகாசலம்.

விக்னேஸ்வரமூர்த்தி சிறிய கடகம் ஒன்றில் சோற்றைப் போட்டுத் தூக்கி வந்து மோட்டார் வண்டியில் ஏற்றினார். அவரது மனைவியும் மகளும் கறி வகைகளைக் கொண்டுவந்து கொடுத்தனர்.

‘‘நீங்கள் சமைத்திருக்கிறியள். நான் கடையில் வாங்குவோமென நினைத்தேன்’’ என்றார் தணிகாசலம்.

‘‘கடையில் அதிகாலையில் சோறு வாங்க முடியாது. நிசாந்தன் தான் ஐந்து நாட்களாகச் சோறு சாப்பிடவில்லையென்று கூறியதை நினைக்க எனக்கு இரவு முழுவதும் நித்திரை வரவில்லை. கடையில் பிட்டு, இடியப்பம், தோசை, இட்டலி போன்றவை தான் வாங்கலாம். காலையில் சோறு வாங்க முடியாது. அதனால் மனைவியைச் சமைக்கச் சொன்னேன்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

விக்னேஸ்வரமூர்த்தி ஏறியதும் மோட்டார் வண்டி புறப்பட்டது. பரமேஸ்வரன் விக்னேஸ்வரமூர்த்தியின் முகத்தைப் பார்த்தார். அது

சுடராக ஒளிர்ந்தது, ‘‘நான் எத்தனை ஆயிரம் பேரைச் சந்தித்திருப்பேன். கடவுளைப்போன்ற குணங்களை உடைய விக்னேஸ்வரமூர்த்தியைப் போன்ற நல்லவரை நான் காணவில்லை. இவர் மனிதனா? இல்லைத் தெய்வம்’’ என்று நினைத்தார் பரமேஸ்வரன். அவரை நினைக்கப் பரமேஸ்வரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ‘‘நானும் தான் இரவு அச் செய்தியை வாசித்தேன். ஆனால் எனக்கு அது தோன்றவில்லை. ஏன் தணிகாசலத்திற்குக் கூடத் தோன்றவில்லை. உயிர்கள் மீது கடவுளைப் போல் அளவுகக்கதிகமான அன்பும், தீய செயல்களைச் செய்ய நாணமும், எல்லோருக்கும் உதவும் பண்பும், இரக்கமும், உண்மையான வழியில் நடக்கும் ஆண்மையும் விக்னேஸ்வரமூர்த்திக்கு மட்டும் தான் உரித்தானது’’ என்று நினைத்தார் பரமேஸ்வரன்.

பிரதான வீதியால் சென்றுகொண்டிருந்த மோட்டார் வண்டி ஒரு சிறு ஒழுங்கையூடாகச் சென்றது. அதற்கு மேல் மோட்டார் வண்டி செல்ல முடியாத சிறிய ஒற்றையடிப் பாதையாக இருந்தமையால் வருணன் மோட்டார் வண்டியை நிறுத்திவிட்டு அதிலிருந்து கீழே இறங்கினான்.

நாலைந்து சிறுவர்கள் அவர்களைக் கண்டதும் ஓடிவந்தார்கள். அவர்கள் மானத்தை மறைக்க மட்டும் உடைஅணிந்திருந்தனர்.

‘‘தம்பி சொரூபினியின் வீடு எது?..... நிசாந்தனை உங்களுக்குத் தெரியுமா....?’’ என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

“நிசாந்தன் பட்டணத்தில் உள்ள ஒரு வீட்டுக்கு வேலை செய்யப் போய்விட்டான். சொரூபினி அக்காவின் வீட்டைக் காட்டுகிறோம் வாருங்கோ” என்றான் ஒரு சிறுவன். அவன் முன்னால் செல்ல அவர்கள் அவனைப் பின்தொடர்ந்தனர்.

சிறிது தூரத்தில் பல குடிசைகள் இருந்தன; “இது தான் சொரூபினி அக்காவினுடைய வீடு” என்றான் அழைத்து வந்த சிறுவன்.

அந்தக் குடிசையைப் பார்த்தார் விக்னேஸ்வரமூர்த்தி. இத்துப் போயிருந்த தென்னோலைக் கூரைக்குப் பொலித்தீன் போட்டு மூடப்பட்டிருந்தது. முன்பக்கம் ஓலையினாலும் சாக்காலும் பொலித்தீனாலும் அடைக்கப்பட்டிருந்தது. அக்கூரையில் இருந்து ஓர் எலும்புக்கூடு வெளியே வந்தது “இப்படியும் ஓர் உருவமா....?” என்று ஆச்சரியப்பட்டார் பரமேஸ்வரன்.

“நீதானாம்மா சொரூபினி” என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்ததி.

“ஓம் ஐயா” என்று தலைஅசைத்தாள் சொரூபினி.

“நாங்கள் உங்களுக்குச் சோறு கொண்டு வந்துள்ளோம்” என்ற விக்னேஸ்வரமூர்த்தி சோற்றுக் கடகத்தை அவளிடம் கொடுத்தார். அவளின் கண்கள் மலர்ந்தன் “நீ இனிக் கஷ்ரப்பட வேண்டாம். நாம் உனக்கு உதவி செய்கிறோம்.

எங்கே நிசாந்தன்'' என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

அதைக்கேட்டதும் அவளது கண்கள் கலங்கின. விம்மினாள். எல்லோரும் அவளைப் பார்த்துக்கொண்டு நின்றனர். பின்னர் அவள் சொன்னாள் ‘‘எமக்கே உணவில்லை, அதனால் அவனைப் பட்டணத்தில் உள்ள ஒரு வீட்டுக்கு வேலைக்கு அனுப்பிவிட்டேன். மூன்று நேர உணவும் உடுப்பும் அவர்கள் கொடுப்பார்கள். அவன் இங்கிருந்தால் உணவில்லாமல் செத்துப்போவான்'' என்றாள் சொரூபினி.

அப்போது அங்கே ஒரு வயது போனவர் வந்தார் ‘‘ஐயா, இவளுக்கு மூன்று பிள்ளைகள். ஒரு வருடத்திற்கு முன்பு புரிசன் வேலைக்கென்று போனவன் திரும்பிவரவே இல்லை. நிசாந்தனுடைய தாயும் தகப்பனும், சகோதரர்களும் எறிகணை தாக்கி இறந்து விட்டார்கள். இவள் ஒரு நோயாளி. பாவம் நாங்களும் இவளை மாதிரித்தான். ஏதோ எம்மால் இயன்றவரை உதவி செய்வம்'' என்றார்.

‘‘சொரூபினி, நீ இனிக் கவலைப்படாதை. நிசாந்தனையும் அழைத்துக்கொண்டு வா. உங்களுக்கு எல்லா உதவிகளையும் நாங்கள் செய்வம்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘நீங்கள் யார் ஐயா? உங்கள் பெயர் என்ன..?'' என்று கேட்டார் அந்த வயதானவர்.

“விக்னேஸ்வரமூர்த்தி”

“அதிபரோ...?” முதியவரின் கண்கள் விரிந்தன் “சொரூபினி இனிக்கவலைப்படாதை. கடவுளே உன்னைத்தேடி வந்துவிட்டார். இனி உனக்கு நல்ல வாழ்வு தான்” என்றவர் விக்னேஸ்வரமூர்த்தியின் பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டுச் சொன்னார் “எனக்கு நீங்கள் எவ்வளவோ உதவிகள் செய்தனிங்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட என்னுடைய பேரனைப் பாடசாலையில் சேர்த்தனீங்கள். “அன்பு, நாணம், உதவும் பண்பு, இரக்கத்தன்மை, உண்மை என்ற ஐந்தும் சான்றாமை என்ற மண்டபத்தைத் தாங்கும் தூண்கள்” என்று பெரியவர்கள் சொல்வார்கள். இந்த ஐந்து பண்புகளும் உங்களிடம் இருக்கின்றது. நீங்கள் தெய்வம்” என்றார் அந்த முதியவர்.

---

**983. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்.**

---

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து பண்புகளும் சால்பு என்ற சான்றாண்மையைத் தாங்கியுள்ள தூண்களாகும்.

## சால்பு

சொரூபினியைச் சந்தித்துவிட்டு வீட்டுக்கு வந்த விக்னேஸ்வரமூர்த்திக்கு இதுவரை காலமும் செய்திராத பெரும்பணியொன்றைச் செய்த நிம்மதி மனதில் இருந்தது.

‘‘சொரூபினி நோயாளி. மாசம் முப்பது நாளும் படுத்த படுக்கையில் தான் இருப்பாள். மூத்தவனுக்குப் பதின்மூன்று வயது. மற்றைய இரண்டும் பெண்பிள்ளைகள். அவன் தான் தோட்டங்களில் கூலிவேலை செய்து ஏதோ அரைவயிற்றுக்காவது கஞ்சி ஊற்றுகின்றான். நிசாந்தன் இவளது சகோதரியின் மகன். படிப்பிலை சூரன் என்ன செய்வது? இப்போ படிக்க முடியுமோ..? இலவசக்கல்வி என்று சொல்லிப் புத்தகத்தையும் சீருடையையும் இலவசமாகத் தருகிறார்கள். எந்தப்பாடசாலைக்குச் சென்றாலும் முற்பணம் கேட்கிறார்கள். ஊருக்குள் ஒரு பாடசாலை இருக்கிறது. முப்பது நாற்பது பிள்ளைகள் படிக்கிறார்கள். அப்பாடசாலையில் நான்கு ஆசிரியர்களும், அதிபரும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஐந்து பேரையும் சம்பளத்தன்று தான் காணமுடியும். மற்றைய நாட்களில் மாறிமாறி ஒருவர் அல்லது இருவர் வராயினம். நீங்கள் கடவுள். பாடசாலையை நல்ல முறையில் நடத்தினீர்கள். முற்பணமாகவோ அன்பளிப்பாகவோ எதையும் பொறுவதில்லை. அப்படிப் பெறாமல் திறம்பட உங்களால் பாடசாலையை நடத்த முடியுமென்றால், மற்றவர்களால் ஏன் அப்படி நடத்த முடியவில்லை? என்று நான் யோசித்துப் பார்க்கிறனான். அதற்கு என்னால் விடைகாண முடிவதில்லை’’. என்று அந்த முதியவர் சொன்ன வார்த்தைகள் விக்னேஸ்வரமூர்த்தியின் காதில் ஒலித்தது.

அப்பொழுது வேலாயுதபிள்ளை அங்கே வந்தார் ‘‘நீங்கள் நிசாந்தன்ரை

குடும்பத்தினரைப் போய்ப் பார்த்ததாக அறிந்தேன். எனக்குத் தெரியாமல் போய்விட்டது. நானும் வந்திருக்கலாம்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''இனி அடிக்கடி அவர்களைச் சென்று நாம் சந்திக்கத்தானே வேண்டும். அப்போது போகலாம்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''ஜெயபாலனின் மனைவியின் சகோதரன் ரகுவரன் வந்துநிற்கிறான். உங்களைச் சந்தித்தவனே..?'' என்று கேட்டார் வேலாயுதபிள்ளை.

''இல்லை''

''ஊருக்குள் கொஞ்சப்பேர் இருந்து கொண்டு எத்தனை தீய செயல்களைச் செய்கிறார்கள். இவன் சிவசுந்தரமூர்த்தி ரகுவரனைச் சென்று சந்தித்து, இலக்கியப்பேரவைக்குப் பணம் கொடுக்க வேண்டாம் என்று சொன்னவனாம். ஆதித்தனின் தென்னந்தோப்பு வீட்டைத்திருத்தி, நீங்கள் அனாதை விடுதி ஆரம்பிக்கிற சாட்டில காசு சம்பாதிக்க நினைக்கின்றீர்களாம். வருணனை ஏமாற்றி நிலத்தைப் பறித்து முருகையனுக்குக் கொடுத்துவிட்டு, முருகையனைக் கொண்டு வீட்டைத்துப்பரவு செய்கிறீர்களாம், அந்தப் பெரிய வீட்டையும் தென்னந்தோப்பையும் காலகதியில் நீங்கள் மடக்கிப் போடுவீங்களாம்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''ஒவ்வொருவனும் தன்னைப் போலத்தான் மற்றவர்களும் இருப்பார்கள் என்று நினைக்கிறான். நல்ல மனத்துடன் இருப்பவனால்

தான் தனது குறைகளை அறிந்து கொள்ள முடியும். அப்படியானவன் தான் தனது குறைகளைத் திருத்திக் கொள்வான். சிவசுந்தரமூர்த்தி அப்படியானவன் அல்லன். அவன் மற்றவர்களது குறைகளை ஆராய்கின்றவனே தவிரத் தனது குறைகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை. எதிரியின் குறைகளைப் பற்றி நீ சிந்திக்கிறாய். மற்றவர்களிடம் குறை காண்பது பாவம் மட்டுமல்ல அது மிகவும் இழிந்த செயல்''. என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

வேலாயுதபிள்ளைக்கு அதைக்கேட்க ஒரு மாதிரியாக இருந்தது ''ஒரு போதும் விக்னேஸ்வரமூர்த்தி அடுத்தவர்களைக் குறைகூறமாட்டார். அத்துடன் தன்னைப் பற்றி யார் குறைகூறினாலும் அதை இலட்சியம் பண்ண மாட்டார்'' என்று அறிந்தும் தான் அப்படிக் கூறியதற்காக வருந்தினார் வேலாயுதம்பிள்ளை.

''எனக்கு நீங்கள் இப்படிச் சொல்வீர்கள் என்று தெரியும். நீங்கள் இவற்றையெல்லாம் அறியவேண்டும் என்பதற்காகச் சொன்னேன்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''பன்றி எப்போதும் மலத்தைத்தான் தேடும். இது புதினமில்லையே, பசு ஒன்று அதைத் தேடினால் தான் நாம் ஆச்சரியப்பட வேண்டும். வேலாயுதம், நான் முன்பும் பலமுறை இதைக்கூறியுள்ளேன். இப்போ நான் உனக்கு அதை நினைவுபடுத்துகிறேன். தவம் என்பது காட்டுக்குச் சென்று அமர்வதில்லை. எந்த ஓர் உயிருக்கும் துன்பம் செய்யாமல் இருப்பது. சால்பு என்பது பிறர்

செய்யும் தீமையைப் பற்றி விமர்சனம் செய்யாத நல்ல பண்பை அடிப்படையாகக் கொண்டது. நீ மிகவும் நல்லவன்''. என்று விக்னேஸ்வரமூர்த்தி சொல்லிக்கொண்டிருந்த போது வேலாயுதபிள்ளை மிகவும் அவசரமாகக் குறுக்கிட்டார்; ''ஐயா ஒரு செய்தியாக, நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன்''

---

**984. கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு.**

---

தவம் என்பது ஓர் உயிரைக் கொல்லாத அறத்தை அடிப்படையாகக் கொண்டது. சால்பு என்பது பிறரின் தீமைகளை எடுத்துச் சொல்லாத நற்பண்பை அடிப்படையாகக் கொண்டது.

## பெரும் ஆற்றல்

விக்னேஸ்வரமூர்த்தி சிரித்தார். பின் சொன்னார் ''வேலாயுதம், உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். என்னை யாரும் குறைகூறுவது உனக்குப் பிடிக்காது. அதனால் தான் நீ சொன்னாய் என்பதும் எனக்குத் தெரியும். நீ என்னில் எவ்வளவு அன்பை வைத்திருக்கிறாயோ அவ்வளவு அன்பை நான் உன்மீதும் வைத்துள்ளேன். அதை நீ சந்தேகிக்கிறாயா...?'' என்று கேட்டுவிட்டு நிறுத்தினார் விக்னேஸ்வரமூர்த்தி.

''ஐயையோ.... நீங்கள் என்ன கதைக்கிறீர்கள்..... உங்களை நான்

சந்தேகப்படுவேனா....?'' கலங்கினார் வேலாயுதபிள்ளை.

அதைக்கண்டு பதறிப்போனார் விக்னேஸ்வரமூர்த்தி ''நான் உன் மீது அன்பு வைத்திருக்கிறேன். ஆனால் உன்னைப்பற்றி ஊரில் உள்ளவர்கள் எப்படித்தான் கேவலமாகப் பேசினாலும் அதைப் பற்றி நான் உன்னுடன் கதைப்பதில்லையே.... ஏனென்றால் அப்படிப்பட்ட உறவு எம்முடையது. ஆற்றல் உள்ளவர்களின் பெரும் ஆற்றல் அடக்கம். அதனால் தான் சொன்னேனே தவிர உன்னைக் குற்றஞ் சொல்லவில்லை. பலவீனர்கள் தான் மற்றவர்களைப் பற்றிக் குறைகூறிக்கொண்டிருப்பார்கள். அத்துடன் அவர்கள் கூறும் குறைகளைக் கணக்கெடுத்தால் நாம் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

அப்போது ரகுவரனும் சிவசுந்தரமூர்த்தியும் ஜெயபாலனும் அங்கு வந்தனர்.

''ஐயா, உங்களை எனக்குத் தெரியாது. ஆனால் உங்களைப் பற்றி நிறையக்கேள்விப் பட்டிருக்கிறேன். வருணன் என்னுடன் வேலை செய்பவன். மிகவும் நல்லவன். அவன் உங்களைப் பற்றி வாயோயாமல் சொல்வான். அத்துடன் சிவசுந்தரமூர்த்தியின் மருமகன் உங்களைப் பற்றியும், தனது மாமனாரைப் பற்றியும் சொல்லியுள்ளான். அதனால் ஜெயபாலன் சொல்வதெதையும் நான் நம்புவதில்லை. எனது சகோதரிக்கு உங்களைப் பற்றிச் சொல்லி இலக்கியப்பேரவைக் கட்டிடத்தைக் கட்டுவதற்குத்

தேவையான நிதியைக் கொடுக்கச் சொன்னேன். வருணன் நான் வந்ததை அறிந்து எனது வீட்டிற்கு வந்தான். உங்களது தலைமையில் ஓர் அனாதை விடுதி ஆரம்பித்து நடத்தப்போவதாகச் சொல்லி, அதற்கு என்னை உதவி செய்யுமாறு கூறினான். வருணனின் மீது எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. வருணன் உங்களைத் தெய்வமாகப் பூசிக்கிறான். அதனால் நானும் எனது சகோதரர்களும் வருணன் ஆரம்பிக்கின்ற விடுதிக்கு உதவி செய்வதாகத் தீர்மானித்துவிட்டோம். எனது மைத்துனர் ஜெயபாலன் இங்கு வந்த காலத்தில் தனது பழைய நண்பர்களுடன் சேர்ந்து சில தீய செயல்களைச் செய்ததாக அறிந்தேன். இருந்தும் நீங்கள் அதைப் பெரிதாக நினைக்கவில்லை. ஆற்றலுடையவர்களது பெரிய ஆற்றலாவது பணிவுடன் நடத்தலாகும். அதன்படி நீங்கள் நடந்து கொண்டீர்கள்'' என்றான் ரகுவரன்.

அப்போது நிசாந்தனும் சொரூபினியும் அங்கு வந்தனர். நிசாந்தனைப் பத்திரிகையில் கண்டமையால் அடையாளம் கண்டுகொண்ட ரகுவரன் அவனின் அருகில் வந்துசொன்னான் ''நிசாந்தன், நீ என்னுடன் லண்டனுக்கு வருகிறாயா......? அங்கு வந்தால் நீ படிக்கலாம்''.

நிசாந்தன் தடுமாறினான். சொரூபினி செய்வதறியாது திகைத்துப் போய் நின்றாள். சிவசுந்தரமூர்த்தி ரகுவரனைப் பார்த்தார். அவருக்கு ரகுவரனின் செயல் ஆச்சரியத்தைக் கொடுத்தது; ''இந்தப் பிச்சைக்காரப்பையனை தன்னுடன்

அழைத்துச் செல்ல ரகுவரன் ஏன் விரும்புகிறான்?'' என்று நினைத்தார்.

ரகுவரன் சிவசுந்தரமூர்த்தியின் முகத்தைப் பார்த்தான். அது கலவரமடைந்திருந்தது ''ரகு, உங்களை எனக்குத்தெரியாது. ஜெயபாலன் என்னுடைய பழைய நண்பன். அத்துடன் அவன் எனது உயிர் நண்பன் மிகவும் நல்லவன் தமக்குப் புகழ்வர வேண்டும் என்று நினைக்கும் சிலர் ஜெயபாலனைப் பற்றித் தவறாக ஊரவர்களுக்குச் சொல்கின்றனர். நீங்கள் ஜெயபாலனுக்காக இந்த ஊருக்கு உதவிகள் செய்ய நினைக்கிறீர்கள். ஜெயபாலனை மதியாத இவ்வூரவர்களுக்கு நீங்கள் ஏன் உதவி செய்தல் வேண்டும்?'' என்று சிவசுந்தரமூர்த்தி சொன்னது அவனது காதில் ஒலித்தது.

''ஜெயபாலனைப் பற்றி இவர் எனக்குச் சொல்கிறார். நான் அவனுடன் தினமும் போராடுவது இவனுக்கு எங்கே தெரியப்போகிறது'' என்று நினைத்தவாறு ரகுவரன் சொன்னான் ''விக்னேஸ்வரமூர்த்தி ஐயா மிகவும் நல்லவர் ஒழுக்கமானவர் ஆற்றல் உடையவர். ஆற்றல் உடையவர்களின் பெரிய ஆற்றல் அடக்கம். அப்படிப்பட்ட அடக்கமுள்ளவரைப் பகைவர்கள் கூட நண்பர்களாக நினைப்பர். அடக்கமென்பது எந்தக்கொடியவரையும் நண்பனாக மாற்றும் ஆயுதமாகும். அந்த ஆயுதம் உன்னை அடிமையாக்கவில்லை என்றால் நீ மனிதனல்ல''

''உண்மைதான் ரகு... அடக்கமுள்ள விக்னேஸ்வரமூர்த்தி கடவுள் என்பதை நான்

ஏற்றுக்கொள்கிறேன்''கண்கலங்கினார் சிவசுந்தரமூர்த்தி.

**985. ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.**

ஆற்றல் உடையவரின் ஆற்றல் என்பது அடக்கமே ஆகும். அது பகைவரையும் நண்பர்களாக்கிக் கொள்ளும் ஆயுதமுமாகும்.

## உரைக்கும் கல்

அன்று நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதி ஆலயத்திற்குத் தனபாலனும், சிவசுந்தரமூர்த்தியும் வந்தனர். பூசை முடிந்தபின் நவராசாவும் வேலாயுதபிள்ளையும், தணிகாசலமும் வந்தனர். விக்னேஸ்வரமூர்த்தி ஏழு மணிக்கு வருவதாகச் சொல்லி அனுப்பியிருந்தார். அப்பொழுது நேரம் இரவு ஆறு ஐம்பது. ஏழு மணிக்குக் கட்டாயம் விக்னேஸ்வரமூர்த்தி வந்துவிடுவார் என்று நினைத்தவாறு தணிகாசலம் வேலாயுதபிள்ளையை அழைத்துக் கொண்டு சுவாமியாரிடம் சென்றார்.

சுவாமியார் இருவரையும் பார்த்துப் புன்னகைத்தார் "வேலாயுதம், இன்று பெற்றோரை இழந்த சிறுவர்களைப் பற்றி மிகவும் முக்கியமானதொரு முடிவெடுக்க வேண்டும் என்றுதான் பல முக்கிய பிரமுகர்கள் இங்கு வருகிறார்கள். எமது பிரதேசத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள் எல்லாம் மகாகணபதி

ஆலயத்தில் கூடித்தான் முடிவெடுப்பது வழக்கம். இவ்வளவு காலமும் குடிகாரர்களும், சமூகத்திற்கு உதவாதவர்களும் தான் கூட்டத்தைக் குழப்புவது வழக்கம். ஆனால் அன்று குடிகாரன் ஒருவனுக்கு வேலாயுதபிள்ளை அடித்தது எனக்குப் பிடிக்கவில்லை. இனிமேல் அப்படி யாரும் நடக்கக் கூடாது. தம்மைவிடத் தாழ்ந்தவரிடத்திலும் கூடத் தோல்வியை விசுவாசத்துடன் ஒப்புக்கொள்பவன் தான் சான்றோன். சான்றோரை உரைத்துப் பார்க்கும் உரைகல் அதுதான். ஆத்திரப்படுவது நல்லதல்ல. அளவுக்கதிகமாக ஆத்திரப்படுவது என்றும் தீமையைத் தரும்; சுயகௌரவத்தை இழக்க நேரிடும். இவை யாவும் மனதினால் செய்யப்படும் பாவங்கள். பெரும்பாலானவர்களுக்குத் தீய செயல்கள் எதுவென்று தெரியாது. அதனால் தான் தீய செயல்களைச் செய்கிறார்கள். தீயவை எதுவென்று தெரிந்தவர்கள் அதைச் செய்வதை அனுமதிக்க முடியாது'' சுவாமியார் கண்களை மூடினார்.

''அன்று ஏன் அப்படி நடந்து கொண்டேன் என்று எனக்கு விளங்கவில்லை. விக்னேஸ்வரமூர்த்தி சொன்ன மாதிரி; ''வேலாயுதம் தனபாலன் தினமும் குடித்துவிட்டுக் கண்டபடி பேசுகிறான். அவன் பேசும் நாட்களில் அவன் இருக்கும் இடத்தைவிட்டு எழுந்து செல்லும் நீ அன்று ஏன் அவனுக்கு அடித்தாய்...? அதைவிட இந்தப்பிரதேசத்தில் யாராவது தனபாலனை ஏசியிருக்கிறார்களா..? அவனை ஏசினால் அவன் தினமும் உன்னை ஏசுவான். நீ இப்படி நடப்பாய் என்று நான் நினைக்கவில்லை'' என்றவர். அன்று அவன் அப்படிச் சொன்ன போது, நான் அவர் மீது

கோபப்பட்டேன். இன்றைய நிலையில் அவர் சொன்னது சரி. விக்னேஸ்வரமூர்த்தி எதையும் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. அவரோடு பலகாலம் பழகியும் என்னால் அவரைப் புரிந்துகொள்ள முடியவில்லையே'' என்று கவலைப்பட்டார் வேலாயுதபிள்ளை.

அப்போது தனபாலனும் சிவசுந்தரமூர்த்தியும் அங்கு வந்தனர். வேலாயுதபிள்ளை தனபாலனுக்கு அடித்த பின், அவன் அவரைப்பார்ப்பதில்லை. அவரும் அவனைப்பார்ப்பதில்லை. அங்கு வந்த தனபாலன் ஒரு கரையில் அமர்ந்தான்.

வேலாயுதபிள்ளை தனபாலனுக்கருகில் சென்றார். அவரைக்கண்டதும் தனபாலன் எழுந்தான் ‘‘தனபாலு, அன்று ஏதோ தெரியாத் தனமாக நான் உன்னை அடித்து விட்டேன். அதை மன்னித்துக்கொள். ஏதோ கெட்ட நேரம் அப்படி நடந்துவிட்டது'' என்று தனபாலனது கையைப்பிடித்தார் வேலாயுதபிள்ளை.

தனபாலன் அதிர்ந்து போனான் ‘‘நீங்கள் பெரிய மனிதன். நான் செய்தது பிழை. ஊரவர்களை நான் கேவலமாகப் பேசினால் யாருக்குத்தான் கோபம் வராது? அதுக்காக நீங்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்பதா....? நீங்கள் எந்தளவு பெரிய மனிதன்...'' கலங்கினான் தனபாலன்.

சிவசுந்தரமூர்த்திக்கு வியப்பாக இருந்தது; ‘‘வேலாயுதபிள்ளை ஊரில் மதிப்புடனும் மரியாதையுடனும் வாழும் பெரிய மனிதன். கேவலம்

ஒரு குடிகாரனிடம் மன்னிப்புக்கேட்கிறார்'' என்று நினைத்தார்.

''நானும், வேலாயுதபிள்ளை உனக்கு அடித்தது சரியென்று தான் நினைத்தேன். ஆனால் அது பெரிய தவறு என்று இப்போது தான் தெரிகிறது. அதனால் நானும் பெருங்குற்றம் செய்து விட்டேன் என்னையும் மன்னித்துக்கொள் தனபாலு'' என்றார் தணிகாசலம்.

''ஐயோ இது என்ன கதை? தம்மை விட உயர்ந்தவர்கள் தவறு செய்தால் அதைப்பொறுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தவறு செய்தாலும் அதில் ஓர் அர்த்தம் இருக்கும்'' என்று எனது தந்தையார் அடிக்கடி சொல்லக் கேட்டுள்ளேன். எனது தீய குணங்களால் தான் நான் கெட்டழிந்தேன். அண்ணனுடன் நான் சேர்ந்து வாழ்ந்திருந்தாலே, நான் பெரிய பணக்காரனாகியிருப்பேன். இப்போ இன்னும் நான்கு அடி அடியுங்கள்'' என்ற தனபாலன் வேலாயுதபிள்ளையின் வலது கையைப் பிடித்து தனது கன்னத்தில் பல முறை அடித்தான்.

சுவாமி கண்விழித்துப் பார்த்தார். தனபாலன் செய்யும் செயலைப் பார்த்துச் சிரித்தார்.

## 986. சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்.

சான்றாண்மையை மதிப்பிடும் உரை கல் போல் செயற்படும் கருவி எது என்றால், தம்மை விடத்

தாழ்ந்தவரிடத்திலும் தன் தோல்வியை ஏற்றுக் கொள்ளும் பண்பாகும்.

## சாதிப்பது எதை?

ஜெயபாலனும் சிவசக்தியும் ரகுவரனும் சுவாமியாரிடம் வந்தனர். சுவாமியார் கண்களை மூடியபடி இருந்தார். அதனால் வந்தவர்கள் ஆங்காங்கே இருந்தனர்; “விக்னேஸ்வரமூர்த்தி வந்தால் கூட்டத்தைத் தொடங்கலாம், அவரைக் காணவில்லை” என்று நினைத்தார் தணிகாசலம்.

அப்போது தனபாலசிங்கம் வந்து சொன்னார் “இன்று அலுவலகத்திற்குக் கல்வி அமைச்சிலிருந்து சில அதிகாரிகள் வந்தமையால் இப்போதுதான் விக்னேஸ்வரமூர்த்தி வீட்டிற்குச் செல்கிறார். பத்து நிமிடங்களில் வந்துவிடுவதாக எல்லோரிடமும் சொல்லச் சொன்னார்” என்றார்.

வேலாயுதபிள்ளை சிவசக்திக்கு அருகே சென்று அமர்ந்தார். அவர் இதற்கு முன்பு இரண்டு தரம் ஜெயபாலனின் வீட்டிற்குச் சென்று ரகுவரனையும், சிவசக்தியையும் சந்தித்தார். அவர்களின் கதைகளிலிருந்து அவர்கள் மிகவும் நல்லவர்கள் என்று தெரிந்து கொண்டார். இப்படியானதொரு நல்ல பெண் ஜெயபாலனுக்கு மனைவியாக வாய்த்தது அதிஷ்டம்” என்று நினைத்தார்.

“என்ன வேலாயுதபிள்ளை அண்ணை எந்த நேரமும் மகிழ்ச்சியுடன் சிரித்துக்கொண்டே இருக்கிறீர்கள், உங்களைப் பார்த்தால் எனக்குப் பொறாமையாக உள்ளது” என்றாள் சிவசக்தி.

“அப்படித்தான் எல்லோரும் சொல்கிறார்கள்” என்று சிரித்த வேலாயுதபிள்ளை, சிறிது தயங்கினார் “எதையோ கேட்க நினைக்கிறீர்கள் கேளுங்கோ” என்றாள் சிவசக்தி.

“நான் என்னத்தைக் கேட்கிறது. தனபாலன் குடிகாரன் கெட்டவன் அவனுடைய மனைவியும் பிள்ளைகளும் மிகவும் நல்லவர்கள்” நிறுத்தினார் வேலாயுதபிள்ளை.

“அது எனக்குத் தெரிந்ததால் தான் நான் அவர்களுக்குப் பணம் அனுப்புகிறேன் வேலாயுதன்னை உங்களை எனக்குத் தெரியாது. ஆனால் எனது கணவரைப் பற்றியும் அவரது குடும்பத்தைப் பற்றியும் என்னைவிட உங்களுக்குக் கூடத்தெரியும். இவரும் தம்பியாரைப் போலத்தான் குடித்துவிட்டு ஒரே பிரச்சினை. அண்ணைமார் சில சமயம் இவருக்கு அடித்தும் விடுவார்கள். அப்படி இருந்தும் நான் இவரை மதிக்கிறன். அத்துடன் தனபாலன் எனக்கு எழுதிய கடிதங்களில் ஒன்றைத் தானும் நீங்கள் வாசித்தால் தான் தெரியும். தமிழில் அப்படியான வார்த்தைகள் இருக்கின்றனவா என்று நான் ஆச்சரியப்படுவேன். அப்படி இருந்தும் நான் பணம் அனுப்புகிறேன். தனது தம்பியைப் பற்றி இவர் ஒரு நாளாவது நினைத்துப் பார்த்ததில்லை. இங்கு வந்து மூன்று மாதங்கள் கழிந்து விட்டன. இவர் அந்தக் குடும்பத்தை அழைத்து ஒருநேரச்

சாப்பாடு கொடுத்தாரா....? இல்லை உடுபிடவைகள்..... பணம் ஏதாவது கொடுத்தாரா....? நான் தான் கொடுத்தேன். எனது அண்ணா பெருந்தொகைப் பணம் கொடுத்துள்ளார். அவருக்கு உள்ள அக்கறை இவருக்கு ஏன் வரவில்லை?'' என்று கேட்டாள் சிவசக்தி.

''எல்லோரையும் மனிதர்கள் என்றா நீங்கள் நினைக்கிறீர்கள்..? நீங்களும் ஜெயபாலனைப் போல் அக்கறை இல்லாமல் இருந்திருந்தால், தனபாலனது குடும்பம் என்றோ அழிந்திருக்கும். அத்துடன் ஏழை எளியவர்கள் மீது நீங்கள் அன்பு கொண்டமையால் தான் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு உதவ முன்வந்துள்ளீர்கள். பெருந்தன்மை என்பது பரம்பரை பரம்பரையாக வருதல் வேண்டும். அதனால் தான் நீங்கள் தனபாலனது குடும்பத்திற்கு உதவி செய்தீர்கள். அத்துடன் அவனது மூத்த மகனை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். அவனுக்கு இருபத்தொரு வயது பாடசாலைக்கும் செல்லவில்லை. உழைப்பதும் இல்லை, தகப்பனைப் போலத் திரிகிறான்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''உழுற மாடு உள்ளூரில் உழும் என்பார்கள். அங்கு வந்தால் இருபத்து நான்கு மணி நேரமும் உழைக்க வேண்டும். இரவு பகல் முழுவதும் படுத்திருக்கிறான்'' என்றாள் சிவசக்தி.

''அவன் வயது குறைந்தவன். நீங்கள் கூட்டிக்கொண்டு போங்கோ. அவன் உழைப்பான்'' என்றார் வேலாயுதபிள்ளை.

“சரி, நீங்கள் சொன்னதற்காகக் கூட்டிச் செல்கிறேன்” என்றாள் சிவசக்தி.

“பெருந்தன்மை உள்ளவர்கள் தான் தமக்குத் துன்பஞ் செய்தவர்களுக்கும் நன்மை செய்வார்கள்” என்று கூறிவிட்டு எழுந்தார் வேலாயுதபிள்ளை. அப்போதும் விக்னேஸ்வரமூர்த்தி வரவில்லை. அதனால் கோயிலடிக்கு வந்தார். அவருக்குப் பின்னால் தனபாலன் வந்தான்.

“ஊரில் எத்தனை பேர் இருக்கிறார்கள். நீங்கள் இரண்டு மூன்று பேர் தான் ஊருக்கு உதவி செய்கிறீர்கள். நேற்று விக்னேஸ்வரமூர்த்தி ஐயா எனது மகனை அழைத்துச் செல்லும்படி அண்ணிக்குச் சொன்னவராம். இன்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இந்தப் பெருந்தன்மை வேறு யாருக்கு வரும். நான் உங்களுக்கு எவ்வளவு தீமைகள் செய்திருப்பன். நீங்கள்....” விம்மி விம்மி அழுதான் தனபாலன்.

**987. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?**

தனக்குத் துன்பமானவற்றைச் செய்தவர்களுக்கும் தாம் நன்மைகளைச் செய்யவில்லை. என்றால், சான்றோரின் சான்றாண்மையால் என்ன பயன் உண்டாகும்.

குறையல்ல.

அப்போது அங்கே பண்டிதரும் விக்னேஸ்வரஸ்வரமூர்த்தியும் வந்தனர். அவர்களைக் கண்டதும் எல்லோரும் எழுந்தனர். அவர்கள் இருவரும் சுவாமியாரின் அருகில் வந்து அவரது பாதங்களைப் பணிந்தனர்.

தணிகாசலம், விக்னேஸ்வரமூர்த்திக்காக வாங்கி வைத்திருந்த விபூதியை நீட்டினார். அப்போது குருக்கள் விபூதியுடன் அங்கு வந்தார். அதைக்கண்ட விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார் ‘‘ஐயையோ, உங்களுக்கேன் வீண்சிரமம். நான் கோயிலடியில் இருக்கும் மாடத்தில் இருந்த விபூதியை எடுத்துப் பூசிவிட்டுத்தான் வந்தேன். அத்துடன் தணிகாசலம் எந்தநேரமும் மகாகணபதியின் விபூதியை வைத்திருப்பார்’’ என்றார்.

‘‘நீங்கள் கோயிலடிக்கு வந்தால் எனது கையால் மகாகணபதியின் பிரசாதத்தை தராவிட்டால் எனக்கு அன்று ஏதோ தவறு செய்ததைப்போல் இருக்கும்’’ என்றார் குருக்கள்.

விக்னேஸ்வரமூர்த்தி குருக்களிடம் விபூதியை வாங்கி நெற்றியில் பூசிவிட்டு நிலத்தில் அமர்ந்தார். சுவாமியார் புன்னகைத்தார்; ‘‘இன்று மகத்தான ஒரு செயலில் ஈடுபட நீங்கள் எல்லோரும் முன்வந்துள்ளீர்கள். இப்போது நடைபெறும் போரினாலும், சுனாமியாலும் ஆயிரக்கணக்கானோர் தமது உடமைகளை இழந்து

நடுத்தெருவில் நிற்கின்றனர். பலர் தமது பிள்ளைகளை, உறவினர்களை, நண்பர்களை இழந்துள்ளனர். இதைவிடக் கொடுமை பல பாலகர்கள் தம் பெற்றோர்களை இழந்துள்ளனர். இப்பாலகர்களுக்கு உதவுவது எமது கடமையென்று நினைத்து நீங்கள் எல்லோரும் கூடியிருக்கிறீர்கள். அன்பு, நாணம், இரங்கும் தன்மை, உதவும் பண்பு, உண்மை என்பன சமூகசேவை செய்பவர்கள். கடைப்பிடிகக்கவேண்டியவை. இந்த ஐந்தும் தான் சான்றாண்மை என்று சொல்லப்படுவது. இவ் ஐந்தையும் கடைப்பிடிக்காதவர்கள் சமூக சேவை செய்ய முடியாது. இவற்றிற்கு சால்பு என்னும் மனவுறுதி தேவையே தவிரப் பொருள் தேவையில்லை. இங்கு உள்ள பண்டிதர் மிகவும் ஏழை. விக்னேஸ்வரமூர்த்தி அரசேவையாளராக இருந்தாலும் பெரிதாகப் பணம் இல்லாதவர். அத்துடன் தணிகாசலம், வேலாயுதபிள்ளை, தனபாலசிங்கம் ஆகியோர் பெருந்தொகையாகப் பணத்தை அள்ளிக்கொடுக்கக் கூடியவர்கள் அல்லர். அவர்களிடம் சால்பு என்று சொல்லப்படுகின்ற மனவுறுதி உண்டு. அதனால் அவர்களிடம் பொருளில்லாவிட்டாலும் மக்கள் அவர்களை மதிக்கிறார்கள். அதை யாரும் குறையாகக் நினைப்பதில்லை’’ மூச்சுவிட்டார் சுவாமியார்.

சில நிமிடங்களுக்குப் பின் சுவாமியாரே பேசினார் “ஒரு செயலைச் செய்பவர்களை விட அதை விமர்சிப்பவர்கள் தான் அதிகமானவர்கள். விமர்சிப்பவர்களைப் பற்றி கவலை கொள்ளாதவர்கள் நீங்கள். விமர்சனங்களுக்குப் பதில் சொல்லாவிட்டால் அந்த விமர்சனம் அழிந்துவிடும். பதில் தண்ணீரைப் போன்றது. ஊற்ற ஊற்ற அது வளரும். நாம்

ஒவ்வொருவரினதும் நற்குணங்களை வைத்துத்தான் அவர்களை மதிக்க வேண்டும். ஒருவன் எப்படி இருக்கிறானோ அப்படித்தான் அவன் பிறரைக் காண்கிறான். நன்றும் தீதும் அவரவரது மனத்திலேயே உள்ளது. இன்று ஆரம்பிக்ககப்படும் காப்போர் இல்லத்திற்கு மனமுவந்து பொருட்களை கொடுத்துதவும் வருணன் தம்பதியினருக்கும், ஜெயபாலன் குடும்பத்தினருக்கும் குறிப்பாக ரகுவரனுக்கும் நன்றி கூறிக்கொள்வதோடு நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதியின் அருட்கடாட்சம் உங்களை அனுக்கிரகிக்கவும் கிடைக்கவும் வேண்டுகிறேன்'' என்றார்.

சில நிமிட மௌனத்தின் பின் வருணன் எழுந்தான் ''நான் முன்பு கூறியதைப்போல இக்காப்பகத்திற்கான அத்தனை உதவிகளையும் செய்வேன். இக்காப்பகத்திற்கு விக்னேஸ்வரமூர்த்தி அவர்கள் தலைவராக இருந்து செயற்படுவார்'' என்றான்.

அதை ரகுவரன் ஏற்றுக்கொண்டான். ''விக்னேஸ்வரமூர்த்தியவர்கள் தான் இதற்குப் பொருத்தமானவர்'' என்றான்.

பண்டிதர் எழுந்து விக்னேஸ்வரமூர்த்தியிடம் சென்று தான் வைத்திருந்த சிறிய தொகைப்பணத்தைக் கொடுத்தார். விக்னேஸ்வரமூர்த்தி எழுந்து அவரை வணங்கிவிட்டு அவரிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டார்; ''நாம் எந்த நல்ல காரியத்திற்கும் பண்டிதரிடமே முதல் முதலாகப் பணம் வாங்குவோம் இன்று அவர் நூற்றியொரு

ரூபா தந்து இக்காப்பகத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்'' என்றார்.

சுவாமியார் புன்னகைத்தார் ''பண்டிதர் நல்ல கைராசி உள்ளவர். அதனால் தான் சான்றான்மையுள்ள பண்டிதரின் வறுமையை இங்குள்ளவர்கள் குறைத்து மதிப்பிடுவதில்லை. பண்டிதரின் கைராசி இக்காப்பகத்தை உயர்த்தும்'' என்றார் சுவாமியார்.

அடுத்து வருணன் இருபத்தைந்து லட்சம் ரூபாவும், ஜெயபாலன் இருபது இலட்சம் ரூபாவும் கொடுத்தனர்.

**988. இன்மை ஒருவற்கு இளிவுஅன்று சால்பு என்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.**

சால்பு என்னும் உறுதி ஒருவனுக்கு உண்டானால், அவனுக்கு பொருள் இல்லாததால் ஏற்படும் வறுமை ஒரு குறை ஆகாது.

## வேறுபடாதவர்

கணபதி மத்தியமகா வித்தியாலயத்திற்கு அருகே மண்டலகேசன் என்பவருக்குச் சொந்தமான காணி ஒன்று இருந்தது. மண்டலகேசன் அப்பாடசாலையின் பழைய மாணவர். அத்துடன் அங்கு ஆசிரியராகக் கடமை புரிந்து ஓய்வு பெற்றவர். அவரது பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்தமையால் அவரும் வெளிநாட்டிற்குச் சென்றுவிட்டார். அதனால் அவரது பிள்ளைகள்

அக்காணியை விற்க முயற்சித்தனர். அதை அறிந்த விக்னேஸ்வரமூர்த்தி அக்காணியைப் பாடசாலைக்கு வாங்கத் தீர்மானித்தார். அக்காணி அப்பாடசாலையின் முன்நாள் அதிபரான “கனகன்” என்பவரின் பொறுப்பில் இருந்தது.

வெளிநாட்டில் இருந்து வந்த சிவகுமரன் என்ற பழைய மாணவன் அக்காணியை வாங்கிப் பாடசாலைக்குத் தருவதாகக் உறுதியளித்தான். அதை நம்பிய விக்னேஸ்வரமூர்த்தி அக்காணியின் பொறுமதியில் அரைவாசித் தொகையைக் கொடுத்து மூன்று மாதத் தவணையில் அக்காணியின் மிகுதிப் பணத்தைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டுவழக்கறிஞர் மூலம் பத்திரம் எழுதிக்கையெழுத்திட்டார்.

மூன்று மாதங்கள் கழிந்த போதும் சிவகுமரன் பணம் அனுப்பவில்லை. அத்துடன் அக்காணியில் செல்வவதி என்ற பெண் தனக்குரிமை உள்ளதாக வழக்குத் தொடர்ந்தாள். அதனால் கல்வித் திணைக்களம் அக்காணியின் பிரச்சினை தீரும்வரை கனகனுக்குக் கொடுக்கவேண்டிய மிகுதிப் பணத்தைக் கொடுக்கவேண்டாம் என்று கட்டளையிட்டது.

கனகன் அப்பெண்ணின் பிரச்சினையை ‘விக்னேஸ்வரமூர்த்தியைத் தீர்க்குமாறு’ கூறினார். ‘அதற்கும் தனக்கும் தொடர்பு இல்லை’ என்றார். ஆனால் அப்பெண் ‘தனக்கு நஷ்டஈடாகப் பணம் தரவேண்டும்’ என்றாள்.

விக்னேஸ்வரமூர்த்தி தனது சொந்தப் பணத்தில் அப் பெண் கேட்ட பணத்தைக் கொடுக்கவிரும்பினார். ஆனால் மிகுதியாகக் கொடுக்கவேண்டிய பெருந்தொகைப் பணத்தை சிவகுமரன் அனுப்பாததால் செய்வதறியாது திகைத்தார்.

பணம் உரிய தவணையில் கொடுக்காமையால் கனகன் நீதி மன்றத்தில் விக்னேஸ்வரமூர்த்திக்கு எதிராக வழக்கு தொடுத்தார். நீதிமன்றம் மிகுதிக்காசையும் அதற்கான வட்டிப் பணத்தையும் நீதிமன்றத்திற்கான செலவு தொகையையும் கட்டுமாறு பணித்தது. கல்வித் திணைக்களம் செல்வவதியின் பிரச்சினையைத் தீர்க்கும்வரை மிகுதிப்பணத்தைக் கொடுக்கக் கூடாது என்று கட்டளையிட்டது. அக் கடிதத்தை விக்னேஸ்வரமூர்த்தி நீதிபதியிடம் கொடுத்த போதும் அது ஏற்றுக்கொள்ளவில்லை.

விக்னேஸ்வரமூர்த்தி கவலையுடன் சுவாமியாரிடம் வந்தார். அவர் அன்று போல இதுவரை கலங்கியதில்லை.

“மகனே, அளவுக்கதிகமாக ஏன் கலங்குகிறாய்? உண்மை ஒருபோதும் மறைவதில்லை என்று நீ கற்கவில்லையா......? அனுபவத்தில் உணரவில்லையா...? சர்வவல்லமை பொருந்திய நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி உனக்குள்ளேயே வாழ்ந்துகொண்டிருக்கிறார். அப்படியிருக்க நீ ஏன் கலங்குகின்றாய்? நல்லவனாக வாழ்ந்து சாதனைகள் புரியும் நீ, தீயவனைப்பற்றி நினைக்க என்ன உள்ளது? தீயவன் ஒருபோதும் எதற்கும் அஞ்சமாட்டான்.

தீமைகள் தினமும் புரியாவிட்டால் அவனுக்கு நித்திரை வராது. கனகனும் மண்டலகேசனும் பாடசாலையின் பழைய மாணவர்கள்; அங்கு கற்பித்த ஆசிரியர்கள்; பெரும் பணக்காரர்கள். பாடசாலையோடு சம்பந்தப்படாத பலர் உனக்கு உதவி செய்யவில்லையா? அதைவிடக் காணிப் பணத்தையும் அதன் வட்டிப் பணத்தையும் நீ உனது பணத்தில் கட்டவில்லையா..? இப்பொழுது இரண்டு வருடங்களின் பின் நீதிமன்றச் செலவுப் பணத்தைக் கட்டுமாறு கனகன் நீதிமன்றத்திலிருந்து கட்டளை அனுப்பியுள்ளான். அதையும் கட்டிவிடு. நீ பணத்திற்காகக் கலங்கவில்லை என்று எனக்குத் தெரியும். நீதி பிழைத்துவிட்டதே என்றும், மக்கள் எவரும் உதவி செய்யமாட்டார்கள் என்றும் எண்ணிக் கலங்குகின்றாய் மகனே, நீ சரித்திர புருசன். உனது வரலாற்றை இன்னும் இரண்டாயிரம் வருடங்களுக்குப் பின்பும் மக்கள் படிப்பார்கள். நீ தீருக்குறளை ஆராய்ச்சி செய்தாய் தமில் உள்ளவரை திருக்குறள் வாழும். திருக்குறள் உள்ளவரை நீ வாழ்வாய். நீ அவதாரபுருசன். கடவுளான கிருஷ்னன் இராமாயணத்தில் இராமனாக வாழ்ந்து காட்டியது போல நீ திருக்குறளில் வாழ்ந்து காட்டியுள்ளாய். அதனால் செலவு தொகையையும் கட்டிவிடு. தீயவர்களைப் பற்றிப் பிற்காலத்திலும் மக்கள் பேசவேண்டும்.”

விக்னேஸ்வரமூர்த்தி சிலிர்த்துப்போனார்; “அன்பும் அடக்கமும், பொறுமையும், தீய செயல்களைச் செய்ய நாணமும் கொண்ட நீ தாமதியாது தீயவனின் பணத்தைக் கட்டிவிடு. அந்தப்பணம் அவனை அழிக்கும். சால்பு என்னும் தன்மைக்கு ஒரு கடல் என்று மதிக்கப்படுபவர்கள் உலகம் அழியும் ஊழிக்காலம் வந்தாலும் கலங்க

மாட்டார்கள் கெட்டவர்களுக்குத் துணை புரிவோரின் பரம்பரையும் பாதிக்கப்படும். கவலைப்படாதே'' என்றார் சுவாமியார்.

**989. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு ஆழி எனப்படு வார்.**

சான்றாண்மை என்னும் தன்மைக்குக் கடல் போன்றவர் எனப் புகழப்படுகின்றவர், உலகம் அழியும் ஊழிக்காலம் வந்தாலும், தன் நிலையில் இருந்து மாறமாட்டார்.

## பூமி தாங்காது

அதைக்கேள்விப்பட்ட தணிகாசலம் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டிற்கு வந்தார். ''நீதிமன்றச் செலவு காசைக் கட்டும்படி உங்களுக்குக் கனகன் கட்டளை அனுப்பியதாகக் கேள்விப்பட்டேன். கட்டளையைத் தற்போதைய அதிபரிடம் கொடுங்கள். அவர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தைக் கூட்டி அதிலிருந்து மீதிப்பணத்தைப் பெற்றுத்தரட்டும்''.

விக்னேஸ்வரமூர்த்தி சிரித்தார். பின்; ''நீ எத்தனை காலமாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் இருக்கிறாய். மக்கள் யார் பாடசாலைக்கு உதவினார்கள்........? நல்லவர்கள் சிலர்தான் தொடர்ந்து உதவிக்கொண்டு வந்துள்ளனர். காணிவாங்கித் தருவதாகச் சொன்ன சிவகுமரனைக் காணிக்குப் பணம் அனுப்பக்கூடாது என்று சொன்னவர்கள் தானே இவர்கள். அத்துடன் காணிக்காசையும் வட்டிக்காசையும் யார் தந்தார்கள்

என்று உனக்குத் தெரியும். அப்படியிருக்க நீதிமன்றச் செலவுத் தொகையையா தரப்போகிறார்கள். காணி வாங்கும் போதே இக்காணி தேவைதானா..? என்று சிலர் கேட்டனர்; காணி பள்ளம் என்றனர்; வெள்ளம் நிற்கும் என்றனர் பெறுமதியிலும் பார்க்கக் காசைக் கூடக்கொடுத்துவிட்டேன் என்றனர். இவர்களிடம் நான் கையேந்த விரும்பவில்லை. குறைசொல்வார்கள். குற்றம் காண்பார்கள்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''அதிபரிடம் சொல்லுங்கள்'' என்றார் தணிகாசலம்.

''தற்போதைய அதிபர் என்ற வகையில் சொல்லத்தான் வேண்டும். ஆனால் இந்த ஊரவர்களைப் பற்றி உனக்குத் தெரியாதா...? சொந்தம் இனம் பந்தம் என்று தான் பார்ப்பார்கள். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சங்கரலிங்கத்தின் மகன் சித்தியடையவில்லை. அவன் கெட்டிக்காரன். விடைத்தாள்களைத் திருத்தியதில் தான் தவறு ஏற்பட்டிருக்கிறது என்று நினைத்து நானே முன்னின்று பரீட்சைப் பகுதிக்குக் கடிதம் எழுதினேன். தவறுதலாகத் திருத்தப்பட்டது என்று பரீட்சைப்பகுதி அறிவித்தது. அதனால் அவன் சித்தியடைந்து தேசிய பாடசாலையில் கல்வி கற்கிறான். நான் கடிதம் எழுதாவிட்டால் என்ன நடந்திருக்கும்? அதன் பின் அவன் கனகனுடன் சேர்ந்து வழக்காடினான். கனகனை விட அவன் தான் தீவிரமாகவும் இருந்தான். ஊர் முழுக்க என்னைப்பற்றித் தவறாகச் சொல்லிக்கொண்டு திரிந்தான். அவன் சொன்னதைத்தான்

பெரும்பாலானவர்கள் நம்பினர். அதிபர் நடித்தார். அப்போது நான் அதிபர். இப்போது பாடசாலையில் நான் இல்லை. அத்துடன் அவர் தனது இனத்தவனைப் பகைக்கவிரும்பமாட்டார். மாணவர்கள் மத்தியிலும் சொல்லப்பயப்படுவார்'' அவர் சந்தர்ப்பவாதி. தனது காரியத்தை நிறைவேற்ற எந்தப் பாதகமான செயலையும் செய்வார் என்பது உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

''நல்லவர்கள் சிலர் இருப்பதால் தான் பூமியில் மழைபெய்கின்றது'' என்று சொல்வார்கள். உங்களைப்போன்ற சான்றோரின் சான்றாமை நிறைந்த நல்ல பண்புகள் குறைவுபடுமானால் இந்தப் பெரிய பூமிக்குக் கூடப்பாரந்தாங்க முடியாத நிலை ஏற்படும். கனகனும் அவனோடு சேர்ந்தவர்களும் கட்டாயம் கெட்டழிவார்கள்'' என்றார் தணிகாசலம்.

''நல்லவர்கள் பிறரைத் தூற்றக்கூடாது. செயல்கள் உயிருள்ளவை. அவை செய்தவனைக் கட்டாயம் சென்றடையும். அதற்கு நாம் வழிகாட்டத் தேவையில்லை. நற்குணமுள்ளவன் தீயவற்றை நினைக்கக்கூட மாட்டான். தீயவனைப்பற்றிக் கதைப்பதால் என்ன பயன் உண்டாகப் போகிறது. நாம் சொல்வதை அவன் கேட்பானா...? ஒருவனிடம் இருக்கும் கெட்டகுணங்கள் தான் செயலாக வடிவெடுக்கும். சமுதாயத்தில் வியர்வை சிந்திக் கஷ்ரப்பட்டு உழைத்தல் வேண்டும்; நல்லவர்களாக வாழவேண்டும். நல்லவர்கள் மற்றவர்களுடைய நலனுக்காக அனைத்தையும் தியாகம் செய்வார்கள்.

அடுத்தவர்களுக்கு நன்மை செய்வதன் மூலம் நல்லவர்கள் இன்பமடைவார்கள். ஒருவனின் வாழ்க்கை அவனுடன் முடிந்துவிடுவதில்லை. வாழ்க்கை ஆயிரம் காலத்துப் பயிர் என்பார்கள். கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் இருக்கிறார், அதைத்தவிர வேறுகடவுள் இல்லை என்றும் சொல்கிறார்கள். அப்படியிருக்க மனிதன் ஏன் துன்பப்பட வேண்டும். ஆசை, பொறாமை, ஆணவம் இவை மூன்றினாலும் தான் மனிதன் துன்பப்படுகின்றான். இவற்றை நீக்கினால் அவன் கடவுள்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

"சரி சரி காசைக்கட்டுங்கோ....?'' என்று சிரித்தார் தணிகாசலம்.

**990. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம்தான்**
**தாங்காது மன்னோ பொறை.**

சான்றோரிடத்துச் சான்றாண்மைப் பண்பு குறையுமானால், இந்தப் பெரிய பூமியும் தன் பாரத்தைத் தாங்க முடியாமல் போய்விடும்.

## எளிதாகப்பெறலாம்

ஜெயபாலனும் சிவசக்தியும் ரகுவரனும் தணிகாசலத்தின் வீட்டிற்கு வந்தனர்.

"தணியண்ணை, மச்சான் புதன் கிழமை போகப்போகிறார். அதற்கு முன்பு உங்களை ஒருதரம் சந்திக்க விரும்பினார். அதுதான்...'' என்றான் ஜெயபாலன்.

தணிகாசலம் சிரித்தார் “உங்களின் பெரும் உதவியால் பெருந்தொண்டொன்றைத் தொடங்கியுள்ளோம். இந்த ஊரவராக நீங்கள் இல்லாவிட்டாலும் இலக்கியப் பேரவைக்குக் கட்டிடம் ஒன்று கட்டித்தந்துள்ளீர்கள். பெற்றோரை இழந்த பிள்ளைகளின் காப்பகத்திற்குப் பெருந்தொகையாகப் பணம் தந்துள்ளீர்கள். உங்களது நல்ல மனத்திற்கு நீங்கள் நன்றாக இருப்பீர்கள்” என்றார் தணிகாசலம்.

“இது என்ன பெரிய உதவி? நான் இந்த ஊரவன் இல்லாவிட்டாலும் இந்த நாட்டவன். எனது சகோதரி இந்த ஊரவரைத்தான் திருமணஞ் செய்துள்ளாள். அந்த வகையில் நான் இந்த ஊரவனாகிவிட்டேன். இந்த உலகம் தான் நரகம். இந்த நரகத்தில் வாழும் மக்களுக்கு இன்பத்தைக் கொடுப்பது மக்களின் கடமை. வசதியுள்ளவன் மேலும் மேலும் பணத்தைச் சேமித்துத் தன்னை வசதியுள்ளவனாக்குவதை விட்டுவிட்டுச் சேவை செய்தல் வேண்டும். யாரோ கனகனாம் முன்பு மத்திய மகாவித்தியாலயத்தில் அதிபராக இருந்தவனாம். அப்பொழுது கணபதி மத்தியமகா வித்தியாலயம் மாட்டுக் கொட்டிலாக இருந்ததாம். அவன் விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவுக்குத் தீராத தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறானாம். அங்கை படித்து அங்கை அதிபராகஇருந்தவன் காணிக்கு வட்டிக்காசும் நீதிமன்றச் செலவுக்காசும் கேட்கிறானாம். அவனை நான் ஒருமுறை பார்க்க வேண்டும். இவங்களெல்லாம் மனிதர்கள் என்று சொல்லி வேட்டி உடுத்துக்கொண்டு திரியுறாங்கள்.

எல்லோரையும் மதித்து, அவர்களுடன் மிக மிக எளிமையாகப் பழகி, தன்னை அவர்களுக்காக அர்ப்பணித்துச் செயலாற்றி வரும் பண்புள்ள ஒரு மனிதனை நீதிமன்றத்திற்கு அழைப்பதனால்.... எனக்கு வெட்கமாக இருக்கு..... இப்படியானவர்கள் இங்கு வாழ்கிறார்களா...? நான் அவரது வீட்டிற்குச் சென்று நீதிமன்றச் செலவுத் தொகையைக் கட்டுவதாக கூறினேன். அவர் மறுத்துவிட்டார்'' ரகுவரன் சொல்லிக் கொண்டிருந்தான்.

தணிகாசலம் அந்தப் பணத்தைத் தான் கட்டுவதாகச் சொன்னார் ''தணி இந்த ஊரவை எம்மில் இடங்கண்டுவிட்டார்கள். நாம் ஒருவரிடமும் பணம் கேளாது வெளிநாடுகளிலிருந்து வருபவர்களின் நன்கொடைகளை வாங்கிப் பாடசாலையைச் சிறந்த முறையில் நடத்திக்காண்பித்தமையால் இப்பொழுது அவர்கள் எதற்கும் பணம் தரவிரும்புகிறார்கள் இல்லை. பேராசிரியர் சூரியகுமாரன் ஒரு தொகைப்பணத்தை நிரந்தர வைப்பிலிட்டதால் வருடா வருடம் பரிசளிப்பு விழாவைக் கொண்டாடுகின்றோம். இதே போலத்தான் எல்லா நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. அது தவறு என்று எனக்கு இப்போதுதான் தெரிகின்றது. இந்த நீதிமன்றச் செலவுப் பணத்தை தற்போதைய அதிபர் தான் தரவேண்டும் அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தரவேண்டும். நீ ஏன் தருவான்? நீ எத்தனை முறை பாடசாலைக்குப் பணம் தந்திருப்பாய். நீதரவேண்டாம். நான் அதிபருக்கு சொல்லியனுப்பியுள்ளேன். அவர் மாணவர்களின் கூட்டத்தில் அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் சொல்லட்டும். ஆனால் அவர் பெரும்பாலும் சொல்லமாட்டார். சொன்னாலும் யாரும்

தரமாட்டார்கள். அதனால் நானே பணத்தைக் கட்டுகின்றேன்'' விக்னேஸ்வரமூர்த்தி சொன்னது அவரது காதில் ஒலித்தது.

''அவர் மிகவும் பண்பானவர். எல்லோரையும் மதிப்பவர். கொள்கையுடன் வாழ்பவர். அதனால் அவர் வாங்கமாட்டார'' என்றார் தணிகாசலம்.

''நானும் கேட்டுப் பார்த்தேன். அவர் மறுத்துவிட்டார். 'பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட ஒருவரிடம் தான் பணம் வாங்குவேன்' என்று சொல்கிறார். இங்குள்ளவர்கள் கோயிலையே கொள்ளையடிக்கிறவர்கள். அப்படியானவர்களா அவருக்குப் பணம் கொடுக்கப் போகிறார்கள்?'' என்றான் ஜெயபாலன்.

''விக்னேஸ்வரமூர்த்தி ஐயா எவ்வளவு இனிமையானவர். அவருடன் கதைத்துக் கொண்டிருந்தால் பொழுது போவது தெரியாது. எவ்வளவு பெரியமனிதன் இந்த உலகில் உள்ளவர்களுடன் மிகவும் எளிமையாக்கப் பழகுகின்றார்'' என்றாள் சிவசக்தி.

''நான்கு நாட்கள் பழகிய உங்களுக்கே அவரைப்பற்றித் தெரிகின்றது. இங்கே பிறந்து, வளர்ந்தவர்களுக்கு அவரைப்பற்றித் தெரியவில்லை என்பதை நினைக்கக் கவலையாக உள்ளது'' என்றார் தணிகாசலம்.

---

**991. எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும்**
**பண்புஉடைமை என்னும் வழக்கு.**

---

எல்லோரிடத்திலும் மிகவும் எளிமையுடன் பழகினால் பண்புடையவர் என்னும் உயர்ந்த சிறப்பினை எளிதாகப் பெறலாம் என்று கூறுவார்.

## சிறந்த வழிகள்

‘‘முதலில் நல்ல பண்புகள் எவையெனத் தெரியவேண்டும். பின்பு அதன் முக்கியத்துவத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். அதன் பின் அத்தகைய நற்பண்புகளைக் கைக்கொள்வதால் என்னென்ன நன்மைகள் வரும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பின்புதான் நற்குணங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். எப்பொழுது நல்ல பண்புகள் மனதைச் சென்றடைகின்றதோ, அப்பொழுதில் இருந்து அவன் நல்லவனாகிவிடுகிறான். கனகன் படித்துப் பட்டம் பெற்று ஆசிரியராகி, அதிபராக இருந்தாலும் அவர் கற்ற கல்வி நற்பண்புகளை உருவாக்கவில்லை அத்துடன் சமய தத்துவங்களோ, சங்கங்களோ ஆலோசனைகளோ, இல்லைத் தண்டனைகளோ ஒருவனது மனதில் நற்பண்புகளை உருவாக்கமாட்டாது. அது உருவாக வேண்டுமானால் அன்புடையவராக இருத்தல் வேண்டும் நல்ல குடியில் பிறந்து இருத்தல் வேண்டும். நல்ல பண்புகள் வெளித்தோற்றத்தோடு சம்பந்தப்பட்ட விடயமல்ல. அது மனதுடன் சம்பந்தப்பட்டது் உயிருடன் கலந்திருப்பது் குடிப்பிறப்பால் வருவது. மனதில் ஆசையில்லாதவன் தான் நல்ல பண்புகளை உடையவனாக இருப்பான். நான் அறிந்தவரை விக்னேஸ்வரமூர்த்திப ண்புள்ளவராக வாழ்வதற்கு வேண்டிய நடத்தைக் கோட்பாடுகளைப் பின்பற்றுகிறார்’’ என்றான் ரகுவரன்.

‘‘பண்பானவன், பண்புடன் நடந்து கொள்வான். பண்பற்றவர்களைப் பற்றிப் பேசினாலே எமது பண்புகள் குறைவடைந்துவிடுமென்று கூறுவார் விக்னேஸ்வரமூர்த்தி. அத்துடன் பலாக்காரத்தால் அல்லாமல், ஆன்மீக பலத்தால் மட்டுமே ஒருவனை வெற்றி கொள்ளவேண்டும் என்று நினைப்பவர். அன்பு, அகிம்சை, கருணை ஆகியவற்றினூடாகத்தான் எவரையும் திருத்த வேண்டுமென்று நினைப்பவர்’’ என்று தணிகாசலம் கூறிக்கொண்டிருக்கும் போது ஜெயபாலன் குறுக்கிட்டுச் சொன்னான் ‘‘அன்பு, அகிம்சை, கருணை இதெல்லாம் தெரிந்தவர்களுக்குத்தான் நாம் எதையும் சொல்லலாம். தெரியாதவனுக்கு எதைச் சொல்வது, சொன்னாலும் அவனுக்கு அது விளங்குமா....?’’ என்றான்.

‘‘எதற்கும் காலம் பதில் சொல்லியே தீரும். தேவையில்லாத விடயங்களைப் பற்றி நாம் ஏன் பேசிக்கொண்டிருத்தல் வேண்டும். விக்னேஸ்வரமூர்த்தி பண்பானவர். அதனால் தீயவற்றைச் சிந்திக்கக் கூடமாட்டார். அன்று அவர் பத்திரிகையில் தகப்பனை இழந்த பிள்ளையொன்றின் பேட்டியை வாசித்துவிட்டு, மறுநாள் சோற்றுடன் அங்கு செல்லவில்லையா...? அவர் அமைதியுடனும் ஆண்மையுடனும் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுபவர். அத்துடன் தீயவர்களுக்குக் கூடத் தீமை செய்யாதவர். ஆண்டவனுக்குக் கணக்குக் காட்ட வேண்டும் என்று நினைக்காது தர்மசிந்தனையுடன் சேவை செய்பவர். அவரை எத்தனை பேர் அவமதிக்க நினைத்தனர். ஆனால் நினைத்தவர்கள் தான்

அவமதிக்கப்பட்டனர். சிவசுந்தரமூர்த்தி அவருக்கு எவ்வளவு துன்பங்களைச் செய்தார். ஆனால் அவர் அதைப்பற்றி நினைக்காது, அவனுக்குப் பல்வேறுவிதமான உதவிகளைச் செய்து வந்தார். அவரது மகன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாததால் தான் தரம் ஆறில் சேர்க்க மறுத்தார். ஆனால் அவன் அலுவலகத்தில் நிதி மோசடி செய்தபோது அவனது மேலாளரான ஞானப்பிரகாசத்தைச் சந்தித்து அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு கேட்டார். தனபாலனும் கிருஷ்னனும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்போது அவர்களுக்காக எவரும் காவல் நிலையத்திற்குச் செல்லவில்லை. ஆனால் விக்னேஸ்வரமூர்த்தி சென்றார். அது ஊரில் உள்ள எவருக்கும் பிடிக்கவில்லை. பகிரங்கமாகக்கூடப் பலர் கண்டித்தனர். அதற்கெல்லாம் பயபப்படாது அவர் காவல் நிலையத்திற்குச் சென்றவர்'' கலங்கினார் தணிகாசலம்.

''கனகன் கோடேறிப் பழக்கப்பட்டவன். சின்னதொரு பிரச்சினைக்கும் அவன் கோடேறிவிடுவான். அவனைத் திருத்தவேண்டியவர்களும் அவனுக்காகவே கதைப்பார்கள். மணியம் வாத்தியார் கூட பாடசாலைக்காணிப் பிரச்சினையில் கனகனின் பக்கம் தான் கதைத்தவர். பின் விக்னேஸ்வரமூர்த்திக்கு ஆலோசனை கூறியவர். விக்னேஸ்வரமூர்த்தியார் ஆலோசனைகளைக் கூறினாலும் அதைப் புன்சிரிப்புடன் கேட்பார். ஆனால் அவருக்கு எல்லாந்தெரியும். அத்துடன் நான் காவல்நிலையத்தில் இருந்தபோது வந்து

பார்த்த ஒரேயொரு மனிதன் அவர் தான்'' என்று கலங்கினார் தனபாலன்.

**992. அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும் பண்புஉடைமை என்னும் வழக்கு.**

அன்புடையவராக இருத்தல், நல்ல குடியில் பிறத்தல் ஆகிய இரண்டும் பண்புடையவர்களாக வாழ்வதற்குச் சிறந்த வழிகள் ஆகும்.

மக்கள்

விக்னேஸ்வரமூர்த்தி அன்று காவல்துறை அலுவலகத்திற்கு வந்ததை நினைத்துப் பார்த்தான் தனபாலன். அவன் சில நாட்களுக்கு முன்பு பூபாலசிங்கத்தின் பலசரக்குக் கடையை உடைத்துச் சில பொருட்களைத் திருடியிருந்தான். அப்பொருட்களைக் கிருஷ்னனுடன் சேர்ந்து விற்க முயற்சித்தான். யாரும் அவனிடம் அப்பொருட்களை வாங்கவில்லை. அதனால் கிருஷ்னன் தான் வேலை செய்யும் சிவசுந்தரமூர்த்தியிடம் கூட்டிச் சென்றான்.

''நீங்கள் இரண்டு பேரும் பூபாலசிங்கத்தின் கடையை உடைத்துத் திருடியுள்ளீர்கள்'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''இல்லை என்று கிருஷ்னன் கூறும்போது சிவசுந்தரமூர்த்தி குறுக்கிட்டுச் சொன்னார்; ''உங்களைப் பற்றி எனக்குத் தெரியும்... நீ எனது வீட்டிலேயே திருடுபவன்... சரி திருடா

விட்டால் இவ்வளவு பொருட்களும் உனக்கு எப்படி வந்தது என்று சொல்''

இருவரும் எதுவும் பேசவில்லை. அதனால் சிவசுந்தரமூர்த்தி சொன்னார்; ''கொண்டுவந்து விட்டீர்கள். தந்திட்டுப் போங்கோ. ஊர் முழுவதும் நீங்கள் இருவரும் தான் பூபாலசிங்கத்தின் கடையை உடைத்துத் திருடியதாகக் கதைக்குது. தற்செயலாகப் பிடிபட்டால் என்னைக் காட்டிக்கொடுத்திடாதைங்கோ...''

''நாங்கள் காட்டிக்கொடுப்பதானால் முந்தியே காட்டிக் கொடுத்திருப்பம். நீங்கள் நாங்கள் களவெடுக்கும் பொருட்களை எத்தனை தரம் வாங்கியிருப்பீர்கள். ஒவ்வொரு முறையும் நாங்கள் காட்டிக் கொடுத்திருந்தால் நீங்கள் நூறு தரம் சிறைக்குப் போயிருக்க வேண்டும். அப்படி நடந்ததா....?'' என்று கேட்டான் கிருஷ்னன்.

''சரி.. சரி.. வைச்சிட்டுப் போங்கோ..'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''மனைவிக்குச் சுகமில்லை. பலரிடம் காசு கேட்டுப் பார்த்தேன். ஒருத்தரும் தரவில்லை. அதனால் தான் திருடினேன். காசைத் தாருங்கள்'' என்றான் தனபாலன்.

''இப்ப என்னிடம் பணம் இல்லை. நாளைக்குவா...'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“மருந்து எடுக்க வேண்டும் ஐயா” என்று தனபாலன் கூறும்போது சிவசுந்தரமூர்த்தி குறுக்கிட்டுச் சொன்னார்; “அரசாங்க ஆஸ்பத்திரியிலை தான் நான் மருந்து எடுக்கிறனான். நீயும் அங்கை போய் எடு. இந்தா இதைச் செலவுக்கு வைத்துக்கொள்” என்று நூறு ரூபாத் தாள் ஒன்றை நீட்டினார்.

காசைப் பெற்றுக்கொண்டு வெளியே இருவரும் வந்தனர்; “பாவம் பூபாலசிங்கம். நாங்கள் அவரை நட்டப்படுத்தியது தான் மிச்சம். நாம் திருடிய பொருட்கள் இரண்டாயிரம் ரூபாவுக்கு காணும். ஐம்பது நூறாக ஐநூறு அறுநூறு ரூபாவுக்கு மேல் சிவசுந்தரமூர்த்தியிடம் வாங்க முடியாது” பெருமூச்சு விட்டான் தனபாலன்.

இருவரும் நேராகச் சாராயம் குடிக்கச் சென்றனர். சாராயம் விற்கும் இடத்திற்கு வந்த காவல்துறையினர் அனுமதி பெறாது சாராயம் விற்பதாகக் கூறி சாராயம் விற்பவனையும் குடித்தவர்களையும் கைது செய்து நீதி மன்றத்தில் நிறுத்தினர். சாராயம் விற்பவன் “தான் செய்தது குற்றம்” என்று சொல்லிக் குற்றப் பணத்தைக் கட்டினான்.

கிருஷ்னனும் தனபாலனும் முன்பும் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டதால் ஆயிரம் ரூபா பிணையில் செல்லுமாறு நீதிபதி கட்டளையிட்டார். இருவரையும் பணங்கட்டிப் பிணையிலெடுக்க ஊரில் உள்ள எவரும் முன்வரவில்லை. மூன்று மாதங்கள் கழிந்தும் அவர்கள் சிறையில் இருந்தனர்.

தனபாலன் குடித்தாலும் வீட்டிற்கான தேவைகளைக் கவனிப்பதால், தனபாலனின் மனைவி விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டிற்குச் சென்று தனபாலனைப் பிணையெடுத்துவிடுமாறு அழுதாள். அதனால் விக்னேஸ்வரமூர்த்தி நீதிமன்றத்திற்குச் சென்று இருவருக்கும் ஆயிரம் ரூபாப்படி இரண்டாயிரம் ரூபா செலுத்தி அவர்களைப் பிணையில் எடுத்தார்.

அவரைக் கண்டதும் நீதிமன்ற ஊழியர்கள் எழுந்து நின்று வரவேற்றனர். நீதிமன்றத் தலைமைக் காவலர் சொன்னார்; ‘‘மூன்று மாத காலமாக உங்களை மனிதரென நினைத்துப் பிணையெடுக்க யாரும் வரவில்லை. இன்று ஓர் உயர்ந்த மனிதர் வந்துள்ளார். அவர் இப்படியான இடத்திற்கு வந்தால் அந்த இடம் தூய்மையடையும். அவர் வந்ததை நினைத்தாவது திருந்துங்கள்’’

தனபாலனது கண்கள் கலங்கின. அவன் விக்னேஸ்வரமூர்த்தியின் கால்களைப் பற்றிப் பிடித்த வண்ணம் அழுதான்.

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசாமல் சென்றுவிட்டார்; ‘‘உருவத்தில் எல்லோரும் ஒரேமாதிரியானவர்கள் தான். ஆனால் பண்பில் தான் அவர்கள் வேறுபடுகின்றனர். விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவும் மனிதன் தான். சிவசுந்தரமூர்த்தியும் மனிதன் தான். ஆனால் இரண்டு பேருக்கும் பண்பில் எவ்வளவு வித்தியாசம். ‘‘விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவை மாதிரி பண்பில் உயர்ந்தவர்கள் யாருமில்லை. அவர்தான் மனிதன்’’ என்றான்

கிருஷ்னன். அச்சம்பவமும் கிருஷ்னன் சொன்ன வார்த்தைகளும் தனபாலனின் காதில் ஒலித்தது.

"உடம்பால் ஒத்திருப்பதால் எல்லோரும் மக்கள் எனக் கணிக்கப்படமாட்டார்கள். நல்ல பண்புடையவர்கள் தான் "மக்கள்" என்று போற்றப்படுவார்கள்" சுவாமியார் என்றோ ஒரு நாள் அருளுரையில் கூறியது தனபாலனது காதில் ஒலித்தது.

**993. உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால்; வெறுத்தக்க
பண்புஒத்தல் ஒப்பதாம் ஒட்பு.**

உடம்பால் ஒத்திருப்பவர்கள் எல்லோரும் மக்கள் அல்ல, பொருந்தத்தக்க நல்ல பண்புகளால் ஒத்திருப்போரே மக்கள் ஆவர்.

### உலகம் போற்றும் பண்பு.

பழைய சம்பவமொன்றைநினைத்துப் பார்த்தார் தணிகாசலம். மணியம் வாத்தியார் விக்னேஸ்வரமூர்த்தியுடன் வெளியூரில் கற்பித்தவர். அப்பாடசாலையின் அதிபராக மணியம்கடமையாற்றியவர். அப்போது விக்னேஸ்வரமூர்த்தி அப்பாடசாலையின் ஆசிரியர். கணபதி மத்தியமகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்த துரைரத்தினம் இளைப்பாறிய போது மணியம் வாத்தியார் கணபதி மத்திய மகாவித்தியாலயத்திற்கு அதிபராகவேண்டும் என்று விரும்பினார். அவருக்கு ஆதரவாக சிவசுந்தரமூர்த்திசெயற்பட்டார். அப்போது

கல்விப்பணிப்பாளராக இருந்த சுந்தரலிங்கத்திடம் சிவசுந்தரமூர்த்தியும் வேறும் சிலரும் சென்றனர்.

"ஐயா, மணியம் வாத்தியார் கந்த முருகனார் வித்தியாலயத்தில் அதிபராக இருந்து நல்ல சேவையாற்றுகிறார். கணபதி மத்திய மகா வித்தியாலய அதிபர் துரைரத்தினம் இம் மாத முடிவுடன் ஓய்வு பெறுகிறார். அவரின் இடத்திற்கு மணியம் ஆசிரிரை இடமாற்றஞ் செய்யுங்கள். அவர் கணபதி மத்தியமகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்; சமூகத்தொண்டன். நான் கச்சேரியில் உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கிறேன். இவர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தலைவர் வேலாயுதபிள்ளை. இவர் பழைய மாணவர் சங்கத் தலைவர். நாம் இருநூறு பெற்றோரிடம் கையொப்பம் வாங்கி வந்துள்ளோம். நான் தான் அவ்வூருக்குத் தலைமை தாங்குபவன். நான் சொன்னால் மக்கள் சம்மதிப்பார்கள். எந்தப் பிரச்சினையும் வராது. கல்வி அமைச்சின் செயலாளர் எனது நெருங்கிய நண்பர். வேண்டுமானால் அவருடனும் கதைக்க நான் தயாராக உள்ளேன்". என்றார் சிவசுந்தரமூர்த்தி.

அமைதியாகச் சிவசுந்தரமூர்த்தி சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த சுந்தரலிங்கம் "ஒரு பாடசாலைக்கு உதவிகள் புரிவதுதான் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் பழைய மாணவர்களினதும், நலன் விரும்பிகளினதும் கடமை. நான் சென்ற வாரம் பாடசாலைக்கு வந்தேன். பிரதான வீதிக்கு அருகில் இருக்கும் ஒழுங்கைக்குத் துவிச்சக்கரவண்டியில் செல்வோரும், நடந்து செல்வோரும் பாடசாலைக்குள்ளால் செல்கின்றனர்.

பாடசாலை வேலியை அடைத்து அச்சறுக்கையாக வைக்க முடியாத நீங்கள், அதிபர் நியமனத்தில் ஏன் அக்கறைப்படுகிறீர்கள்?. உங்களுக்கு மணியம் வாத்தியார் ஏதாவது வாங்கித்தந்தாரா? பாடசாலைக்கு எல்லா உதவிகளையும் அரசாங்கம் செய்யாது. நீங்கள் தான் செய்யவேண்டும். நான்கு பூவரசங்கதியால் போட்டு வேலியடைக்கடைக்க முடியாத நீங்கள் இங்கு ஏன் வந்தீர்கள்?. போய் முதலில் வேலியை அடையுங்கள். பாடசாலையை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு எம்மிடமுள்ளது. அதை நாம் சரிவரச் செய்வோம். அது வைத்திலிங்கத்தின் பாடசாலை. அவர் அதைக்கட்டப்பட்டபாடு உங்களுக்குத் தெரியாது. அப்பாடசாலையை எனது பாடசாலையாகவே நான் கருதுகிறேன். அதற்கோர் நல்ல அதிபரை நான் நியமிப்பேன். அறத்தையும் பாடசாலையின் நலத்தையும் பெரிதும் விரும்பி, பலருக்கும் பயன்படும்படி கடமை புரியும் உத்தமனான ஒருவரை உங்கள் பாடசாலைக்கு அதிபராக நியமித்துள்ளேன். நீங்கள் போங்கள். அவர் நாளைக்குப் பாடசாலைக்கு வருவார். அவரில் குற்றம் இருந்தால் பின்பு வந்து சொல்லுங்கள். அவர் மிகவும் நல்லவர். அவர் சொல்லாமலே, மக்கள் எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு பாடசாலை வேலைகளைச் செய்வார்கள்'' என்றார் சுந்தரலிங்கம்.

''யார் அவர்...? அவரின் பெயரைச் சொல்லுங்கள்...'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“நாளைக் காலையில் பாடசாலைக்குச் செல்லுங்கள், அவர் யார் என்று தெரியும்”

வெளியே வந்த தணிகாசலத்திற்குச் சுந்தரலிங்கத்தை நினைக்கக் கோபம் வந்தது “நான் நாளைக்குத் தொலைபேசியில் கல்வியமைச்சின் செயலாளருடன் கதைக்கிறேன். சுந்தரலிங்கத்தார் ஆளைத்தெரியாது மோதுகிறார். என்ன செய்கிறேன் பாருங்கள்?” என்று கத்தினார் சிவசுந்தரமூர்த்தி.

மறுநாள் தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் பாடசாலைக்குச் சென்றபோது விக்னேஸ்வரமூர்த்தி அதிபரின் நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

“நான் காவல் நிலையத்தில் இருந்த போது அங்கு வந்து என்னைப் பார்த்த ஒரேயொரு மனிதர் விக்னேஸ்வரமூர்த்தி தான். என்ரை மனைவி பிள்ளைகள் கூட வரவில்லை. எனது தந்தைக்குக் காவல் நிலையத்திற்கு வரவெட்கமாம். அறத்தையும் நலத்தையும் பெரிதும் விரும்பிப் பலருக்கும் பயன்தரும்படி வாழும் தெய்வத்தை எல்லோரும் போற்றும்போது கனகன் அவரை நீதி மன்றத்திற்கு அழைக்கின்றான். அவனைக் கொல்லவேண்டும். தணிகாசலமண்ணை அவரை நீதிமன்றத்திற்கு விடாதைங்கோ. காசை வாங்கிக் கொண்டுபோய்க் கட்டுங்கோ” தனபாலன் கத்தினான்.

"என்ன தணி யோசிக்கின்றாய்" என்று கேட்டவாறு தணிகாசலத்தின் தோளில் கைவைத்தார் விக்னேஸ்வரமூர்த்தி.

**994. நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்
பண்புபா ராட்டும் உலகு.**

நீதியையும் நன்மையையும் பெரிதும் விரும்பிப் பிறருக்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்புகளை உலகத்தவா் போற்றிக் கொண்டாடுவா்.

பண்புடையோர்.

கெங்காதரனும் கஜேந்திரனும் சனசமூகநிலையத்தின் அருகில் இருந்த வாகைமர நிழலில் அமா்ந்திருந்தனா். அன்று ஞாயிற்றுக்கிழமை வர்த்தக நிலையங்கள் யாவும் அன்று பூட்டப்பட்டிருந்ததால் கெங்காதரனுக்கு அன்று பொழுது போகவில்லை. அவன் தற்போது கள்ளுக்குடிப்பதில்லை சூதாடுவதில்லை வசந்தினியிடம் செல்வதில்லை, காலை எட்டுமணிக்கு நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதி ஆலயத்திற்கு வந்து மகாகணபதியை வணங்கிவிட்டு வேலைக்குச் செல்வான். மாலை ஆறு மணிக்கு வீட்டுக்குத் திரும்புவான். அந்த நேரத்தில் அவனுக்குப் பழைய நினைவுகள் ஏதுவும் வருவதில்லை. முன்பென்றால் கள்ளுக் குடிக்காமல் அவனால் இருக்க முடியாது. காலையில் எழுந்தவுடன் மதுபானவகைகளை விற்கும் ரஞ்சனிடம் சென்று மதுஅருந்தாவிட்டால்

அவனுக்குக் கைகாலெல்லாம் நடுங்கும். மதுவருந்தினால் வசந்தினியின் எண்ணம் வரும். அவளின் எண்ணம் வரும்போது அவன் அவளிடம் இருந்து பெற்ற அவளது பொருட்களைப் பையில் இருந்து எடுத்துப் பார்ப்பான். வசந்தினிக்கு நீண்ட கூந்தல் உண்டு. ஒரு நாள் அவளது கூந்தல் முடியொன்று அவனது சட்டையில் இருந்தது. அதை எடுத்துக் கவனமாக வைத்திருந்தான். அவளது நினைவு வரும்போது அம்முடியை எடுத்துப் பார்ப்பான். அதைத் தொடும்போது அவளை அணைத்த சுகம் அவனுக்குக் கிடைக்கும். அதன் பின் சூதாடும் நண்பர்கள் அவனைத்தேடி வருவார்கள். மதுபானத்தைப் போத்தலில் வாங்கி வைத்துவிட்டுச் சூதாடத் தொடங்கினால் பொழுது போவது தெரியாது. அப்படிக் காலத்தைக் கடத்திய அவனுக்கு அவையெல்லாவற்றையும் விட்டதால் பொழுது போகமறுத்தது. அன்று யசோதினியும் எங்கோ சென்றுவிட்டாள். அதனால் அவன் சனசமூக நிலையத்திற்கு வந்தான். அங்கு வேலாயுதபிள்ளை பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தார். கஜேந்திரன் வாகை மரத்தின் கீழ் அமர்ந்திருந்தான். குளிர்மையான காற்று அவனது உடலை மெல்ல வருடியது.

பத்திரிகை வாசித்து முடித்ததும் பத்திரிகையை மேசையில் வைத்துவிட்டுஎழுந்து வந்த வேலாயுதபிள்ளை கெங்காதரனைப் பார்த்துச் சிரித்தார். அந்தச் சிரிப்பில் ஒரு கேலி இருப்பதாகக் கெங்காதரன் உணர்ந்தான்; “இப்போ வாகை மரத்தின் கீழ் இருக்க உனக்கு நேரம் கிடைக்கிறது” என்று மீண்டும் சிரித்தார் வேலாயுதபிள்ளை் “பழைய கெட்ட

பழக்கங்களையெல்லாம் விட்டுவிட்டாயா...? வசந்தினியின் நினைவு உனக்கு வருவதில்லையா...? சிவந்த நிறமுடைய அவளை யாரும் எளிதில் மறக்கமுடியாது'' சிரித்தார் வேலாயுதபிள்ளை.

அவர் அதைச் சாதாரணமாகச் சொல்லிச் சிரித்தபோதும் கெங்காதரனுக்குக் கோபம் வந்தது. வேலாயுதபிள்ளை விளையாட்டாகச் சொன்னதைக் கேட்ட கஜேந்திரன் ''வசந்தினியின் நினைவு கெங்காதரனுக்கு வராமலா போகும். பத்து வருடத்தொடர்பு. அதைவிட, யசோதினி அக்காவுடன் வாழ்ந்ததை விட ரசித்துச் சுவைத்து வசந்தினியுடன் வாழ்ந்தவர்'' என்று சிரித்தான் கஜேந்திரன். அவளது நினைவில் கெங்காதரன் கள்ளைக் குடித்துவிட்டுப் புலம்பியது கஜேந்திரனுக்கு ஞாபகத்திற்கு வந்தது.

''மலர்கள் மலரும் கருமுடியாளின்
தோளில் சாய்ந்தால் நினைக்குமின்பம்
நினைத்ததும் பெறுவேன் நீங்காஇன்ப
நிழலில் வாழ்வேன்''

கெங்காதரனின் முகம் கறுத்தது. கண்கள் சிவந்தன. அவனது மனதில் தாங்கமுடியாத வேதனை சுரந்து பிரண்டது. அவன் எழுந்தான். அதன் பின்பு தான் கூறியது அவனுக்குப் பிடிக்கவில்லையென்று கஜேந்திரனுக்குத் தெரிந்தது. அவன் கவலையுடன் சொன்னான் ''வேலாயுதண்ணை, நீங்கள் விளையாட்டாகத்தான் சொன்னீர்கள். நானும் விளையாட்டாகத்தான் சொன்னேன். ஆனால் அது கெங்காதரனுக்குப் பிடிக்கவில்லைப் போலத்

தெரிகிறது. இனிமேல் விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவைப்போல விளையாட்டாகக் கூட எதுவும் கதைக்கக் கூடாது'' என்றான் கஜேந்திரன்.

"அவரை மாதிரி நாம் வாழமுடியுமே......? கனகன் துவிச்சக்கரவண்டியில் செல்லும்போது வாகனம் ஒன்று மோதிவிட்டதாம். பெருங்காயம் எதுவும் இல்லை. இருந்தாலும் விக்னேஸ்வரமூர்த்தி கனகனை வீட்டைபோய்ப் பார்த்தவராம்'' என்றார் வேலாயுதபிள்ளை.

விக்னேஸ்வரமூர்த்தி ஐயா, பிறரின் இயல்பை அறிந்து நடக்கும் பண்புள்ளவர். அவர் பகைவர்களையும் மதித்துத்தான் நடப்பார். பகைவர்களோடு கூடப்பண்பு தவறிப் பேசமாட்டார். கனகன் முன்பும் ஒருமுறை விபத்துக்குள்ளாகி இரண்டு மூன்று லட்சம் செலவு செய்தவன். தீயவழியில் தேடுகின்ற சொத்துக்கள் இப்படித்தான் அழியும். ஒவ்வொருவரும் செய்யும் தீமைகளை அனுபவிக்கத்தானே வேண்டும். கள்ளக்காணியைப் பிடித்தவர்களும் பொதுச் சொத்துக்களைச் சூறையாடியவர்களும் இப்ப என்ன பாடுபடீனை என்று நாங்கள் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறம். ஒன்று விசர்; ஒன்று கிறுக்கு் ஒன்று ஊர் பேர் தெரியாதவனுடன் ஓடீற்றுது. பத்தைப் பெத்தென்ன பசிக்குக் கிள்ளிக் கொடுக்க ஆளில்லை. தீமை செய்பவர்கள் இப்படி வாழ்வதைப் பார்த்தும் யாரும் திருந்துகிறார்களில்லை'' என்றான் கஜேந்திரன்.

---

**995. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி; பகையுள்ளும்
பண்புஉள பாடு அறிவார் மாட்டு.**

---

விளையாட்டாகக் கூட ஒருவனை இகழ்ந்து பேசினால் அது அவனுக்குத் துன்பத்தைக் கொடுக்கும். பிறருடைய இயல்பை அறிந்து நடக்கும் பண்புள்ளவர்கள் பகைவரிடத்திலும் பண்பு தவறாது நடந்து கொள்வர்.

## அழியாததன் காரணம்.

சங்கரலிங்கம், தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்தான். அவனது கையில் ஒரு கடிதஉறை இருந்தது.

“வா இரு” என்றார் தணிகாசலம்.

சங்கரலிங்கம் தயங்கினான். அவனுக்கு நாற்காலியில் இருக்கத் தயக்கமாக இருந்தது. அத்துடன் தான் வந்த விடயத்தைக் கதைக்கப் பயமாகவும் இருந்தது.

“இரடாப்பா, நீ செய்தவற்றையெல்லாம் நான் மறந்துவிட்டேன். இந்தக் காலத்தில் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக உழைப்பவர்கள் மிகச் சிலரே. சமூகத்தின் நன்மைக்காக உழைப்பவர்களைக் கேலி செய்பவர்கள் தான் அதிகமானவர்கள். அதனால் தான் பேதங்கள், பகை, போட்டி, பொறாமை, கவலைகள் யாவும் உண்டாகின்றன. மக்கள் மிருகங்களிலும் கேவலமாக வாழ்கின்றமையால் தான் காட்டுமிராண்டிக் குணங்கள் மனித இதயங்களில் குடிகொள்கின்றன.

நான் மனிதப் பண்புகளுடன் வாழ்பவன். அதனால், எனது மனதுள் வேறுபாடுகள் எவையேனும் இல்லை. பகைவனுக்குக் கூட உதவி நல்கும் பண்பிருக்கு, நீ இருந்து வந்த விடயத்தைச் சொல்'' என்றார் தணிகாசலம்.

அவன் முன்பொருநாள் தணிகாசலத்திற்குக் கூறினான் ''விக்னேஸ்வரமூர்த்த்தியைப் பெரிய மனிதன் என்று நீங்களும், இங்குள்ள சிலரும் தலையில் தூக்கி வைத்து ஆடுகிறீர்கள். பாடசாலைக்கு விற்ற காணியை இன்னும் கூடுதலான விலைக்கு விற்றிருக்கலாம். அத்துடன் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்காமல் விட்டால் அவரை என்ன செய்வோம் தெரியுமா....? தரவேண்டிய காசுக்கு வட்டிக்காசும், நீதிமன்றச் செலவுப் பணமும் வாங்குவோம் கனக வாத்தியாரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்..? கோடு ஏறுவது அவருக்குத் தண்ணிபட்ட பாடு. எத்தனை வழக்குகளில் வென்றவர்'' தணிகாசலத்தின் காதுகளில் அவரது குரல் ஒலித்தது.

''விக்னேஸ்வரமூர்த்தி நல்லவர். பண்பானவர். எனது மகன் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாததால் அதிச்சியடைந்து, பரீட்சைப் பகுதிக்கு எழுதி வினாத்தாள்களை மீளப் பரிசீலனை செய்வித்தவர். அதனால்தான் அவன் தேசிய பாடசாலையில் சேர்ந்தான். இல்லாவிட்டால் ஊரிலுள்ள பாடசாலைகளில் தான் கற்கவேண்டி வந்திருக்கும்'' என்றான்.

“மீண்டும் ஏதோ ஒரு முக்கிய தேவைக்காக வந்திருக்கிறாய் போலத் தெரிகிறது. இல்லாவிட்டால் இப்படிச் சொல்ல மாட்டாய். கனகன் நீதிமன்றச் செலவு காசைக் கட்டும்படி கட்டளை அனுப்பியுள்ளான். அது உனக்குத் தெரியுமா....?”

அவன் எதுவும் பேசாமல் சிரித்தான்; “அன்பு, உதவும் பண்பு, இரக்கம் என்பன உள்ளவன் தான் மனிதன். இவையெல்லாம் உலகில் வாழும் சிலரிடமாவது பொருந்தியிருப்பதால் தான் உலகம் அழியாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அது இல்லையானால் மண்ணோடு மண்ணாக அழிந்திருக்கும். நீ விக்னேஸ்வரமூர்த்தியிடம் தான் ஏதோ ஒரு விடயமாக வந்துள்ளாய், என்னென்று சொல்” என்றார் தணிகாசலம்.

“எனது மூத்த மகன் கல்வியியற்கல்லூரியில் கற்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளான். அதற்கு இரண்டு பிணையாளர் தேவை. அந்தப் பிணையாளர் அரசாங்கத்தில் உயர்பதவி வகிப்பவர்களாக இருத்தல் வேண்டும். ஞானப்பிரகாசம் ஒரு பிணையாளராக ஒப்பம் வைக்க ஒப்புக் கொண்டுள்ளார். இன்னொரு ஒப்பத்தை விக்னேஸ்வரமூர்த்தி வைத்துத் தந்தால்....” பேசுவதை நிறுத்திவிட்டு தணிகாசலத்தைப் பார்த்தான்.

“ஏன் உன்னுடைய அதிபரைக் கேட்கலாம் தானே” என்றார் தணிகாசலம்.

"அவருக்குச் சம்பளம் போதாது. அவர் அதிபர் தரம் இல்லாதவர். விக்னேஸ்வரமூர்த்தி தனது செல்வாக்கைப் பயன்படுத்திக் கொடுத்தவரே தவிர, அவருடைய கெட்டித்தனத்திலா வந்தவர்?".

"நீ வந்தது கனகனுக்குத் தெரியுமா...?" என்று கேட்டார் தணிகாசலம்.

சங்கரலிங்கம் எதுவும் பேசாது தணிகாசலத்தைப் பார்த்தான்; "விக்னேஸ்வரமூர்த்தி பகைவனையும் நண்பனாகக் கருதுபவர். தனக்குத் துன்பஞ் செய்தவருக்கும் நன்மை செய்யும் பெருந்தன்மை உள்ளவர். படிப்பறிவில்லாத பாமர மக்களின் பிள்ளைகளுக்குத் தன்னாலான வசதிகளைச் செய்து கொடுப்பவர். அதனால் தான் இன்று பல மாணவர்கள் அரசிடமிருந்தும் தனியாரிடமிருந்தும் நன்கொடைகளைப் பெறுகின்றனர். உனது மகன் அவரிடம் படித்தவன். அவரது மாணவன். அவர் மாணவர்கள் மீது அன்பு கொண்டுள்ளமையால் தான் அவரை எவராலும் எதிர்க்கமுடிவதில்லை. சிவசுந்தரமூர்த்தி கட்டுப்பட்டு நடப்பதற்கு அவனது மகன் தான் காரணம் என்று உனக்குத் தெரியும். ஒரு நாள் அவன் சொன்னான் "அதிபர் நல்லவர். நீங்கள் தான் தீய செயல்களைத் தினமும் செய்பவர். அவருடன் பிரச்சினைப்பட்டால் நீங்கள் செத்தாலும் கொள்ளி வைக்க மாட்டேன்" என்றவன். அதனால் கட்டாயம் அவர் உனது மகனுக்கு உதவி செய்வார். போய்க்கேள்" என்றார் தணிகாசலம்.

**996. பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம்; அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.**

பண்பு மிகுந்தவர்கள் வேறுபாடு இல்லாது வாழ்வதாலேயே உலகம் அழியாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. அது இல்லையென்றால் மண்ணோடு மண்ணாகி அழிந்து விடும்.

மரம் போன்றவர்.

“இதைப்பற்றி நீங்கள் ஒருமுறை விக்னேஸ்வரமூர்த்திக்குச் சொல்லுங்கோ, அதற்குப் பிறகு நான் சென்று அவருடன் கதைக்கின்றேன்” என்றான் சங்கரலிங்கம்.

“தேவையில்லை. விக்னேஸ்வரமூர்த்தி மனம், சொல், செயல், மூன்றும் ஒன்றாய் இருப்பவர். அவர் மனதில் எண்ணுவதைச் சொல்பவர்; சொல்வதைச் செய்பவர்; ஒரு போதும் வாய் தவறிக்கூடச் சொன்னவற்றை மறுத்துரைக்கமாட்டார். நீ போ” என்றார் தணிகாசலம்.

“எதற்கும் நீங்கள் ஒருமுறை நான் இங்கு வந்ததாகவாவது கூறுங்கள். எனக்காகச் செய்யாவிட்டாலும், உங்களது சொல்லுக்காகச் செய்வார்.”

சில கணங்கள் தணிகாசலம் பேசாமல் இருந்தார். பின் சொன்னார்

“ஒவ்வொருவனும் தன்னைப் போலவும் தான் பழகும் நண்பர்களைப் போலவும் தான் மற்றவர்களையும் நினைக்கிறான். நீ கனகனுடனும் சிவசுந்தரமூர்த்தியுடனும் கனகலிங்கத்துடனும் பழகுவதால் அவர்கள் செய்வதையே விக்னேஸ்வரமூர்த்தியும் செய்வாரென நம்புகிறாய். கனகலிங்கம் இக்காணிப் பிரச்சினையில் கனகனின் பக்கம் தான் நின்றவர். விக்னேஸ்வரமூர்த்திக்கு நான் அதைப்பற்றிப் பல முறை கூறியபோதும், அவர் அதைப் பெரிதாக நினைக்கவில்லை. அப்போது அவர் சொன்னார் “தணி, நீதிக்குப் புறம்பான முறையில் நடப்பவன் இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாளைக்கு அதற்கான தண்டனையைப் பெறுவான். ஒவ்வொருவனும் தன்னைத்தான் அறிந்து கொள்வார்கள். உலகத்தில் தீய செயல்களைச் செய்பவர்களைப் பார், எந்த நேரமும் நிம்மதியின்றித் தவிக்கிறார்கள். அவர்களால் ஒரு செயலை நல்ல முறையில் செய்யமுடியாமைக்குக் காரணம் அவர்கள் தமது மனத்தை அலையவிடுவது தான். கனகலிங்கம் கற்றவர். அரத்தைப் போன்ற கூர்மையான அறிவுடையவர். ஆனால் மனிதப் பண்பகள் எதுவும் இல்லாதவர் என்று நான் பாடசாலையை அவருக்குக் கொடுக்கு முன்பே அறிந்துவிட்டேன். அவர் எனக்குத் தெரியாது கல்வி அதிகாரிகளோடு தொடர்பு வைத்தவர். கல்வி அதிகாரிகளை அவர் சந்தித்துவிட்டுச் சென்ற பின்பு அவர்கள் எனக்குக் கூறுவார்கள். அதைவிடக் கனகனுடன் தொடர்பு வைத்திருந்தவர். அத்துடன் கனகலிங்கம் தனது நலத்திற்காக எந்தப் பாவமான செயல்களையும் செய்வார் என்று எனக்குத் தெரியும். இருந்த போதும் திருந்துவார் என்று நம்பினேன். அவர்

செய்த அத்தனை தீயசெயல்களையும் அவருக்குச் சொல்லி இனியாவது திருந்தி நடவென்று கூறித்தான் பாடசாலையை ஒப்படைத்தேன். ஆனால் அவர் எனக்குச் சொன்னதற்கு மாறாகத்தான் நடக்கிறார். ஒருவன் செய்யும் தீமை அவனைப் பாதிக்கும். பொறுத்திருந்து பார். அதற்காக நான் பாடசாலைக்கு உதவிகள் செய்யாமல் இருக்கமாட்டேன். தற்பொழுது பெற்றோரில் சிலரும் நலன் விரும்பிகளில் சிலரும் பழைய மாணவர்களில் சிலரும் கனகலிங்கத்திற்கு என்னைப்பற்றிக் கூடாமல் சொல்கிறார்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. என்னை மகா கணபதி வழிநடத்துகிறார். அவர் எனக்கு உதவி செய்வார். ஒருவர் அரத்தைப் போன்ற அறிவுடையவராக இருந்தாலும் அவரிடம் மனிதப்பண்புகள் இல்லையென்றால் அவர் மரத்திற்குச் சமமாவார். அவரோடு நாம் பிரச்சினைப்படுவதில் அர்த்தமில்லை'' என்றவர். அதனால் அவர் உதவி செய்வார். நீபோ'' என்றார் தணிகாசலம்.

அவர் அப்படிச் சொன்ன பின்பும் சங்கரலிங்கம் தாமதித்தான். மனிதப் பண்பில்லாத மரங்களுக்குச் சொல்வது எதுவும் விளங்காது'' என்று நினைத்த தணிகாசலம் ''நீ போ நான் சொல்கிறேன்'' என்றார்.

பூரண மகிழ்வுடன் சிரித்த சங்கரலிங்கம் ''நான் வாறன் அண்ணை. மறந்து போகாமல் சொல்லிவிடுங்கோ'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

அவர்கள் கதைப்பதைக் கேட்டுக்கொண்டிருந்த பரமேஸ்வரன் கேட்டார் “மச்சான், இங்கு வாழ்கின்ற இவனுக்கு விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றித் தெரியாதா…?”

“ஏன் தெரியாது? எல்லோரும் கள்வர். சொல்வது ஒன்று செய்வது இன்னொன்று. இவனுக்குச் சடாச்சரம் என்றொரு நண்பன் இருக்கிறான். அவன் எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கோ அந்தக்கட்சியின் பிரமுகராக இருப்பான். அவன் சமாதான நீதவான். விக்னேஸ்வரமூர்த்திக்குச் சொல்வான் “காசு கட்டவேண்டாம்” என்று. கனகனுக்குச் சொல்வான் “விக்னேஸ்வரமூர்த்தி காசுகட்ட மாட்டார், நீ வழக்கைப்போடு” என்று. அப்படியானவர்களோடு கூடிச்சேர்ந்து செயலாற்றுபவர்கள் எப்படி நல்லவற்றைச் செய்வார்கள்? எப்படி நல்லவற்றை எண்ணுவார்கள்? இவர்களின் செயல்களை நினைத்தால் மனம் வெந்து போகும்” என்றார் தணிகாசலம்.

“அவர்களைப்பற்றி ஏன் நினைக்கின்றீர்கள்?” என்று கேட்டார் பரமேஸ்வரன்.

---

**997. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர்.**

---

மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர், அரம் போல கூர்மையான அறிவுடையவராக இருந்தாலும் அவர் மரத்திற்குச் சம்மானவர் ஆவர்.

**மிகவும் இழிந்தவர்.**

அன்று வெள்ளிக்கிழமை. நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலய இரவுப் பூசை முடிந்ததும் வேலாயுதபிள்ளை விக்னேஸ்வரமூர்த்திக்கு அருகில் வந்தார். விக்னேஸ்வரமூர்த்தி மகா கணபதியை வணங்கிவிட்டு, சுவாமியார் அமர்ந்திருக்கும் அரச மரத்தின் கீழ் வந்து அமர்ந்தார். அப்பொழுது அங்கு சுவாமியார் இருக்கவில்லை. சுவாமியார் இல்லாவிட்டாலும் அரசமரத்தின் கீழ் அமர்ந்திருந்தால், என்றுமில்லாத ஒரு மகிழ்ச்சி விக்னேஸ்வரமூர்த்தியின் மனதை நிரப்பும்.

அரசிலைகள் சலசலத்தன. மெல்லிய தென்றற் காற்று மேலாடையின்றி இருந்த விக்னேஸ்வரமூர்த்தியின் நெஞ்சிலுள்ள முடிகளுடன் உரசி விளையாடியது.

வேலாயுதபிள்ளை விக்னேஸ்வரமூர்த்தியின் அருகில் அமர்ந்து சில கணங்கள் அவரைப் பார்த்தார் "அவரது முகத்தை எப்போது பார்த்தாலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். ஊழிக்காலம் வந்தால் கூட அவரின் முகத்திலுள்ள பொலிவு மாறாது" என்று நினைத்தவாறு "சங்கரலிங்கத்தின் மகனுக்கு ஒப்பம் வைத்துவிட்டீர்களா…? என்று கேட்டார்.

புன் முறுவலுடன் வேலாயுதபிள்ளையை நிமிர்ந்து பார்த்தார் விக்னேஸ்வரமூர்த்தி. தணிகாசலம் எதையும் நேரடியாகக் கேட்டமாட்டார். அவருக்கு

விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றித் தெரியும். ஆனால் வேலாயுதபிள்ளை நேரடியாகவே கேட்பார். வேலாயுதபிள்ளை படிக்கும்போது மாணவ முதல்வராக இருந்தவர். அப்பொழுது சிறுவனாக இருந்த விக்னேஸ்வரமூர்த்திக்குப் பல தடைவ அடித்துள்ளார். படிக்கும் காலத்தில் விக்னேஸ்வரமூர்த்தி குறும்புத் தனங்களில் ஈடுபடுவார். அதனால் அவரை வெருட்டிய வேலாயுதபிள்ளைக்கு அவருடன் கதைக்கக் கூச்சமில்லை.

"பகைவர்களைத் தண்டிக்கவேண்டும். குற்றஞ் செய்பவர்கைத் தண்டிக்காவிட்டால் அவர்கள் மீண்டும் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுவார்கள். சங்கரலிங்கம் மிகவும் மோசமானவன். கனகனுடன் சேர்ந்து எத்தனையோ தீமைகளைச் செய்தவன். அத்துடன் சடாச்சரத்தோடு சேர்ந்து பாடசாலைப் பொருட்களைக் கூடக் களவாடியவன். ஊர் முழுவதிலும் களவெடுப்பவன். அப்படியானவனுக்கு நீங்கள் உதவி செய்திருக்கக் கூடாது. நீங்கள் உதவி செய்யாவிட்டால் அவன் அதற்காகவாவது திருந்துவான்" மூச்சு விட்டார் வேலாயுதபிள்ளை.

விக்னேஸ்வரமூர்த்தி பேசாமல் அரசமரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது செயல் வேலாயுதபிள்ளைக்குக் கோபத்தை வரவழைத்தது. அவர் அப்படித்தான் பாடசாலையிலும் முக்கியமான விடயங்களைப் பற்றி முன்பே முடிவெடுத்துவிட்டுப் பேசாமல் இருந்து மற்றவர்களது கருத்துக்களைக் கேட்பார்.

விக்னேஸ்வரமூர்த்தி பேசாததால் பொறுமையை இழந்த வேலாயுதபிள்ளை, தனது கோபத்தைக் காட்ட் “ நான் வாறன்” என்று கூறிவிட்டு எழுந்தார். அப்பொழுது தணிகாசலமும் பரமேஸ்வரனும் அங்கு வந்தனர்.

“ஏன் வேலாயுதம் அவசரப்படுகிறாய். இரு. நாங்கள் மூவரும் ஒன்றாகச் சந்தித்துப் பல நாட்களாகி விட்டன” என்றார் தணிகாசலம்.

வேலாயுதபிள்ளை திரும்பி விக்னேஸ்வரமூர்த்தியைப் பார்த்தார். அவரது முகத்தில் எந்தவிதமான சலனமும் இருக்கவில்லை.

“என்ன வேலாயுதத்தின் முகம் வாடி இருக்கின்றது” என்று கேட்டார் பரமேஸ்வரன்.

“தன்னோடு நட்புக்கொண்டுள்ளவர்களின் குண இயல்புகளைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள், தமது செயல்களால் தாமே கவலைப்படுவார்கள். விக்னேஸ்வரமூர்த்தி, நட்புக் கொள்ள முடியாது தீமைகளைச் செய்பவர்களுக்கும் நல்ல மனத்துடன் உதவி செய்யும் பண்புள்ளவர். அதை உணராத வேலாயுதபிள்ளை, சங்கரலிங்கத்திற்கு உதவி செய்துவிட்டார் என்று வேதனைப்படுகிறார். இதில் வேதனைப்பட என்ன இருக்கிறது?. விக்னேஸ்வரமூர்த்தி உதவி செய்யாவிட்டால் தான் ஆச்சரியப்படவேண்டும் “நட்புக் கொள்ள முடியாதவர்களுக்கும் உதவி செய்ய முடியாவிட்டால் தான் இழிந்தவனாகிவிடுவேன்” என்று நினைப்பவரை நினைத்து நீ

கவலைப்படுவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை'' என்றார் தணிகாசலம்.

கோபத்துடன் தணிகாசலத்தை முறைத்துப் பார்த்தார் வேலாயுதபிள்ளை. அவர் விக்னேஸ்வரமூர்த்தியைச் சந்திக்கு முன் தணிகாசலத்தைச் சந்தித்துக் கதைத்தார் சங்கரலிங்கம் தான் கனகனை ஏவி எல்லாவற்றையும் செய்விப்பவன். அதை நான் விக்னேஸ்வரமூர்த்திக்கு உணர்த்த வேண்டும். நீ அதற்கு உதவி செய்'' என்று கூறிவிட்டு வந்தவர். ஆனால் தணிகாசலம் அப்படிச் சொன்னதால் அவருக்குக் கோபம் வந்தது.

''நீ ஏன் என்னை முறாய்க்கிறாய்? விக்னேஸ்வரமூர்த்திக்கு நாம் புத்திமதிகள் கூறமுடியுமா...?'' என்று கேட்டார் தணிகாசலம்.

---

**998. நண்புஆற்றா ராகி நயம்இல செய்வார்க்கும்**
**பண்புஆற்றார் ஆதல் கடை.**

---

நட்புக் கொள்ள முடியாமல் தீமைகளைச் செய்பவருக்கும் நாம் பண்போடு பழகி நன்மை செய்து வாழாவிட்டால், நாம் மிகவும் இழிந்தவராகி விடுவோம்.

## பகலிலும் இருள்.

அன்று மாலை நான்கு மணிக்கு கனகனின் தாய் முத்துலட்சுமி காலமாகிவிட்டாள். முத்துலட்சுமிக்குக் கனகனைப் பிடிக்காது. அவன் எப்பொழுதும் சொத்துப் பிரச்சினை காரணமாகச்

சகோதரர்களுடன் சண்டையிட்டுக்கொண்டே இருப்பான். கனகன் முத்துலட்சுமியின் இளைய மகன். மூத்தவரான வியாகேஸ்வரருடனும் அடுத்த சகோதரனான குருபரனுடனும் மயில்வாகனனுடனும் தினமும் பிரச்சினைப்பட்டுக் கொண்டே இருப்பான். அவர்களது வாழ்நாளில் முக்காவாசிப் பகுதி நீதிமன்றில் தான் கழியும்.

முத்துலட்சுமிக்கு அது பெருங் கவலையைக் கொடுத்த போதும் கனகனுடன் கதைக்க அவள் பயப்படுவாள். அவன் தாயென்றும் பாராமல் கண்டபடி கதைப்பான். ஓரிருமுறை அவளுக்கு அடித்தும் விட்டான். அதனால் அவளது கையில் பெரும் நோ ஏற்பட்டுப் பல மாதகாலம் வைத்தியர் இராசரத்தினத்திடம் எண்ணெய் வாங்கிப் பூசினாள். தாய்க்குக் கையை அடித்து முறித்தமையால் வியாகேசர், தனபாலனுக்கு அதைச் சொல்லிப் பணம் கொடுத்தார். தனபாலனும் கிருஷ்னனும் இரவில் மறைந்திருந்து கனகனுக்கு அடித்தனர்.

கனகன் மறுநாள் வேலாயுதபிள்ளையிடம் வந்து சொன்னான் “குருபரனும் வியாகேசனும் எனக்கு ஆள்வைத்து அடிப்பித்து விட்டார்கள். நான் காவல்துறைக்குப் போகப்போகிறேன்”

வேலாயுதபிள்ளை சிரித்தார் “அப்ப குருபரனும் வியாகேசரும் ஒற்றுமையாகிவிட்டார்களா....? தினமும் வீதிகளில் அடிபடும் அவர்கள் ஒற்றுமைப்பட்டிருப்பா களென்று நான் நினைக்கவில்லை. அத்துடன் அவர்கள்

அடித்ததென்று எப்படிச் சொல்கிறீர்கள்? ஊரில் ஆயிரக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருடனும் நீங்கள் முரண்பட்டிருக்கிறீர்கள். உங்களைப் பற்றி எத்தனை தரம் சுவர்களின் எழுதினவங்கள். அதற்குப் பிறகும் நீங்கள் வேட்டி கட்டிக்கொண்டு வீதியால் எப்படித் திரிகிறீர்கள்? பாடசாலை விடயத்தைப் பற்றி உங்களோடு கதைக்க நான் விரும்பவில்லை. ஏனென்றால் தீயவற்றையெல்லாம் நல்லவை என்று சொல்லிச் செய்யும் உங்களைத் திருத்த முடியாது. நீங்களாக வந்து சொன்னதனால் தான் சொல்கிறேன். அந்த நேரம் அந்தக் காணியை யாரும் விக்னேஸ்வரமூர்த்திக்கு எதிராக வாங்க முயற்சிக்கவில்லை. நீங்கள் பலரிடஞ் சென்று அக்காணியை வாங்கும்படி கேட்டும் அவர்கள் வாங்கவில்லை. அந்த நேரம் அந்தக் காணிக்குள் ஒரு குடி இருந்தது. அதைச் சமாதானமான முறையில் எழுப்பாமல் சண்டித்தனம் விட்டீர்கள். அத்துடன் நீதிமன்றிற்குச் சென்று வட்டிக்காசும் வாங்கினீர்கள். இப்போ நீதிமன்றச் செலவு காசையும் வாங்கக் கட்டளை அனுப்பியுள்ளீர்கள். வெளிநாட்டிலுள்ள பலர், அதுவும் இந்த ஊரவர் இல்லாதவர்களே பாடசாலைக்கும், கிராமத்திற்கும் பெரும் பெரும் உதவிகள் செய்யும் போது, இந்த ஊரில் பிறந்து இந்தப் பாடசாலையில் படித்து, இங்கு கல்வி கற்பித்துப் பின் அதிபராகக் கடமையாற்றிய நீங்கள் உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவமாவது செய்யாமல் இருக்கலாம் தானே. பெற்ற தாய்க்கு அடித்துக் கையை முறித்த உனக்கு, பாடசாலை ஒருகேடா....? போய் உனக்கு அடித்ததைப் பற்றி வழக்குப் போடு. யார் உனக்குச் சாட்சி சொல்ல வரப்போகிறார்கள். சங்கரலிங்கம் வருவான்’’ என்றார்.

மறுநாள் காலை எட்டு மணிக்கு வேலாயுதபிள்ளையும் தணிகாசலமும் விக்னேஸ்வரமூர்த்தியும் கனகனது வீட்டுக்கு வந்தனர். அவர்களைக் கனகன் பார்த்துவிட்டு மறுகரை திரும்பியிருந்தான். குருபரன் ஓடிவந்து அவர்களை வரவேற்றான். மூவரும் முத்துலட்சுமிக்கு அஞ்சலி செலுத்தினர்.

அன்று மாலை மூன்று மணிக்கு முத்துலட்சுமியின் பிரேத ஊர்வலம் ஆரம்பமானது. கனகனும் வியாகேசனும் குருபரனும் மோட்டார் வாகனத்தில் ஏறி முத்துலட்சுமியின் பிரேதத்துடன் சென்றனர். அம் மூவரையும் தவிர வேலாயுதபிள்ளையும் தணிகாசலமும் கூடச் சென்றனர். வேறு எவரும் அவ்வூர்வலத்தில் கலந்து கொள்ளவில்லை.

மோட்டார் வாகனச் சாரதியின் உதவியுடன் முத்துலட்சுமியின் இறுதிக் கிரிகைகள் நடைபெற்றன. இறுதிக்கிரிகைகள் முடிந்ததும் வேலாயுதபிள்ளை கனகனின் அருகில் வந்தார் “கனகு, பிறருடன் நன்கு பழகி ஒற்றுமையுடன் வாழாதவருக்கு ஒளியுள்ள பகல் நேரம் கூட இருட்டாகவே இருக்கும். இன்று நானும் தணிகாசலமும் வாகனச் சாரதியும் இல்லாவிட்டால் நீங்கள் மூன்று பேரும் தான் இறுதிக்கிரிகைகளைச் செய்திருப்பீர்கள். சில சமயம் நீ செத்தால் உனது சகோதரர்களும் வரமாட்டார்கள்” என்றார்.

---

**999. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
**பகலும்பாற் பட்டன்று இருள்.**

---

பிறரோடு கலந்து பழகி மகிழ்ந்திருக்க முடியாதவர்களுக்கு, மிகப் பெரிய இந்த உலகம் பகற் காலத்திலும் இருளில் இருப்பதைப் போலவே இருக்கும்.

## திரைந்த பால்

அப்பொழுது தான் அவரது கையாட்களான மணியம் வாத்தியாரும் சங்கரலிங்கமும் வந்தனர்; ‘‘மகாலிங்கத்தினுடைய தோட்டக் காணிக்குள் வாய்க்கால் கட்டிய வழக்கு இன்றைக்கு. அது முடிய நேரமாகிவிட்டது’’ என்றான் சங்கரலிங்கம்.

‘‘மகளுக்குச் சுகமில்லை ஆஸ்பத்திரிக்குப் போய் வந்தனான்’’ என்றார் மணியம் வாத்தியார்.

‘‘மணியம் வாத்தியார் தான் கனகனைக் கெடுப்பது. தனது தேவைகளுக்காகக் கனகனைப் பகைக்காமல் இருக்கிறார். அத்துடன் விக்னேஸ்வரமூர்த்தியுடன் நல்ல முறையில் கதைப்பது. பின் அதைக் கனகனுக்குச் சொல்வது. விக்னேஸ்வரமூர்த்தி, மணியம் வாத்தியார் தனக்காகத்தான் கதைக்கிறார் என்று நினைப்பார். அதுபோல கனகன் தனக்காகத்தான்

கதைக்கிறார்....'' என்று வேலாயுதபிள்ளை சொல்லிக்கொண்டிருக்கும் போது தணிகாசலம் கோபத்துடன் குறுக்கிட்டார் ''நீ சில சமயங்களில் ஆராயாமல் கதைப்பாய். விக்னேஸ்வரமூர்த்தியை ஏமாற்றமுடியுமா....? அவர் எல்லோருடனும் சிரித்துக் கதைப்பாரே தவிர, அவர்களைப் பற்றிக் கணித்து வைத்திருப்பார். உன்னை நினைக்க எனக்கு விசர் வருது..... மணியம் வாத்தியார் கோயில் திருவிழாக்களுக்கே ஒழுங்காகப் பணம் கொடுப்பதில்லையென்று அவருடைய இனத்தவர்கள் பலர் விக்னேஸ்வரமூர்த்திக்குச் சொல்லிக் கவலைப்பட்டவர்கள். அப்படியிருக்க....'' உணர்ச்சி வசப்பட்டார் தணிகாசலம்.

''சரி..... சரி.... அது பிழை தான்......'' சிரித்தார் வேலாயுதபிள்ளளை. அவர் சில சமயங்களில் ஆராயாது அப்படிக் கதைப்பார் என்று தணிகாசலத்திற்குத் தெரியும். அதனால் அவர் சமாதானமடைந்தார்.

சங்கரலிங்கம் வேலாயுதபிள்ளைக்கு அருகே வந்தான் ''இப்படியொரு மரணவீடு இந்தக் கிராமத்தில நடக்கவில்லை. ஐந்து பேர் தானே இறுதி ஊர்வலத்தில கலந்து கொண்டது'' என்றான்.

''வேலாயுதபிள்ளை சிரித்தார் ''இவர்கள் சென்றால் தானே மற்றவர்கள் வருவார்கள். ஊரில் நல்லது கெட்டது நடக்கும் போது இவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று விடுவார்கள். பிறகு எப்படிச் சனம் வரும். முத்துலட்சுமி ஆச்சி கனகனைப் பற்றி எனக்கு

நெடுகக் குறைசொல்லுறவா.....பணம் இன்று யாரிடமில்லை.... மானம் மதிப்புத்தான் மனிதனுக்குத் தேவை. கனகன் ஊரில் உள்ள பலரின் சொத்துக்களை அபகரித்தவன். சிதம்பரச் சொத்துக் காணிகளைப் பிடித்து வைத்திருப்பவன். ஊராருடன் முரண்படுபவன். சகோதரர்களைத் துன்புறுத்துபவன். தாய் மனிசிக்கு அவன் செய்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமே. தாய், குருபரனுக்கு கூடுதலாக ஏதோ கொடுத்துவிட்டதாகச் சொல்லி நெடுகப் பிரச்சினைப்படுறவன். தாய்க்குச் செய்த பாவம் இவனைச் சும்மா விடாது'' என்றார் வேலாயுதபிள்ளை.

''கல்வி உழைப்பதற்காக அல்ல, சேவை செய்வதற்காக என்பதைப் புரிந்து கொள்ளாதவன், ஆசிரியத்தொழில் சம்பளம் பெறுவதற்காக என்று நினைப்பவன் கற்றவன் அல்ல. கற்றவர்கள் தாம் கற்ற கல்வியைச் சமூதாயத்தின் முன்னேற்றத்திற்காகச் செலவிடுதல் வேண்டும். கல்வி சுயநலன்களைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. தாம் கற்ற கல்வி மூலம் என்னென்ன தீமைகளைச் செய்து பணம் சம்பாதிக்கலாமென்று தான் பலர் நினைக்கிறார்கள். நாம் இந்த சமூதாயத்தில் பிறந்தது எல்லா விதமான இன்பங்களையும் அனுபவித்துச் செல்வத்தைப் பெருக்கி அதைக் காப்பாற்றுவதற்கல்ல. கல்வியின் மூலம் பேரும் புகழும் நிலைநாட்டி சமூதாயத்திற்கு எந்தெந்த வகையில் என்னால் சேவை செய்ய முடியும் என்று நினைப்பதற்கு, ஆனால் கனகன் பெற்ற தாய்க்குக் கூட ஒழுங்காக உணவு கொடுப்பதில்லை. கோயில் பணத்தையும், பாடசாலைப் பணத்தையும் சூறையாடுகிறான். உயர்ந்த பண்பு இல்லாதவன்

பெற்ற செல்வம், நல்ல பால் அது வைக்கப்பட்ட பாத்திரத்தின் தன்மையால் கெட்டுப்போவதைப் போன்றது. இவனிடம் பணம் இருந்து என்ன பிரயோசனம்...? இவனை யாராவது மதிக்கிறார்களா? நீயும் மணியம் வாத்தியாரும் தான் மதிக்கிறீர்கள். அதனால் உங்களையும் அவனைப்போலத்தான் மக்கள் எண்ணுகிறார்கள்'' என்றார் தணிகாசலம். அவர் அப்படிக் கதைக்கமாட்டார். சங்கரலிங்கத்திடம் சொன்னால் அவன் அப்படியே சென்று கனகலிங்கத்திடம் சொல்வான் என்று நினைத்துக் கதைத்தார். கதைத்த பின் அவருக்கு மனவருத்தமாக இருந்தது.

**1000. பண்புஇலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலம்தீமை யால்திரிந் தற்று.**

பண்பில்லாதவன் பெற்ற பெருஞ் செல்வம், அழுக்கடைந்த பாத்திரத்தில் வைக்கப்பட்ட பால் கெட்டுப் போனதைப் போன்றதாகும்.

## உயிரோடு செத்தவன்

“கனகன்ரை மருமோன் வெளிநாட்டிலிருந்து இரண்டு இலட்சம் ரூபா கோயிலுக்குக் கொடுக்கும்படி கனகனுக்கு அனுப்பியவன். கனகன் அந்தக்காசை ஆறுமாதகாலமாகக் கொண்டுவந்து தரவில்லை. அது எமக்குத் தெரியாது. ஒரு நான் கனகனின் மருமகன் தான் கனகனிடம் அனுப்பிய காசிற்குப் பற்றுச் சீட்டு அனுப்பவில்லை என்று வருணனுக்குச் சொல்லிக் கவலைப்பட்டிருக்கிறான். அதை வருணன்

தில்லை நடராசாவுக்கு எழுதியிருக்கிறான். தில்லை நடராசா அந்தக் கடிதத்தைக் கொண்டுவந்து எமக்குக் காட்டினார். நாம் அதை எப்படி நம்பிக் கனகனைக் கேட்பது. ஏற்கனவே பல தில்லுமுல்லுகள் செய்பவன் வாங்கின காசைக் கொடுக்காதவன், ஏமாற்றுக்காரன். நாங்கள் கேட்க அவன் பிரச்சினைக்கு வருவான். நாம் தான் கடிதத்தை எழுதியுள்ளோம் என்றும் சொல்வான். அதனால் நாம் அவனிடம் பணத்தைக் கேட்கவில்லை. அதனால் தில்லை நடராசா வருணனுக்கு நடந்தவற்றை எழுதினார். மறுவாரம் எமக்கு கனகனின் மருமகன் கடிதம் எழுதினான். நாம் அக்கடிதத்தைக் கொண்டு சென்று கனகனிடம் கொடுத்தோம். அதைப்பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறிவிட்டான். நாம் அதை அவனுக்கு எழுதினோம். அதற்கு அவன் பதில் போடவில்லை. கனகனைப் போலத்தானே மருமகனும் இருப்பான். சில சமயம் அவன் கனகனின் பெயரைக் கெடுப்பதற்காகவும் அப்படி எழுதியிருப்பான் என்று நினைத்தோம். கனகன் மட்டுமல்ல அவனது அண்ணன் தம்பி சகோதரர்கள் எல்லாம் அப்படித்தான்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''நீங்கள் சிவசாமியின் மகன் செல்வராசாவைத்தானே சொல்கிறீர்கள். அவன் கனடாவில் பலரை ஏமாற்றியதாகக் கேள்வி. அப்படித்தான் உங்களுக்கும் எழுதியிருப்பான்'' என்றான் சங்கரலிங்கம்.

''அவனுடைய குடும்பத்தில் யாரையும் நம்ப முடியாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி ஏமாற்றுபவர்கள். நீ

எவனொருவனை ஏமாற்றினாலும் அது உன்னை நீ ஏமாற்றுவதாகவே இருக்கும். சிலரை நீ ஏமாற்றினால் பலர் உன்னில் உள்ள நம்பிக்கையை இழந்து விடுவர். அதனால் உலகம் உன்னை ஏமாற்றும். அது தான் இன்று நடந்தது. இப்போதய நிலையில் இந்த ஊரில் உள்ள எவரும் கனகனை நம்பமாட்டார்கள் அவனது சுகதுக்கங்களில் கலந்து கொள்ளமாட்டார்கள். பலரை ஏமாற்றி அவன் பணம் சம்பாதித்து இன்று பணக்காரனாக இருக்கிறான். தாழ்ந்த நிலையில் உள்ளவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவது தான் மனிதத் தன்மை. அதைவிட்டுவிட்டுத் தான் கற்ற கல்வியை மோசடிக்கும் ஏமாற்றுக்கும் பயன்படுத்துவதா....`.?'' என்றார் வேலாயுதபிள்ளளை.

தணிகாசலம் வேலாயுதபிள்ளையை முறாய்த்துப் பார்த்தார். வேலாயுதபிள்ளை தேவையில்லாமல் கதைக்கும் வேளைகளில் தணிகாசலம் அவரை முறாய்த்துப் பார்த்தால் அவா் கதைப்பதை நிறுத்திவிடுவார். ஆனால் அன்று அவர் அப்படி நிறுத்தவில்லை

``ஒரு வீட்டில் மரணம் நிகழ்ந்தால் அந்த வீட்டில் முப்பத்தொரு நாட்களுக்கு நெருப்பு மூட்ட மாட்டார்கள். எனது தந்தையார் இறந்த போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவா் சமைத்துத் தந்தவை. நாங்கள் மூன்று மாதம் நெருப்பு மூட்டவில்லை. அயலவா்களும், இனத்தவா்களும் கொண்டு வந்து தந்த உணவுப் பொருட்கள் எமக்கு ஒரு வருடத்திற்குப் போதுமானதாக இருந்தது. கனகன் வீட்டை நேற்று இரவும் சமைத்தவை. பிரேதம் எடுத்த பின்பு உலை வைச்சவை. இப்படி ஓா் அவமானத்துடன் உயிர்வாழ வேண்டுமா

என்ன...? மிகப் பெருமளவு பொருட்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு உலோப குணத்தால் அதை அனுபவிக்காமல் இருப்பவன் உயிரோடு இருந்தாலும் செத்தவன் தான். அவனால் எதுவும் செய்ய முடியாது'' என்றார் வேலாயுதபிள்ளை. கோபத்தால் அவரது உடல் நடுங்கியது.

''உனக்கு ஏன் உந்தக்கதை? செத்தவீட்டிற்கு வந்தால் மற்றவர்களைப் போலத் துக்கம் விசாரித்து விட்டுப்போ....'' என்று தணிகாசலம் கூறும்போது வேலாயுதபிள்ளை கோபத்துடன் குறுக்கிட்டுச் சொன்னார் ''அவன் தீய செயல்களைச் செய்யும் போதெல்லாம் நாம் அவனைக் கண்டிக்காது விட்டதனால் தான் அவன் இன்று இந்த நிலைக்கு வந்துள்ளான். அவன் பாடசாலைக் காணிக்கு வட்டிக்காசு கேட்டபோது ஊரவை எல்லாம் பேசாமல் இருந்தவை அதனால் தான் இன்று அவன் செலவுக்காசு கேட்கின்றான். அவனை இப்படியேவிட்டால் இன்னும் பல தீய செயல்களைச் செய்வான். நீங்கள் ஏன் கனகனுக்குப் பயப்படுகிறீர்கள்'' என்று கோபத்தோடு கேட்டார் வேலாயுதபிள்ளை.

**1001.வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அ∴துஉண்ணான்**
**செத்தான் செயக்கிடந்தது இல்.**

ஒருவன் அளவுக்கதிகமான பொருளைச் சேமித்து வைத்து அதை உண்டு நுகராமல் இறந்து போனால், அவன் அந்தப் பொருளால் அடைந்தது எதுவும் இல்லை.

## மயக்கமான அறிவு.

மயானத்தால் அவர்கள் திரும்பி வந்தபோது சந்திக்கு அருகே இருந்த கள்ளுத் தவறணையில் சீராளனும் சிங்காரமும் நின்றனர். அவர்கள் இருவரும் நன்றாகக் கள்ளுக் குடித்திருந்தனர். அவர்களைக் கண்டதும் "டேய் சீராளா வந்துவிட்டுப் போ" என்றான் கனகன்.

சீராளன் நிமிந்து கனகனைப் பார்த்தான். பின் அவனின் அருகில் வந்தான் "மரியாதையைக் கொடுத்துத் தான் மரியாதையைப் பெறவேண்டும். நீ எப்படி என்னை மதிப்பில்லாமல் "டேய்" என்று அழைக்கலாம். நாங்கள் சாதி குறைந்தனாங்கள் என்று தானே நீ அப்படி அழைத்தனீ..... ஒரு வழியில் பார்த்தால் நீ எனக்கு இரத்த உறவு. என்னுடைய அண்ணற்றை மகனுக்கு பிள்ளை பிறந்தால் உனக்குத் துடக்குத் தெரியுமே....? உன்னுடைய ஓர் அண்ணற்ரை மகள் என்ரை அண்ணற்றை மகனைக் கனடாவில கட்டியிருக்கிறாள். அவைக்கு நான்கு பிள்ளைகள். நீ கனடாவுக்குப் போனபோது அங்கையும் போனதாக அவன் கடிதம் எழுதினவன். வெளிநாடுகளில் இருக்கிறவையும் பணக்காரர்களும் சாதி மான்கள். அவையைச் சாதி பார்க்க மாட்டியள். அதைவிட உன்ரை மோளும் சாதி குறைந்த ஒருவனைத்தானே செய்திருக்கிறதாய்ச் சனம் கதைத்தது. ஆறு மாதங்களுக்கு முன்னம் சுழிபுரத்திலிருந்து ஒரு பெண் வந்து, உனது மகள் தனது மகனை ஏமாற்றிக் கல்யாணஞ் செய்ததெண்டு வீதியில் நின்று பேசேல்லையா...?"

“வீண் கதை கதையாதை. விறகு தறித்து அடுக்கிய காசு எவ்வளவு என்று சொல்லு தர” என்றான் கனகன்.

“உமக்கு நாங்கள் சேவகம் செய்தனாங்களோ....? “தூக்கப் பறிக்க ஆட்கள் யாருமில்லை. ஒருவன் துன்பப்படும் வேளையில் அவனுக்கு உதவி செய்ய வேண்டும். முத்துலட்சுமி அம்மா மிகவும் நல்லவர். பலருக்கு உதவி செய்தவர். அந்த மனிசியின் பிரேதம் நல்ல முறையில் தகனஞ் செய்யப்பட வேண்டும். நீங்கள் எனக்காகப் போய் உதவி செய்யுங்கோர் விறகு தறித்து அடுக்கி விடுங்கோ” என்று தருமவான் விக்னேஸ்வரமூர்த்தி ஐயா சொன்னதற்காகத்தான் உன்ரை வீட்டை, நீ சொல்லாமலே வந்து வேலைகளைச் செய்தனாங்கள். நீ எம்மைச் சம்பளத்திற்கு வேலைக்கு வாவென்று கேட்டனியா...? நீ பெரிய சாதிமான் தனவந்தன் உன்னிடம் இருக்கும் செல்வத்தால் எல்லாம் நடக்குமென்று கருதி யாருக்கும் எந்த உதவிகளையும் செய்யாமலும் யாரையும் மதியாமலும் வாழ்ந்து வருகிறாய்... உன்னுடைய பணத்தால் இன்று எதைச் செய்ய முடிந்தது? அன்றன்று உழைத்துச் சாப்பிடும் கிருஷ்னனின் தாய் செத்த போது ஐந்து வீட்டிலிருந்து சோறு வந்தது. இப்ப உன்ரை மனிசி உலை வைத்துத்தான் உனக்குச் சாப்பாடு தரவேண்டும். நீ பிறந்ததாலை என்ன பயன்..? உனக்குப் புகழ் இருக்கா..? பெருமை இருக்கா....? அந்தப் புண்ணியவானிட்டை வட்டிக்காசு வாங்கினாய். இப்ப செலவுகாசும் வாங்கத் திரிகிறாய். ஆனால் அவர் நீ

செய்த தீமைகளைப் பொறுத்துக் கொண்டு உனக்கு உதவி செய்கிறார்'' என்றான் சீராளன்.

சிங்காரம் நல்ல வெறியில் வந்து கேட்டான் ''சீராளா....? கனகன் என்ன சொல்கிறான்? அடிக்கட்டா உவனுக்கு''

''சிங்காரம் வயதிற்கு ஏற்ற கதைகதைக்க வேண்டும். அவர் உன்னைக் கற்பித்த ஆசிரியர்..'' என்றார் தணிகாசலம்.

''உவரோ.....? உவர் கற்பித்து யார் உங்கை உருப்படியாகப் படித்தவை?. விக்னேஸ்வரமூர்த்தி ஐயா வந்த பிறகெல்லோ எங்கடை பாடசாலையை நாலுபேர் மதிக்கினை.... உவர் எம்மைக் கொண்டு தன்ரை தோட்டவேலைகளைத் தான் செய்வித்தவர்'' என்றான் சிங்காரம்.

பலர் கூடி நின்ற சந்தியில் சிங்காரம் அப்படிச் சொன்னதும் கனகனுக்குக் கோபம் வந்தது. ''டேய் சிங்காரம் உன்னை என்ன செய்வன் தெரியுமே'' என்று கேட்டார்.

''என்ன செய்வாய். மணியம் வாத்தியாரையும் சங்கரலிங்கத்தையும் கூட்டிக்கொண்டு காவல் நிலையத்திற்குச் செல்வாய். ஊரைக் கொள்ளையடித்த காசைப் பிரக்கிராசிக்குக் கொடுத்து வழக்குப் பேசுவாய். வேறு என்ன உன்னால் செய்யமுடியும். தான தர்மம் செய்வியா....? உதவி செய்வியா....? இப்ப பள்ளிக்

கூடத்திலை காசு வாங்க நிற்கிறாய். பள்ளிக்கூடத்திற்கு ஒரு சதமும் என்றாலும் செலவு செய்தனியா....? பள்ளிக்கூடப் பொருட்களைக் கொள்ளையடித்ததாகத் தானே சனம் கதைக்குது'' என்றான் சிங்காரம்.

''வெறியில் நிற்கிறவனுடன் கதைக்கிற கதையே இது. நடபேசாமல்'' என்றார் மணியம் வாத்தியார்.

**1002. பொருளான்ஆம் எல்லாம்என்று ஈயாது இவறும்**
**மருளான்ஆம் மாணாப் பிறப்பு.**

பொருளால் எல்லாவற்றையும் செய்யலாம். என்று கருதி யாருக்கும் எதுவும் உதவாமல் சேர்த்து வைத்திருக்கும் மயக்கமான அறிவுள்ளவனுக்குச் சிறப்பில்லாத பிறவி உண்டாகும்.

## பாரமானவர்கள்.

''இவன் எனக்குச் சும்மாய் வேலை செய்யத் தேவையில்லை. இவன்ரை திமிரான கதையைப்பார்'' என்றான் கனகன்.

''டேய் கனகா, நீ என்னை வேலைக்குப் பிடித்தனியா? சம்பளம் தர. முதல் நாள் இரவு மனிசி செத்தது. மற்றநாள் பன்னிரண்டு மணிக்குத்தான் சவப்பெட்டி

எடுத்தனீங்கள். அதுவரை கடைக்குச் சென்று பெட்டி எடுக்க ஆள் இல்லை. பட்டணத்திலுள்ள சவப்பெட்டிக் கடைக்காரனுக்கு தொலைபேசியில் சொல்லி அவன் பெட்டியும் பொருட்களும் கொண்டுவந்தவன். அதைவிட ஊரிலுள்ள முக்கால்வாசிப்பேர் செத்த வீட்டிற்கு வரவில்லை. செத்த வீடென்றால் நீ பிரேதம் எடுக்கின்ற நேரம் போறனீ. கலியாண வீடென்றாலும், நீ எந்தச் சபையிலாவது இருந்து சாப்பிட்டனியா...? உன்ரை சொந்தச் சகோதரர்களின் பிள்ளைகள் திருமணஞ் செய்த வீட்டார் சாதி குறைந்தவா்களென்று சொல்லி நீ அவா்களுடைய சபையிலே இருந்து சாப்பிடுவதில்லை. அப்படி வாழும் நீ சகோதர பாசத்துடன் வாழுற எம்மைக் குறை சொல்கிறாய்'' என்றான் சீராளன்.

``விசர்க்கதையை விட்டுட்டு இந்தக்காசைப்பிடி'' என்றான் கனகன்.

``நான் வாங்கமாட்டன். உதைக்கொண்டுபோய் மகா கணபதி ஆலய உண்டியலில் போடு.....'' என்றான் சிங்காரம்.

கனகனுக்கு அளவிற்கதிகமான கோபம் வந்தது. தனது கையில் வைத்திருந்த ஆயிரம் ரூபாத்தாளை சிங்காரத்தின் முகத்தில் வீசி எறிந்துவிட்டு; ``விரும்பினால் பணத்தை எடு. இல்லாவிட்டால் அது தெருவில் கிடக்கிட்டும்'' என்றான். அவன் வீசிய காசை யாரும் எடுக்காததால் அப்பணத்தாள் காற்றில் பறந்தது.

“தின்ன வழியில்லாத பிச்சைக்காரர்களுக் கெல்லாம் கொழுப்பு மெத்திப்போச்சு” என்றான் கனகன்.

“நீ பேசாமல் நடவப்பா. நீ சொன்னது அவனது காதில் விழுந்தால், உன்ரை சந்ததி முழுவதையும் இழுத்து இப்ப சந்தி சிரிக்க வைப்பன். படித்த உனக்குப் புத்தியில்லையா....?” என்று கேட்டார் மணியம் வாத்தியார்.

சந்தி கழிந்ததும் வியாகேசனின் மகன் மோட்டார் வண்டியில் வந்து வியாகேசரையும் குருபரனையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். கனகனும் மணியம் வாத்தியாரும்சங்கரலிங்கமும் வந்துகொண்டிருந்தனர். துவிச்சக்கரவண்டியை உருட்டிக் கொண்டு நடந்து வந்த வேலாயுதபிள்ளை தணிகாசலத்தைப் பார்த்துக் கேட்டார் “நாமும் போவோம்”

கனகனை வீட்டில் கொண்டு சென்றுவிட்டு விட்டுப் போவோம்” என்றார் தணிகாசலம்.

அவர்கள் கனகனது வீட்டிற்கு வந்த போது கனகனின் மனைவி அவர்களை ஒப்பாரி வைத்து வரவேற்றாள். ஒப்புக்கு அழக்கூட அங்கு யாரும் இருக்கவில்லை.

“நாங்கள் வரப்போறம்” என்றார் வேலாயுதபிள்ளை.

“உள்ளுக்கு வாருங்கோ தேனீர் குடித்துவிட்டுப் போகலாம்” என்றான் கனகன்.

“நீங்கள் உங்களது சகோதரர்களின் கலியாணவீட்டுச் சபைகளில் கூட பந்தியில் இருந்து சாப்பிடுவதில்லை. உங்களது துடக்குத் தண்ணீரையா நாங்கள் குடிக்கப்போறம்?” என்று சொல்ல வாயுன்னினார் வேலாயுதபிள்ளை. அவர் அப்படிச் சொல்வாரென அறிந்த தணிகாசலம் அவரை முறாய்த்துப் பார்த்தார். அதனால் வேலாயுதபிள்ளை எதையும் கூறவில்லை.

சிறிது தூரம் வந்த தணிகாசலம் சொன்னார் “போனவாரம் கனகன்ரை சகோதரியின் மகனுக்குத் திருமணம் நடந்தது. பெண்வீட்டார் வெளிநாட்டிலிருந்து வந்தவை. கோயிலில் தான் திருமணம் நடைபெற்றது. பெண்வீடாக எங்கடை சிறுவர் பாடசாலை தானே இருந்தது. மாப்பிள்ளை தன்ரை வீட்டில இருந்து கல்யாண மட்டபத்திற்கு வந்தவர். மணமகள் சிறுவர் பாடசாலையில் இருந்து வந்தவள். உவைக்கு இனசனம், நண்பர்களின் வீடுகள் இல்லையா...? உவன்ரை இனசனத்திற்கு பொருள் சேர்ப்பதில் தான் பற்று. அதனால் யாரையும் மதிப்பதில்லை. தம்மை ஊரவர் இகழ்வார்கள் என்று அவர்கள் நினைத்திருந்தால் யாராவது ஓர் உறவினனது வீட்டிலிருந்து பெண்ணை அழைத்துச் சென்றிருப்பார்கள். புகழை விரும்பாத இவர்கள் எல்லோரும் பூமிக்குப் பாரமானவர்கள்” என்றார் தணிகாசலம்.

வேலாயுதபிள்ளை பெருமூச்சு விட்டார் " நீங்கள் சொல்வது உண்மைதான். கனகன் பொருள் சேமிப்பதில் பற்றுக் கொண்டு, புகழை விரும்பாமல் வாழ்கின்றான். அவனுக்கு யார் எதைச் சொன்னாலும் விளங்காது" என்றார்.

**1003. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்**
**தோற்றம் நிலக்குப் பொறை.**

பொருள் சேர்ப்பதில் மிகுந்த பற்றுக் கொண்டு, புகழை விரும்பாமல் வாழ்கின்றவர்கள் பூமிக்குப் பாரமானவர்கள்.

## எஞ்சுவது எது?

கெங்காதரனும் நவராசாவும் கனகனின் வீட்டிற்கு வந்தனர்.

"அம்மா நேற்றுச் செத்தவா. இன்றைக்கு ஆறுமணிக்கு வரத்தான் உங்களுக்கு நேரம் கிடைத்ததோ...?" என்று கேட்டான் கனகன்.

நவராசா எதுவும் பேசவில்லை. அவன் கனகனிடம் படித்தவன். கெங்காதரன் சொன்னான் "எனக்கு உங்களது தாயார் செத்தது இப்பதான் தெரியும்"

‘‘நான் நம்பமாட்டன்’’ என்றான் கனகன்.

‘‘நீங்கள் நம்பாவிட்டால் விடுங்கோவன். அதனால் எனக்கு எந்த நட்டமும் இல்லை. நீங்கள் ஏதோ சம்பவம் நடந்தவுடனை போய், அந்த இடத்திலை நின்று முழுவேலைகளையும் செய்யிறனீங்கள் தானே? எனக்கு இங்கு வரவிருப்பமில்லை. நவராசா கேட்டதால் வந்தனான். நான் ஏன் உங்களுக்குப் பொய் சொல்ல வேண்டும்? கிருஷ்னனின் தாயும் உங்களது தாயாரைப்போல இரவு தான் செத்தவா. பத்துப் பதினைந்து நிமிடத்தில அந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவிவிட்டது. ஆனால் உங்களது வீட்டுக்கு யாரும் வராததால் அந்தச் செய்தி பரவவில்லை. பிறரை மதித்து வாழ்ந்தால் தான் மற்றவர்களும் மதிப்பார்கள். பிறருக்கு உதவி செய்து வாழ்ந்தால் செய்தி அறிந்ததும் எல்லோரும் ஓடோடி வருவார்கள். நீ யாருக்கும் உதவி செய்யாததால் அனைவரினதும் வெறுப்புக்கு ஆளாகியுள்ளாய். நீ இறந்த பிறகு எஞ்சியிருப்பதென்று எதனைக் கொள்வது. வா நவராசா போவோம்’’ என்று எழுந்தான் கெங்காதரன்.

‘‘கோபப்படாதை’’ என்றான் நவராசா.

‘‘ஒழுங்காக வாழ்பவன் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கமாட்டான். வீடு தேடி வாறவனை வரவேற்றக் தெரிய வேண்டும். சிதம்பர சொத்துக் காணிக்குள் எனது பெரியப்பா வீடு கட்டி வாழ்ந்தவர். அந்தக் காணியை உன்ரை பெயரிலை எழுதிவிட்டு நீதிமன்றத்தைக் கொண்டு அவரைப்

பலாத்காரமாக வெளியேற்றினனீ. இப்ப அந்தக் காணீக்கை கடை கட்டி வாடகைக்குக் கொடுத்திருக்கிறாய்'' என்றான் கெங்காதரன்.

கதைமாறுபடுவதை உணர்ந்த நவராசா எழுந்தான் ''வாத்தியார் நான் பிறகு வாறன். வா கெங்கா'' என்று கூறிவிட்டு அவனது பதிலைஎதிர்பாராது எழுந்து நடந்தான்.

கெங்காதரனும் எழுந்து அவனின் பின்னே சென்றான் ''மரணவீடு நடந்துவிட்டதென்பதற்காகத் துக்கம் விசாரிக்க வந்ததால் அவரது திமிரான கதையைப் பார்த்தாயா...? எனது பேரனார் இறந்த போது கனகன் வரவில்லை. அப்பா என்னைப் போகவேண்டாம் என்று சொன்னவர். நீ கேட்டதற்காகத் தான் வந்தனான்'' கோபப்பட்டான் கெங்காதரன்.

''கோபப்படாதை, இவன் செலவுகாசு கேட்டபின்பும் விக்னேஸ்வரமூர்த்தி ஐயா வந்தவர். வேலை செய்ய ஆட்கள் இல்லாததால் சீராளனையும் சிங்காரத்தையும் பிடித்து வேலை செய்யவிட்டவர். அவர்களுடனும் கனகவாத்தியார் சந்தீலை பிரச்சினைப்பட்டவராம். அவங்கள் செய்த வேலைக்குக் கூடக் கூலி வாங்கவில்லையாம். அதனால் அவர் ஆயிரம் ரூபாவை வீதியில் வீசிவிட்டு வந்துவிட்டாராம்'' என்றான் நவராசா.

''உனக்கு யார் சொன்னது?'' என்று கேட்டான் கெங்காதரன்.

“வேலாயுதபிள்ளை அண்ணை சொன்னவர்” என்றான் நவராசா.

“விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவும் சில சமயங்களில் தவறு செய்துவிடுகிறார். இவர் ஏன் சீராளனையும் சிங்காரத்தையும் பிடித்து விடவேண்டும். கனகன் வீடுவீடாகச் சென்று ஒவ்வொருவரையும் இரந்தால் தான், தான் செய்யும் தீமைகளைப் பற்றி அவனுக்கு விளங்கும்” என்றான் கெங்காதரன்.

நவராசா எதுவும் கூறாது வந்தான். அதனால் கெங்காதரன் சொன்னான் “விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவை நான் குறைசொல்லவில்லை. அவர் பெரும் மனிதன். பண்பாளன், ஆனால் அது தீயவனான கனகனுக்குத் தெரியாது. அவன் தனது பணபலத்தால் எதையும் சாதிக்கலாமென்று தான் நினைத்து வாழ்கிறான். அப்படிப்பட்டவனுக்கு உதவினால் அவன் திருந்துவானா...? முன்பும் பல முறை அவர் உதவி செய்திருக்கிறார். அத்துடன் அவன் படித்த பாடசாலைக்குச் செய்வது சரியா...? அப்படியிருக்க விக்னேஸ்வரமூர்த்தி ஐயா தொடர்ந்தும் உதவி செய்வது தான் எனக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னேன்” என்றான் கெங்காதரன்.

நவராசா சில கணங்கள் அவன் சொன்னதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தான். அவன் சொல்வது நியாயம் போலத்தான் தோன்றியது. எனினும் அதை அவன் வெளியே சொல்ல விரும்பவில்லை. “ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமானவர்கள்” என்று சொன்னான்.

**1004. எச்சம்என்று என்எண்ணும் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்?.**

பிறருக்கு உதவாமல் வாழ்வதால் ஒருவராலும் விரும்பப்படாதவன் ,தான் இறந்த பிறகு எஞ்சியிருப்பது என்று எதனை எண்ணுவான்.?

## பயனில்லாத செல்வம்.

கெங்காதரன் வீட்டுக்கு வந்த போது அங்கு தணிகாசலம் இரத்தினசிங்கத்துடன் கதைத்துக்கொண்டிருந்தார்.

"நீங்கள் சொல்லச் சொல்லக் கேட்காமல் நான் கனகனின் வீட்டுக்குச் சென்றது தவறாகிவிட்டது. மரணச் செய்தியை அறிந்து அனுதாபம் சொல்லச் சென்றால் அவன் சட்டம் கதைக்கின்றான்" என்றான் கெங்காதரன் கோபமாக.

"ஏன், என்ன சொன்னவன்?" என்று கேட்டார் இரத்தினசிங்கம்.

"நேற்று இராத்திரி அம்மா செத்தவா, இப்ப தானோ வாறியள்" என்று கேட்டான். நான் இப்போது தான் செய்தியை அறிந்தேன் என்று சொன்னேன். அவன் அதை நம்பாது விசர்க்கதை கதைத்தான். நான் கண்டபடி ஏசிவிட்டேன்" என்றான் கெங்காதரன்.

"அவனுக்குப் பேசப் பழகத் தெரியாது. அதனால் நான் அவனைக் கண்டாலும்

காணாத மாதிரிச் சென்றுவிடுவேன். இப்படி ஏதாவது ஏறுமாறாகக் கதைப்பான் என்பதற்காகத்தான் நான் போகவில்லை. உன்னையும் போகவேண்டாமென்று சொன்னனான்'' என்றார் இரத்தினசிங்கம்.

''நான் அவனுக்காகவா போனனான். குருபரன் காணுற இடத்திலை கதைக்கிறவர். அதோடை அவற்ரை மகன் என்னுடன் சிநேகிதம்...'' என்று கெங்காதரன் கூறிக்கொண்டிருக்கும் போது இரத்தினசிங்கம் சொன்னார் ''குருபரன்ரை வீட்டையே செத்தவீடு நடந்தது. வியாகேசரும் மயிலரும் தாயின் இறுதிக் கடன்களைச் செய்யவேண்டும் என்பதற்காகத் தான் கனகனின் வீட்டை போனவை. அவை கனகன்ரை வீட்டிலை பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்கவில்லை. பின் சுடலையாலை தங்கடை தங்கடை வீட்டை போய்விட்டார்கள். தாயாரின் செலவு, அந்தியேட்டிக் கிரியைகளை வியாகேசர் தன்னுடைய வீட்டில் செய்யப் போகிறார். ஊர் சனங்களில் பெரும்பான்மையானவை குருபரன் சுடலையாலை வந்த பிறகு குருபரன்ரை வீட்டை தான் போயினை. நானும் நாளைக்கு அங்கு போகவேண்டும்'' என்றார் இரத்தினசிங்கம்.

''நானும் அப்படிச் செய்திருக்கலாம். வீணாகச் சென்று மனஸ்தாபப்பட்டது தான் மிச்சம்'' என்றான் கெங்காதரன்.

''சரி அதைவிடு தணிகாசலம் உன்னிடம் தான் ஏதோ வந்திருக்கு'' என்றார் இரத்தினசிங்கம்.

“சொல்லுங்கோ அண்ணை” என்றான் கெங்காதரன்.

“நீ தோய்ந்துவிட்டு வாவன்” என்றார் தணிகாசலம்.

“இல்லைச் சொல்லுங்கோ. நான் கிணற்றடிக்குப் போனால் வர நேரம் செல்லும்” என்றான் கெங்காதரன்.

“மகாலிங்கம் அடிச்சேரி வளவுக்கை வீடு கட்டுகிறான்...”

“ஓம் அதுக்கென்ன...?”

“தம்பியார் வெளிநாட்டிலை தானே இருக்கிறான். அவன் தான் காசு அனுப்புறவன். கொஞ்சச் சாமான் கடனாகக் கேட்கிறான்.....” என்றார் தணிகாசலம்.

“அதுக்காக வந்தனீங்களே................. தொலைபேசியில் சொல்லியிருக்கலாம். இல்லாவிட்டால் மகாலிங்கத்திடம் ஒரு கடிதம் குடுத்து அனுப்பியிருக்கலாம். இருட்டினாப் பிறகு வந்திருக்கிறியள்.” என்றான் கெங்காதரன்.

“இல்லைத்தம்பி எதற்கும் ஒரு மதிப்பு மரியாதை வேண்டும். கடன் கேட்கிறவன் நேரில் சந்தித்துக் கேட்கவேண்டும். அதுதான் முறை” என்றார் தணிகாசலம்.

கெங்காதரன் சிரித்தான் “நல்ல முறை. இந்த முறைகளையெல்லாம் கனகன் பின்பற்றுகிறவனே” என்று கேட்டான் கெங்காதரன்.

“ஊருக்குதவாதவனின் கதையை ஏன் கதைக்கிறாய்? அவன் தன்னுடைய மூத்த சகோதரிக்கு அந்த நேரம் பத்தாயிரம் ரூபா வரதட்சணையாகக் கொடுப்பதாகச் சொன்னவன். பிறகு ஏமாற்றிவிட்டான். அதன் பின் தனது மகளுக்கு ஓர் இலட்சம் ரூபா கொடுப்பதாகச் சொல்லிக் கொடுக்கவில்லை. அதனால் அந்தக் குடும்பம் ஐந்தாறு வருடங்கள் பிரிந்திருந்தது. ஊரில் நடந்த எந்த ஒரு நல்ல காரியத்துக்குக் கொடுத்தவன்?. கோயிலுக்கென மற்றவர்கள் கொடுப்பதையும் கொள்ளையடித்து விடுவான். அதைவிடத் தானாவது அனுபவிக்கிறானா…? ஒரே ஒரு வெள்ளை வேட்டியும் ஒரு துவாயும் வைத்திருக்கின்றான். அதோடை தான் தெருக்களில் திரிவான். எங்காவது போவதானால் ஒரு மேற்சட்டை வைத்திருக்கிறான். தின்னாமல் குடிக்காமல் கோடிகோடியாகச் சேர்த்து வைத்திருக்கிற பணத்தால் என்ன பயன் வரப்போகிறது.” என்றார் தணிகாசலம்.

“அளவுக்கதிகமான ஆசை. கடைக்கு வந்தால், பொருட்களை வாங்கிவிட்டுக் கூடுதலான கழிவு கேட்பான். அதனால் கடைச்சிற்பந்திகளுக்கு அவனைப்பிடிக்காது. பாடுபட்டுத் தேடும் பணத்தை அனுபவிக்க வேண்டும்” என்றார் இரத்தினசிங்கம்.

---

**1005. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய**

**கோடிஉண் டாயினும் இல்.**

மற்றவர்களுக்கு மனம் மகிழ்ந்து கொடுக்காமலும், தான் அனுபவிக்காமலும் இருப்பவனுக்குச் செல்வம் கோடி கோடியாக வந்தாலும் ஒரு பயனும் உண்டாகப் போவதில்லை.

## நோய் போன்றவன்

நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயக் கொடியேற்றத் திருவிழா நடைபெற்றது. அந்த முறை தேர்த்திருவிழாவை மிகவும் விமர்சையாகச் செய்ய வேண்டும் என்று தேர்த் திருவிழா உபயகாரர் விரும்பினர். ஒரே இனத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் சேர்ந்து வருடா வருடம் தேர்த்திருவிழாவைச் செய்து வந்தனர். தேர்த்திருவிழா ஒருபோதும் சிறப்பாக நடைபெறுவதில்லை. ஐம்பது வருடங்களுக்கு முன்பு ஒரு குடும்பம் ஐம்பது ரூபா கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. வருடா வருடம் அக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தர்ப்பை தரித்துத் தேர்த்திருவிழாவின் பொறுப்பை ஏற்பார். ஐம்பது குடும்பங்களும் தலா ஐம்பது ரூபா வீதம் கொடுப்பார்கள். செலவாகும் மிகுதிப் பணத்தைத் தர்ப்பை தரிப்போர் வருடா வருடம் பொறுப்பேற்பர். தேர்த்திருவிழாவுக்கு எளிமையான ஒரு கூட்டம் மேளம் வரும். மற்றைய திருவிழாக்காரர் நாலைந்து கூட்டம் மேளம் பிடித்து விடிய விடியத் திருவிழாச் செய்வார்கள். 'சின்ன மேளம்' ஆடிய காலங்களில்

மக்கள் வெளியூர்களிலிருந்து சின்ன மேளக்காரிகளின் நடனத்தைப் பார்க்க வருவார்கள்.

பிற்காலத்தில் சின்ன மேளத்தின் மௌசு குறைய இசைக்குழுக்கள் அவ்விடத்தைப் பிடித்துக் கொண்டன. மகா கணபதி ஆலயத்தில் இருபத்தைந்து திருவிழாக்கள் நடைபெறும். சிகரங்கள், சோடனைகள் யாவும் ஒவ்வொரு திருவிழாவின் போதும் வித்தியாசமாக இருக்கும். ஆனால் தேர்த்திருவிழாவன்று கோயில் மேளத்துடன் அதற்குச் சமமானதொரு மேளம் வரும்.

தேர்த்திருவிழா நடைபெறும் நாளன்று அக்கிராமத்தில் உள்ள பாடசாலைகள் மூடப்படும். ஆசிரியர்களும் மாணவர்களும் அன்று கோயிலில் கூடியிருப்பார்கள்.

அந்த முறை சங்கரலிங்கம் தர்ப்பை தரித்தான். முருகேசு; ‘‘இந்த முறை ஐந்து கூட்டம் மேளம் பிடிக்க வேண்டும்’’ என்றான்.

‘‘நாற்பது வருசமாய் ஒரு கூட்டம் மேளத்துடன் தான் தேர்த்திருவிழா நடைபெற்றது. இந்த முறை ஏன் ஐந்து கூட்டம் மேளம் பிடிக்க வேண்டும்? ஒரு கூட்டந்தான் பிடிப்பேன்’’ என்றான் சங்கரலிங்கம்.

‘‘மனோகரன் வாத்தியார் தனது செலவில் மேளம் பிடிக்கிறாராம்’’ என்றான் முருகேசு.

“எனக்கும் சொன்னவர் அவர் நல்ல வசதியாக இருக்கிறார். கற்பித்தலோடு வியாபாரமுஞ் செய்பவர். வருடா வருடம் ஐந்து கூட்டம் மேளம் பிடித்து விடுவதாக் கூறுகிறார். மேளம் வந்தால் சிறப்பாக இருக்கும்” என்றார் மணியம் வாத்தியார்.

“அது சரிவராது. தேர்த்திருவிழா அன்று இருபது இருபத்தைந்து குருக்கள்மார் வருவது வழக்கம். அவர்களுக்கு உபயகாரர் தெட்சனை கொடுப்பார்கள். அத்தோடு மனோகரன் வாத்தியார் அவர்களுக்குப் பெருந்தொகையாகத் தெட்சனை கொடுக்கிறார். ஏன் அப்படிக் கொடுப்பான். உபயகாரனை விட மனோகரன் வாத்தியார் கூடுதலாகத் தெட்சனை கொடுப்பதனால் குருக்கள்மார் அவரைத்தான் மதிக்கினை” என்றான் குமரவேலு.

“எட மனோகரன் வாத்தியார் குருக்களின்ரை மூத்த மகனின்ரை மகனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தவர். குருக்களின் பேரப்பிள்ளைகளைப் பிரபல பாடசாலைகளிலை சேர்த்து விட்டவர். மாதா மாதம் லட்சாட்சனை செய்பவர். அதுக்காகத்தான் குருக்கள்மார் அவரை மதிக்கினை” என்றான் நடராசசுந்தரம்.

“எனக்குத் திருவிழாச் செய்யத் தெரியும். நீங்கள் யாரும் எதையும் கூறத்தேவையில்லை. எனக்கு உதவி செய்யக் கனகவாத்தியார் இருக்கிறார். தேவையேற்பட்டால் மணியம் வாத்தியாரையும் கேட்பன். நீங்கள் எவரும் தேவையில்லை” என்றான் சங்கரலிங்கம்.

ஐம்பது வருடத்திற்கு முன்னம் தேருக்கு வர்ணப்பூச்சுப் பூசியது. இராமலிங்கத்தார் உயிரோடு இருக்கும் வரை வருடா வருடம் எல்லா வேலைகளையும் செய்தவர். அவர் செத்தாப்பிறகு தேர்த்திருவிழா அன்று தான் உபயகாரர் இரண்டு வாழைக்குலைகளுடன் நான்கு பலாப்பழங்களுடனும் இரண்டு வாழைகளுடனும் வரீனை. நீங்கள் ஒப்புக்குத் திருவிழா செய்கிறீர்களோ இல்லைப் பக்தியால் செய்கிறீர்களோ.........? இந்த முறை திருவிழாவை நல்ல முறையில் செய்ய வேண்டும்'' என்றான் முருகேசு.

‘‘அது சரிவராது. வழமையாகச் செய்கிற மாதிரிச் செய்வம்'' என்றர் கனகவாத்தியார்.

‘‘உனக்கென்ன விசரே. ஊர்ச் சொத்தையெல்லாம் கொள்ளையடித்து வைத்திருக்கிறாய். நீயும் அனுபவிப்பதில்லை. மற்றவர்களுக்கும் கொடுப்பதில்லை. தானதர்மங்களும் செய்வதில்லை. கோயிலுக்கும் செலவு செய்வதில்லை. அப்படி வாழுகிற நீ கதைக்காதை. சேர்த்து வைத்திருக்கின்ற பெரும் பொருளுக்கு நோய் போன்றவன் நீ'' என்றான் முருகேசு.

‘‘உனக்குக் கதைக்கப் பேசத்தெரியாது'' என்றார் மணியம் வாத்தியார்.

‘‘ஓ உன்மையைச் சொன்னால், எனக்குக் கதைக்கப் பேசத்தெரியாது என்று சொல்வீர்கள். நீங்கள் இரண்டு மூன்று பேர்

செய்கிற திருகுதாளங்கள் எல்லாம் எங்களுக்குத் தெரியாது என்று நினைக்காதைங்கோ. அதைக் கோயிலடியிலை சொல்ல நான் விரும்பவில்லை'' என்றான் முருகேசு.

---

**1006. ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்குஒன்று
ஈதல் இயல்பிலா தான்.**

---

தானும் அனுபவிக்காமல், மற்றவர்கள் மகிழும்படியாக கொடுத்து உதவாமல் வாழ்கின்றவன், தான் வைத்திருக்கும் பெரும் பொருளுக்கு நோய் ஆவான்.

## கிழவியான கன்னி.

இராசையாவுக்கு எழுபது வயது. கனகனது வீட்டில் பதினைந்து வருடகாலமாக வேலை செய்பவன். அறுபது வயதில் இருதய சத்திர சிகிச்சை செய்த இராசையாவால் பெரிய வேலைகள் செய்ய முடிவதில்லலை. அதனால் கனகனது வீட்டுவேலைகளைச் செய்து கொடுத்துக் கொண்டிருந்தான். கனகனது மனைவி வள்ளிநாயகிஒரு மனநோயாளி. இருந்த இடத்தில் அசையாமல் இருப்பாள். யாரோடும் கதைக்கமாட்டாள். யாரும் வந்து அவளோடு கதைத்தாலும் கதைக்கமாட்டாள். அதனால் இராசையா சமையல் வேலை செய்வான். கனகனதும் வள்ளிநாயகியதும் உடைகளைத் துவைத்து வைப்பான். வீடு வாசல், முற்றம்

கூட்டுவான். இதற்காக இராசையாவுக்கு மூன்று வேளைச் சாப்பாடும் மாதம் ஆயிரம் ரூபா சம்பளமும் கனகன் கொடுப்பான். அந்தச் சம்பளத்தை அவன் ஒரு போதும் ஒழுங்காகக் கொடுப்பதில்லை. தேங்காய், மாங்காய் அரிசியெனத் தினமும் கொடுப்பான். மாத முடிவில் ஐநூறு அறுநூறு ரூபா கொடுப்பான். இராசையாவுக்கு மூன்று பிள்ளைகள். அவர்களில் இருவர்கள் ஆண்பிள்ளைகள். அவர்கள் கூலி வேலை செய்து கொண்டிருந்தனர். அவனது மகள் நல்லம்மாவுக்கு மூன்று ஆண் பிள்ளைகள். புரிசன் கமம் செய்தான். அவள் தினமும் இராசையாவுக்குச் சொல்வாள் “அப்பா இப்ப உங்களுக்கு எத்தனை வயது? எழுபது வயதில் வேலை செய்ய வேண்டுமா....? கனகன் ஒழுங்காகச் சம்பளம் தந்தாலும் பரவாயில்லலை. அரிசியும் தேங்காயும் தந்து கழித்து விடுவான். பேசாமல் வீட்டில் இருங்கோ” என்பாள்.

இராசையா பதில் கூறாமல் இருப்பார். மகளுக்குக் கஷ்டம் கொடுக்காமல் மூன்று நேரமும் தனது வயிற்றை நிரப்பினாலே போதும் என்று நினைப்பார்.

காலையில் இராசையா கனகனின் வீட்டிற்குச் சென்றால், இரவு ஏழு மணிக்குத்தான் வீடு திரும்புவார். அதுவரை அங்கு அவருக்கு வேலை இருக்கும். கனகனின் மகள் சுலக்சனா கனகனின் வீட்டிற்கு அருகில் இருக்கிறாள். அவள் இராசையாவைக் கொண்டு ஏதாவது வேலை செய்விக்கவேண்டுமென்றால் தான் கனகனின் வீட்டிற்கு வருவாள். கடந்த பத்து வருடங்களாக அவள் தகப்பனுடன் கதைப்பதில்லை. பத்து

வருடத்துக்கு முன்பு பட்டணத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தனது மூத்த மகளைச் சேர்ப்பதற்கு பத்தாயிரம் ரூபா பணம் கேட்டாள். கனகன் கொடுக்கவில்லை. கடனாகக் கொடுத்தாலும் அவள் திருப்பித் தரமாட்டாள் என்று தெரிந்த கனகன் அவளுக்குப் பணம் கொடுப்பதில்லை. அத்துடன் சீதனமாகத் தருவதாகக் கூறிய பணத்தையும் கொடுக்கவில்லை. அதனால் அவளுக்கும் கணவனுக்கும் அடிக்கடி சண்டை வரும். அதனால் அவள் தகப்பனுடன் கதைப்பதை நிறுத்திவிட்டாள்.

இராசையாவின் மகளின் மூத்த மகனுக்கு காய்ச்சல் வந்துவிட்டது. அரசினர் ஆஸ்பத்திரியில் இரண்டு முறை மருந்தெடுத்தும் சுகப்படவில்லை. அதனால் நல்லம்மா பட்டணத்தில் உள்ள தனியார் மருத்துவனையில் மகனை அனுமதிக்க விரும்பினாள். அதற்கு ஐயாயிரம் ரூபாவாவது வேண்டும். அன்று காலை இராசையா, கனகனின் வீட்டுக்குப் புறப்பட்டபோது செல்லம்மா சொன்னாள் ‘‘அப்பா, துஷ்யந்தனுக்கு ஒரு கிழமையாகக் காய்ச்சல் காய்கிறது. மருந்தெடுத்தும் விடுவதாகக் காணோம். பட்டணத்தில் உள்ள மருத்துவமனைக்கு அவனைக் கொண்டு சென்று காட்டலாமென நினைக்கின்றேன். கனகவாத்தியாரிடம் கடனாக ஐயாயிரம் ரூபா கேட்டுப்பாருங்கோ’’

இராசையா மகளை நிமிர்ந்து பார்த்தார். அவளது முகம் சோர்ந்திருந்தது. கண்கள் கலங்கியிருந்தன. இராசையா பதில் கூறாததால் ‘‘கட்டாயம் கேட்டுப்பாருங்கோ’’ என்றாள்.

இராசையா கனகனின் வீட்டுக்கு வந்த போது அவன் எங்கோ புறப்பட்டுக்கொண்டிருந்தான். இராசையா அவனைக் கண்டதும் நின்றார்.

"என்ன?" என்று கேட்டான் கனகன். துஷ்யந்தனுக்கு நாலைந்து நாட்களாகக் காய்ச்சல்"

"தரும ஆஸ்பத்திரியிலை மருந்தெடு. இப்ப வந்திருக்கின்ற வைத்தியர் நல்ல கெட்டிக்காரன். நான் போன கிழமை காய்ச்சலுக்கு மருந்தெடுத்தனான். ஒருவேளை மருந்து சாப்பிட்டதும் குணமாகிவிட்டது". என்றான் கனகன்.

இரண்டு தரம் நல்லம்மா அவனைக் கூட்டிச் சென்று மருந்து எடுத்தவள். சுகப்படேலை. இரத்தம் சோதிக்க வேணும். ஐயாயிரம் ரூபா கடனாகத் தருங்கோ. மாதாமாதம் எனது சம்பளத்தில் கழியுங்கோ....?

கனகன், இராசையாவைச் சிலகணங்கள் பார்ததான். பின்பு சொன்னான் "என்னட்டை இப்ப காசில்லை. நாலைந்து நாள் கழியத்தாறன் இப்ப யாரிடமாவது மாறு".

"வழக்கமாகக் கடன்கோட்டால் கனகன் அப்படித்தான் சொல்வான். இராசையாவுக்குப் பலமுறை அவன் அப்படிச் சொல்லியிருக்கிறான். அனாதை விடுதி அமைக்கப் பணம் தருமாறு கேட்டபோது கனகன் தன்னிடம் பணம் இல்லையென்று சொன்னான். அப்போது

வேலாயுதபிள்ளை கூறியவார்த்தைகள் இராசையாவின் காதில் ஒலிந்தன; ‘‘வாத்தியார் உங்களிடம் பணம் இல்லையென்றால் யாரும் நம்பமாட்டார்கள். பொருள் இல்லாத, வறுமை மிக்கவர்களுக்குக் கொடுத்து உதவாதவனுடைய செல்வம் மிகவும் அழகான பெண் மணமாகாமல் கன்னியாகவே வாழ்ந்து கிழவியாவதைப் போன்றது. உங்களது பணமும் அப்படித்தான்.

‘‘என்ன யோசிக்கிறாய் போய் வேலையைச் செய்’’

‘‘பேரப்பிள்ளைக்கு வருத்தம் என்றபடியால் எனக்கு மனம் சரியில்லலை. இனிமேல் நான் வேலைக்கு வரமாட்டேன்’’ என்று கூறிவிட்டுக் கனகனின் பதிலை எதிர்பாராது நடந்தார் இராசையா.

**1007. அற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்**
**பெற்றாள் தமியள்மூத் தற்று.**

பொருள் கேட்டு வரும் வறியவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவாதவனுடைய செல்வம், மிகவும் அழகான தொரு பெண்மணமாகாமல் தனிமையாக வாழ்ந்து முதுமை அடைவதைப் போன்றது.

**நச்சு மரம்.**

இராசையா வீட்டிற்கு வந்தபோது வீட்டுப் படலையில் பலர் கூடிநின்றனர். இராசையா பரபரப்புடன் வீட்டுள் வந்த போது வேலாயுதபிள்ளை

சொன்னார் “நீ இவ்வளவு நாளும் என்ன செய்தனி?. பெடியனுக்குக் காய்ச்சல் கூடி வலி வந்துவிட்டது. கனகவாத்தியார் வீட்டை பத்துப் பதினைந்து வருட காலமாக வேலை செய்கிறாய். ஓர் ஆயிரம், இரண்டாயிரம் மிச்சம் பிடிக்கவில்லையா....? இல்லாவிட்டால் சம்பளத்தில் கழிக்கச் சொல்லி கடன் வாங்கமுடியவில்லையா....? பெடியனுக்கு கடுமையாக்கி விட்டது. என்னிடம் வந்திருந்தால் நான் காசு தந்திருப்பன்” என்றார்.

இராசையா பதற்றத்துடன் உள்ளே சென்றார். துஷ்யந்தன் திண்ணையில் படுத்திருந்தான். அவனது வாயிலிருந்து வெண்நுரை தள்ளிக்கொண்டிருந்தது. இராசையாவைக் கண்டதும் பெருங்குரல் எடுத்துச் சில நிமிடங்கள் அழுத நல்லம்மா அழுகையை நிறுத்திவிட்டுக் கேட்டாள் “கனகவாத்தியாரிட்டை காசுவாங்கி வந்தனீங்களோ”.

இராசையா மௌனமாக நின்றார். அவரது கண்களால் கண்ணீர் வழிந்தது. “நல்ல கனக வாத்தியார் தான் காசு தாறது. அந்தாள் கடன் வாங்கினாலே திருப்பிக் கொடாது” என்றான் தில்லையம்பலம்.

அப்போது தணிகாசலம் கணேசமூர்த்தியின் மோட்டார் வண்டியில் வந்து இறங்கினார். வேலாயுதபிள்ளை துஷ்யந்தனைக் கொண்டு வந்து மோட்டார் வண்டியில் ஏற்றிவிட்டு தனது வேட்டியில் முடிந்து வைத்திருந்த பணத்தைமுடிச்சை அவிழ்த்து எடுத்து நல்லம்மாவிடம் கொடுத்தார். தணிகாசலமும் இரண்டாயிரம் ரூபா கொடுத்தார்.

மோட்டார் வண்டி புறப்பட்டது; “வேலாயுதம், நான் உன்னிடம் எவ்வளவு பணம் வாங்கியிருப்பன். ஒன்றும் திருப்பித் தாறதில்லை. அதனால் உன்னிடம் வந்து கேட்க ஒரு மாதிரியாக இருந்தது” என்றார் இராசையா.

“அரசாங்க ஆஸ்பத்திரியில் வசதிகள் குறைவு. தனியார் ஆஸ்பத்திரிகளில் பணம் வசூலிப்பதால் சகல வசதிகளையும் செய்திருக்கிறார்கள். காய்ச்சல் கூடினால் வலி வரத்தான் செய்யும். பயப்படாதை” என்றார் தணிகாசலம்.

“கனகவாத்தியாரைக் காசு கேட்டுப் பாராதையன்” என்றார் வேலாயுதபிள்ளை.

“காலமை நல்லம்மா கனகவாத்தியாரிட்டைக் காசு கேட்கச் சொல்லிச் சொன்னவள். அவர் என்ரை சம்பளத்தையே நேர்சீராகத் தருவதில்லை. அதோடு முன்பு பல முறைகேட்டும் அவர் தரவில்லை. இன்று காலை நல்லம்மா கண்கலங்கியதாலை கேட்டனான். அந்தாள் ‘தன்னிடம் பணம் இல்லையாம். யாரிடமாவது மாறிச் செலவு செய். நாலைந்து நாட்களின் பின் தருகிறேன்’. என்றார். அவர் எதையும் இல்லையென்று சொல்வதில்லை. ‘பிறகு தாறன்’ என்றால் தரமாட்டான். என்று தான் அர்த்தம்” என்றார் இராசையா.

‘‘எத்தனை வகையான மனிதர்கள் உலகில் வாழ்கிறார்கள். அவர் ஒரு சதம் கூடத் தான தர்மம் செய்ததை நான் அறியவில்லை. கோயில் கட்டட நிதிக்குத் தருவதில்லை. வருடா வருடம் தேர்த்திருவிழாவுக்கு மட்டும் ஐம்பது ரூபா தருவார். அதையும் கேட்காமல் விட்டால் சந்தோஷப்படுவார்’’ என்றார் வேலாயுதபிள்ளை.

‘‘நாள் முழுக்க நோயால் அழுதாலும் பக்கத்தில் இருக்கிற மகள் வந்து ஏன் என்று கேட்கமாட்டாள். பதினைந்து வருட காலமாய் நான் அங்கை வேலை செய்கிறேன். அவற்றை மகள் ஒரு நேரச் சாப்பாடு கொண்டுவந்து கொடுத்ததில்லை. நல்ல நாள் பெரிய நாளில் கூடக் கொடுப்பதில்லை. தாய் மனிசி இருந்த இடத்திலேயே இருக்கும். நான் தான் சாப்பாடு கொடுப்பது. தகப்பனில்லாத வேளையிலாவது மகள் வந்து தாயைப் பார்க்கலாந் தானே என்ன பிறப்புக்களோ..... இனிமேல் நான் வேலைக்கு வரமாட்டன். என்று கூறிவிட்டு வந்துவிட்டன். என்ன செய்யப் போகிறாரோ தெரியாது’’ என்றான் இராசையா.

‘‘கஷ்ரப்பட்டவருக்கு உதவாத செல்வத்தால் என்ன பயன்? அப்படியானவனுடைய செல்வம் ஊருக்கு நடுவே நச்சு மரம் நன்றாகக் காய்த்து பழுத்திருப்பதைப் போன்றது. கனகருக்குச் சமைக்கத் தெரியாது. அத்துடன் தினமும் காவல்துறை, நீதிமன்றம் என்று அலைவார். அதனால் உன்னைக் கூட்டிக்கொண்டு போக வருவார்’’ என்றார் வேலாயுதபிள்ளை.

“நான் இனிப்போகமாட்டன். என்ன செய்வது வீட்டிலும் கஷ்ரம். வேறு எங்காவது வேலைக்குச் செல்லத்தான் வேண்டும்” என்றார் இராசையா.

“எமது அனாதை இல்லத்திற்குச் சமையல் வேலைக்கு ஆள்த் தேவை. நீ வா” என்றார் வேலாயுதபிள்ளை.

**1008. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தற்று.**

பிறருக்கு உதவாத காரணத்தினால் ஒருவராலும் விரும்பப் படாதவனுடைய செல்வம், ஊர் நடுவில் நச்சு மரம் பழுத்ததைப் போன்றது.

**அனுபவிப்பவர்கள்.**

பத்து மணிக்கு இராசையாவின் வீட்டுக்குக் கனகன் வந்தான் “பேரனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதாகக் கேள்விப்பட்டேன். அரசாங்க ஆஸ்பத்தரிக்கு ஒழுங்காக மருந்துகள் வருவதில்லை. வந்தாலும் அப்படி இப்படிப் போய்விடும். காய்ச்சல் கூடினால் வலி வாறது இயற்கை, பயப்படத் தேவையில்லை. இப்ப பேரனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றுவிட்டனர். நீ இங்கிருந்து என்ன செய்யப் போகிறாய். வா வீட்டை. இதில ஆயிரம் ரூபா இருக்குது. இந்தா பிடி” என்றான் கனகன்.

“எனக்கு வேண்டாம் வாத்தியார். இந்த மாதச் சம்பளத்தில் அரிசி சாமான் தந்த

காசு எழுநூறு ரூபா. அதைக் கழித்துக் கொண்டு மீதிக் காசைத் தாருங்கோ. இனி நான் வேலைக்கு வரவில்லை. இன்றைக்கு மகள் ஆஸ்பத்திரிக்குச் சென்றுவிட்டாள் எப்ப வருவாள் என்று சொல்ல முடியாது. காலையிலும் சமைக்கவில்லை. அதனால் நான் சமைக்கப்போகிறேன்'' என்றான் இராசையா.

''சமைத்து வைத்துவிட்டு வாவன். எமக்கும் சமைக்கத்தானே வேண்டும்'' என்றான் கனகன்.

''இன்றைக்கு, சாப்பாட்டுக் கடையில் சோற்றை எடுங்கோ. நாளையில் இருந்து வேறு யாரையாவது வேலைக்கு வையுங்கோ. நான் அனாதை இல்லத்திற்குச் சமைக்கச் செல்கிறேன்'' என்றார் இராசையா.

''என்ன.....? அனாதை இல்லத்திற்குச் சமைக்கச் செல்லப்போகிறாயா......? வேண்டுமானால் நூறு இருநூறு கூடத்தாறன்''அழுவாரைப் போலச் சொன்னான் கனகன்.

''உங்களது வீட்டிற்கு வர எனக்கு விருப்பமில்லை. என்ன செய்வது ஏழையாய்ப் பிறந்துவிட்டேன் என்பதற்காக உங்களது வீட்டிற்கு வந்தேன். அதை நீங்கள் எனது பலவீனமாகக் கருதிவிட்டீர்கள்''

''உனக்கென்ன விசரே? உனக்கு நான் என்ன குறை விட்டனான்?. கடையில தேங்காய் வாங்குவதானால் இருபது இருபத்தைந்து

ரூபா வேண்டும். நான் உனக்குப் பதினைந்து ரூபாவுக்குத் தானே தாறனான்''

இராசையா வேதனையுடன் கனகனை நிமிர்ந்து பார்த்தார். கடைக்குக் கொடுத்துவிட்டுக் கழிக்கும் தேங்காய்களையே அவர் இராசையாவிற்குக் கொடுப்பார். அந்தத் தேங்காய்களைப் பத்து ரூபாவுக்குக் கூடக் கடைக்காரன் வாங்கமாட்டான். அத்துடன் நல்ல தேங்காய்களைக் கூட அவர் கடைக்குக் கொடுக்கும் போது கடைக்காரன் பத்துப் பன்னிரண்டு ரூபா தான் கொடுப்பான்.

''என்ன யோசிக்கிறாய்?. விக்னேஸ்வரமூர்த்தியும், வேலாயுதபிள்ளையும், தணிகாசலமும் ஊரை ஏமாற்றுபவர்கள். ஜெயபாலனையும் மச்சானையும் ஏமாற்றிப் பனம் பறித்து விட்டார்கள். இலக்கியப் பேரவை கட்டுவதிலும் அனாதை இல்லம் கட்டுவதிலும் நல்ல அடி இருக்கு. அவர்களை நம்பாதே. நாளைக்கு வா''

''நான் வரமாட்டான்'' என்றான் இராசையா. கனகன் சிறிது நேரம் அங்கு நின்றுவிட்டுப் பின் சென்றான்.

அன்று இரவு ஆயுதங்களுடன் திருடர் கோஷ்டி ஒன்று கனகனின் வீட்டிற்குள்ப் புகுந்தது, கனகனைக் கட்டி வைத்துவிட்டு நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்து விட்டனர். விடிந்த பின்பும் அவரது வீட்டிற்கு யாரும் செல்லாததால்

கனகன் கட்டப்பட்டிருந்ததை யாரும் அறிந்து கொள்ளவில்லை.

பத்து மணிக்கு சங்கரலிங்கம் காணி வழக்குச் சம்பந்தமாகக் கதைப்பதற்குச் சென்ற போது கனகன் தூணுடன் கட்டப்பட்டிருப்பதைக் கண்டான்.

“இராத்திரி துப்பாக்கிகளோடு பலர் வந்துவிட்டனர். அதனால் என்னால் எதுவும் செய்ய முடியாமற் போய்விட்டது. நான் தேடிய சொத்து முழுவதையும் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர்” கனகன் அழுதான்.

சிறிது நேரத்தில் அங்கு மக்கள் கூடிவிட்டனர் ஊர்ச் சொத்து முழுவதையும் கொள்ளையடித்தால் இப்படித்தான் நடக்கும். நேற்று இராசையா பேரனுக்கு வருத்தமென்று கடனாகக் காசு கேட்டவன். பத்துப் பதினைந்து வருடங்களாக வேலை செய்பவனுக்கு இனாமாக ஐயாயிரம் பத்தாயிரம் கொடுத்தால் என்ன? அவன்ரை சம்பளத்தையே நேர்சீராகக் கொடுப்பதில்லை” என்றான் ஒருவன்.

“கடையில் விற்க முடியாத தேங்காய்களையும் மாங்காய்களையும் அரிசியையும் கொடுத்து அவனை ஏமாற்றினால் இப்படித்தான் நடக்கும்” என்றான் இன்னொருவன்.

“பிறரிடம் அன்பு செலுத்த வேண்டும். தான் நன்றாக அனுபவிக்க வேண்டும். தான தர்மங்கள் செய்ய வேண்டும். அறத்தைப் போற்ற

வேண்டும். அப்படி வாழ்ந்தால் தான் மிச்சம் பிடிக்கும் பணம் தங்கும். அநியாயமான முறையில் அறத்தைப் பேனாது சம்பாதிக்கும் செல்வத்தைப் பிறரே அனுபவிப்பார்கள்'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது உண்மையென இப்பொழுது தான் நான் உணர்ந்து கொண்டேன்'' என்றான் இன்னொருவன்.

''விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவுக்குச் செய்த துரோகத்தால் தான் இன்று இவ்வளவும் நடந்தது. இனியாவது கனகன் திருந்த வேண்டும்'' என்றான் இன்னொருவன்.

''இவன் திருந்தமாட்டான்'' என்றான் இன்னொருவன்.

**1009. அன்புஒரீஇத் தன்செற்று அறம்நோக்காது ஈட்டிய ஒண்பொருள் கொள்வார் பிறர்.**

பிறர் மீது அன்பு செலுத்தாமல் தன்னையும் வருத்தி, அறத்தைப் போற்றாமல் சேர்த்து வைத்த இழிந்த பெரும் பொருளை மற்றவர்களே அனுபவிப்பார்கள்.

## பெய்யாத மழை

துஷ்யந்தன் நோய் சுகமாகி வீட்டிற்கு வந்துவிட்டான். இராசையா அனாதை இல்லத்திற்குச் சமையல் செய்வதற்காகச் செல்லத் தொடங்கிவிட்டார்.

அன்று பத்து மணிக்கு கனகன் வேலாயுதபிள்ளையின் வீட்டுக்கு வந்தான் ‘‘நீ செய்தது சரியோ........? பதினைந்து வருட காலமாக எனது வீட்டில் வேலை செய்த இராசையாவை அனாதை இல்லத்தில் வேலை செய்யச் சேர்த்துவிட்டாய் நாலைந்து நாட்களாக நான் சாப்பாட்டுக் கடையில் தான் மூன்று நேரமும் சாப்பாடு எடுக்கிறேன்’’.

‘‘அதற்கு நான் என்ன செய்வது? இராசையா உங்களது வீட்டிற்கு வேலை செய்யவருவதானால் இப்பவே கூட்டிக்கொண்டு போங்கோ. உங்களது வீட்டிற்கு அவன் வேலைக்கு வராததால் தான் நான் அவனை அனாதை இல்லத்திற்கு வருமாறு கேட்டேன்’’ என்றார் வேலாயுதபிள்ளை.

‘‘நீங்கள் எல்லாவற்றையும் நன்கு திட்டமிட்டுச் செய்துவிட்டு எதுவும் செய்யாதது போல நாடகமாடுவதில் வல்லவர்கள். நான் ஆயிரம் ரூபா சம்பளம் கொடுத்தனான். நீங்கள் மூவாயிரம் ரூபா சம்பளமாகக் கொடுக்கிறீர்கள். அது உங்களது பணமா...? யாரோ கஷ்ரப்பட்டுத் தேடிக் கொடுத்தது தானே. ஒவ்வொருவனும் கஷ்ரப்பட்டுப் பணத்தைச் சம்பாதித்தால் தான் அதன் அருமை தெரியும்...?’’ என்றான் கனகன்.

‘‘ஒவ்வொருவனும் செய்யும் வேலைகளுக்கு ஏற்ற ஊதியத்தைக் கொடுக்க வேண்டும். உங்களது வீட்டில் இராசையா காலையிலிருந்து பொழுதுபடும் வரை செய்யும் வேலைக்கு ஆயிரம் ரூபா போதுமா....?

அதைவிட்டாலும் ஒவ்வொருவனும் தனது விருப்பப்படி தான் நடப்பன். அதை யாரும் தடுக்க முடியாது. ஊரில் இராசையா ஒருவன் மட்டுமா கூலி வேலை செய்கிறான். வேறு யாரையாவது பிடித்துச் செய்ய வேண்டியது தானே'' என்றார் வேலாயுதபிள்ளை.

''உங்களுக்கு நீதி நியாயம் விளங்காது. நான் வாறன்'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றான் கனகன்.

''கனகன் வெளியே செல்லும் போது கஜேந்திரன் வந்தான் ''அண்ணை எனக்கு அவசரமாக இருபத்தையாயிரம் ரூபா தேவைப்படுகின்றது'' என்றான்.

வேலாயுதபிள்ளை அவனைக் கவலையோடு பார்த்தார். இவ்வளவு காலமும் கஜேந்திரன் அவரிடம் பணம் கேட்டதில்லை. அவனுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் வந்தன. அந்த நேரங்களில் வேலாயுதபிள்ளை அவனைத் தேடிச் சென்று பணம் கொடுத்தபோதும் அவன் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை.

''எனக்குக் கஷ்டம் தான். அதற்காக நான் பலரிடமும் உதவி பெறக்கூடாது. தணிகாசலம் அண்ணை தந்தவர். பரமேஸ்வரன் ஐயா உதவியிருக்கிறார். அதனால் என்னிடம் பணம் இருக்கிறது. எனக்கு கஷ்டம் ஏற்படும் போது கட்டாயம் நான் உங்களிடம் வருவேன். அப்பொழுது உதவி செய்யுங்கள்'' என்று முன்பு

கஜேந்திரன் சொன்ன வார்த்தைகள் அவரின் காதில் ஒலித்தன.

காலையில் நல்லம்மா அவரின் வீட்டிற்கு வந்து சொன்னாள் "நீங்கள் உதவி செய்ததால் தான் துஷ்யந்தன் இப்போ உயிரோடு இருக்கிறான். "மிகவும் ஆபத்தான வேளையில் தான் உங்கள் மகனைக் கொண்டுவந்திருக்கிறீர்கள்" என்று வைத்தியர் ஏசினவர். நாளைக்கு துஷ்யந்தனை வைத்தியசாலையிலிருந்து வீட்டிற்குக் கூட்டிவர வேண்டும். வைத்தியசாலைக்குக் கட்ட இன்னும் பத்தாயிரம் ரூபா தேவை. தயவு செய்து தாருங்கோ....."

அவரிடம் அப்போது பணம் இருக்கவில்லை. அதனால் "நீ போ. நான் வீட்டை வாறன்" என்று சொன்னார். இப்போது கஜேந்திரன் வந்திருக்கிறான் "அவனுக்கு என்ன சொல்வது" என்று நினைத்தார் வேலாயுதபிள்ளை.

"நான் கேட்ட பணம் உங்களிடம் இல்லைப் போலத்தெரிகிறது" என்றான் கஜேந்திரன்.

"எப்படிக் கண்டுபிடித்தனீ"

"காசிருந்தால் கதைத்திருப்பீர்கள். ஒருவனுக்குக் கஷ்ரமேற்படும் போது வீடு தேடிச் சென்று உதவி செய்யும் நீங்கள், பேசாமல் இருந்ததால் என்ன அர்த்தம்? தனது செல்வத்தைப் பிறருக்குக் கொடுத்துதவுவால் புகழ் பெற்றவர்கள் சிறிது வறுமை அடைந்தால், அது

உலகுக்குப் பெய்யும் மழை பெய்யாது விட்டதைப் போன்ற துன்பந்தரும்'' என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். தணிகாசலமண்ணையிடம் நிறையக் கடன்பட்டுவிட்டேன். பரமேஸ்வரன் ஐயாவைக் கேட்க விருப்பமில்லை'' என்றான் கஜேந்திரன்.

''இருந்த பணம் செலவாகிவிட்டது. உனக்கு உதவ முடியவில்லையே என்று நினைக்க எனக்குக் கவலையாக உள்ளது. இம்முறை யாரிடமாவது மாறு நான் பின்பு உதவி செய்கிறேன்'' என்றார் வேலாயுதபிள்ளை. அவரது குரல் கரகரத்தது.

---

**1010. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறம்கூர்ந் தனையது உடைத்து.**

---

தான்தேடிய செல்வத்தை மற்றவர்களுக்குக் கொடுத்துதவும் புகழ்பெற்ற செல்வந்தர்கள் சிறிது வறுமைப் பட்டால், அது உலகத்தைக் காக்கும் மேகம் வறுமைப்பட்டு மழை பெய்யாது விட்டதைப் போன்ற தன்மை உடையது.

உண்மையான நாணம்.

விக்னேஸ்வரமூர்த்தி அனாதை இல்லத்தில் இருந்த போது வேலாயுதபிள்ளை அங்கு வந்தார். அப்போது அங்கு இராசையாவும் இருந்தான்.

“வேலாயுதம், நீ செய்த வேலை எனக்குப் பிடிக்கவில்லை. கனகவாத்தியாரின் வீட்டில் வேலை செய்த இராசையாவை நீ தான் இங்கு வேலை செய்ய அழைத்து வந்ததாக அவர் ஊர் முழுக்கச் சொல்லித்திரிகிறார் என்று விக்னேஸ்வரமூர்த்தி சொல்லிக் கொண்டிருக்கும் போது வேலாயுதபிள்ளை குறுக்கிட்டுச் சொன்னார் “ஊர் முழுக்க அவர் சொன்னாலும் யாரும் நம்பமாட்டார்கள். அவர் இராசையாவுக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுக்காததால் தான் அவரின் வீட்டிற்கு இராசையா போகவில்லை என்று தான் கூறுகிறார்கள்”.

“அதை நான் நம்பமாட்டன். கனகவாத்தியாரின் மனைவி மனநோயாளி. சமைக்க மாட்டாள். வீட்டு வேலைகள் எதையும் செய்ய மாட்டாள். இராசையா, கனகவாத்தியாரிடம் பேரனின் நோய்க்கு மருந்து வாங்கப் பணம் கேட்டது உண்மை. அவர் கொடுக்கவில்லை. அதனால் வேலைக்குச் செல்லாது இரண்டு மூன்று நாட்கள் நின்றார். அப்போது நீ கேட்காவிட்டால் இரன்று மூன்று நாட்களில் திரும்பவும் சென்றிருப்பார். நீ தான் அவரைக் குழப்பியது. நல்லவர்கள் தகாத செயல்களைச் செய்வதற்கு வெட்கப்படுவதுதான் நாணம். நீ தகாத அந்தச் செயலைச் செய்யச் சற்றும் வெட்கப்படவில்லை” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி. அவரது வார்த்தைகள் காரசாரமாக இருந்தன.

வேலாயுதபிள்ளை அவர் அப்படிச் சொல்வார் என்று எதிர்பார்க்கவில்லை. தடுமாற்றத்துடன் யோசித்துப் பார்த்தார். அவர்

சொல்வதிலும் நியாயம் இருப்பதைப் போல இருந்தது.

“ஐயா, வேலாயுதத்தில் எந்தத் தவறும் இல்லை. கனகவாத்தியார் வீட்டில் பதினைந்து வருட காலமாக ஏழ்மையால் தான் வேலை செய்து வந்தேன். அவர் ஒருபோதும் எனக்கு ஒழுங்காகச் சம்பளம் தந்ததில்லை. ஏழை மக்கள் நிவாரண அரிசியை கிலோ பத்துப் பதினைந்து ரூபாவுக்குக் கொடுப்பார்கள். அதை வாங்கி எனக்கு முப்பது ரூபாப்படி தருவார். அந்த அரிசியை நான் வேறு யாரிடமாவது வாங்கலாம். அத்துடன் எமக்கும் நிவாரணம் தருகிறார்கள். வேண்டாம் என்று சொன்னால் கூடக்கேட்டமாட்டார். வற்புறுத்தித்தருவார். அதைவிட தென்னந்தோப்பிலுள்ள நல்ல தேங்காய்களை விற்றுவிட்டு கழிவு தேங்காய்களை நல்ல தேங்காய்கள் விற்கும் விலைக்கே எனக்குத் தருவார். இப்படி அவர் செய்யும் அநியாயங்கள் ஒன்றிரண்டு அல்ல. சில வேளைகளில் கடனாகப் பணம் தந்தாலும் அதற்கு வட்டியும் கேட்பார். அன்று நான் வேலைக்குப் புறப்படும் போது எனது பேரன் வலியினால் அவதிப்பட்டான். நான் அவரிடம் பணம் கேட்ட போது அவர் தரமறுத்துவிட்டார். தன்னிடம் வேலை செய்யும் ஒருவனின் கஷ்டத்தைத் தீர்காதவரிடம் வேலை செய்வதில் என்ன பயன் இருக்கின்றது?” கண்கலங்கினார் இராசையா.

“விக்னேஸ்வரமூர்த்திக்கு இராசையா சொல்வதைக் கேட்டதும், அவர் மீது இரக்கம்

பிறந்தது. திரும்பி வேலாயுதபிள்ளையைப் பார்த்தார். அவர் கல்லுப் போல விறைத்துப் போய் இருந்தார்.

“வேலாயுதத்தில் எந்தப் பிழையும் இல்லை ஐயா, அவர் கடவுள் மாதிரி. அன்று எனது பேரனுக்கு வலி வந்தபோது அவரும் தணிகாசலமும் தான் உதவியது. அவர்கள் எனக்குப் பல முறை உதவி செய்துள்ளனர். ஒருமுறை என்றாலும் கனகவாத்தியார் உதவி செய்யவில்லை. அவர் என்னைக் கொடுமைப்படுத்தும் வேளைகளில் நான் சில நாட்களுக்குச் செல்லாது விடுவேன். பின்பு ஏழ்மை காரணமாகச் சென்று விடுவேன். இம்முறை போவதில்லையென்று திடமாகத் தீர்மானித்துவிட்டேன். இங்கு வரவிட்டால் மணிவண்ணன் தனது கடைச் சிப்பந்திகளுக்குச் சமையல் வேலை செய்தவர் காலமாகிவிட்டார் என்று சொல்லி என்னை வரச் சொல்லிக் கேட்டவர். அங்கு நான் போகிறேன்” என்றார் இராசையா.

விக்னேஸ்வரமூர்த்திக்குக் கவலையாக இருந்தது “நான் தான் ஆராயாமல் தகாத வார்த்தைகளைச் சொல்லிவிட்டேன். என்னை மன்னித்துக் கொள்” என்றார்.

வேலாயுதபிள்ளை உருகிப் போனார் “நீங்கள் அல்ல, நல்லவர் வேறு யாராக இருந்தாலும் அப்படித்தான் சொல்வார்கள். பாவம் கனகவாத்தியார். வேலைக்கு ஆள் பிடிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார். வசந்தினி அவரது இனத்தவள். அவள் தான் இப்போது சாப்பாடு கொடுக்கிறாள். பக்கத்தில் மகள் இருந்தும் அவர்

அவளைக் கேட்கவில்லை. அதை குருபரன் தனது பகையைத் தீர்க்கப் பயன்படுத்துகிறார். இப்ப கனகவாத்தியார் வசந்தினியைப் பிடித்துவிட்டார். மனிசியும் விசரி. அவருக்குப் பெண்துணை தேவை தானே'' என்றாராம். ''பார் வேலாயுதம் குருபரன் இப்படிக் கூறித்திரிகிறான்'' என்று சொல்லிக் கவலைப்பட்டார். சகோதரனை இப்படி வெட்கமில்லாமல் சொல்ல அவனுக்கு எப்படி மனம் வந்தது?'' என்று கேட்டார் வேலாயுதபிள்ளை.

**1011. கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்**
**நல்லவர் நாணுப் பிற.**

தகாத செயல்களைச் செய்வதற்கு அஞ்சுவதே நாணமாகும். பெண்களுக்கு இயல்பாக ஏற்படும் நாணம் வேறு வகையானது ஆகும்.

**சிறப்பானது**

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசவில்லை. ''கனகவாத்தியார் எம்மைப் பற்றிக் குறைசொல்வதால் இராசையாவை மணிவண்ணனிடம் வேலைக்கு அனுப்பினால் என்ன?'' என்று யோசித்தார்.

''உங்களுக்கு என்னால் அவமானம் ஏற்படும் என்று கருதினால் நான் மணிவண்ணனிடம் வேலைக்குச் செல்கிறேன். இரண்டு நாட்களுக்கு

முன்பு மணிவண்ணன் எனது வீட்டிற்கு வந்து எனது பேரனைப் பார்த்துவிட்டுப் பணமும் தந்துவிட்டுச் சென்றவர் “இராசையா நீ அனாதை இல்லத்திற்கு வேலைக்குச் செல்ல முன்னம் நான் கேட்டிருக்கவேண்டும். நீ அங்கு சென்ற பின்பு கேட்பது பிழை...” என்றவர். அப்படியான பண்பாளரிடம் வேலை செய்வதில் தான் மகிழ்ச்சி இருக்கு” என்றார் இராசையா.

விக்னேஸ்வரமூர்த்தி வேலாயுதபிள்ளையைப் பார்த்தார் “நீங்கள் விரும்பினால் இராசையாவை மணிவண்ணனிடம் அனுப்புங்கள். அவன் நாம் கொடுப்பதை விடக் கூடச் சம்பளம் கொடுப்பான்” என்றார் வேலாயுதபிள்ளை.

அப்போது மணிவண்ணன் அனாதை இல்லத்திற்கு வேண்டிய உணவுப் பொருட்களை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வந்தான். அவன் தான் அவ் அனாதை இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வழங்குவது.

“என்ன யோசித்துக்கொண்டிருக்கிறியள்?. வேலாயுதண்ணையின் முகம் மாறியிருக்குது. ஏதோ ஒரு பெரிய பிரச்சினை் நடந்து விட்டது போல இருக்கு” என்றான் மணிவண்ணன்.

விக்னேஸ்வரமூர்த்தி சிரித்தார்; “முகமாறுதல்களைக் கொண்டு நடந்த விடயங்களை ஊகித்தறியும் திறமை கொண்டவர்கள் அறிஞர்கள்” என்று நினைத்தவாறு “இராசையாவை நாம் வேலைக்கு எடுத்தமையால் பிரச்சினையாக உள்ளது. கனகவாத்தியார் எம்மில் உள்ள கோபம்

காரணமாக ஊர் முழுக்கக் கேவலமாகக் கதைத்துத் திரிகிறார்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''அவரைத் தான் ஊர்ச் சனம் கேவலமாகக் கதைக்கின்றது. வசந்தினி தானாம் இப்ப சமையல். அதை மறைக்கத்தான் அவர் உங்களைப் பற்றிக் கூசாமல் கதைத்துத் திரிகிறார்'' என்று மணிவண்ணன் கூறிக்கொண்டிருக்கும் போது விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார் ''நல்லவர்கள் தகாத செயலைச் செய்யக்கூடாது என்று மட்டுமில்லை. தகாத வார்த்தைகளைப் பேசவும் கூடாது''

''கனகவாத்தியார் முன்பே பெண்கள் விடயத்தில் பலவீனமானவர். தாம் கற்பித்த மாணவிகளுடன் சேட்டை விட்டதாகப் பலமுறை பிரச்சினைப்பட்டவர்'' என்றார் இராசையா.

''தயவு செய்து இப்படிக் கதைக்காதீர்கள். நாமும் கீழானவர்களைப் போல தகாத வார்த்தைகளைக் கதைத்தால், அவர்களுக்கும் எமக்கும் என்ன வேறுபாடு இருக்கு'' ஆத்திரப்பட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

''தவறு தான். கேள்விப்பட்டதைச் சொன்னேன். அத்துடன் உங்களைப் பற்றி அவர் எனக்கு எத்தனை முறை கேவலமாகச் சொன்னவர். நான் அதை உங்களுக்குச் சொல்லவில்லை'' என்றான் மணிவண்ணன்.

“நாம் சொன்னால் நீங்கள் அதைக்கேட்கமாட்டீர்கள். யாராவது குறை சொன்னால் ‘சொல்லட்டும்’ என்பீர்கள். உங்களைப் பற்றி அவர் கூறும் வார்த்தைகளை வாயால் கூறமுடியாது” என்றார் வேலாயுதபிள்ளை.

“பிறரைப் பற்றித் தரக் குறைவாக விமர்சனம் செய்வது மிகவும் தவறு. அறியாமையால் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் தான், அடுத்தவர்களை விமர்சிக்கிறார்கள். கனகவாத்தியார் உன்னைப் பற்றிக் கூறியதை நீ உண்மையென்று நினைக்கிறாயா...?” என்று வேலாயுதபிள்ளையைப் பார்த்துக் கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

வேலாயுதபிள்ளை சிரித்துவிட்டுச் சொன்னார் “நான் செய்ததைச் சம்பந்தப் பட்டவர்கள் தவறு என்று சொன்னால் தான் நான் கவலைப்படுவேன்.”

“அதே போல எல்லா விடியங்களையும் எடுத்துக்கொள்ளுங்கள். உணவும் உடையும் பிறவும் உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானவை. மக்களுக்கு சிறப்பியல்பாய் விளங்குவது நாணமாகும். ஒழுக்கமாக வாழ்பவன் தான் மனிதன். அதனால் மணிவண்ணா, நீ இராசையாவை அழைத்துச் சென்று வேலை கொடு” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“மிகவும் சந்தோஷம் ஐயா, நான் ஒழுக்கமான ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தேன்.

கனகவாத்தியார் எனக்கு உதவி செய்திருக்கிறார்'' என்று மகிழ்வுடன் கூறினார் மணிவண்ணன்.

இராசையாவுக்குத் துக்கமாக இருந்தது. சிறுபிள்ளைகளுடன் நாலைந்து தினங்கள் பழகியதால் மிகவும் மகிழ்வுடன் இருந்தார் அவர். அவருக்கு அச்சிறுவர்களை விட்டுப் பிரிய மனமில்லாமல் இருந்தது.

''நான் முன்பு சமையல் வேலை செய்தவருக்கு நாலாயிரம் ரூபா சம்பளமாகக் கொடுத்தேன். அதையே உங்களுக்கும் தருகிறேன். நாளைக்கு வாருங்கள்'' என்றான் மணிவண்ணன்.

**1012. ஊண்உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறு அல்ல நாண்உடைமை மாந்தர் சிறப்பு.**

உணவும் உடையும், அவை தவிர்ந்த மற்றவையும் எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை. மக்களுக்குச் சிறப்பியல்பாக விளங்குவது நாண் உடைமையே ஆகும்.

**இருப்பிடம்.**

வேலாயுதபிள்ளை இராசையாவைப் பார்த்தார். அவரது முகம் வாடிச் சேர்ந்திருந்தது ''என்ன இராசையா ஒரு மாதிரி இருக்கிறாய்?. உனது மனதில் உள்ளதைச் சொல்'' என்றார்.

''இங்கு வந்து சிறுபிள்ளைகளுடன் பழகிய பின்பு அவர்களைவிட்டுப் பிரியக் கஷ்டமாக உள்ளது. எனது பேரப்பிள்ளைகளாக நினைத்து

அவர்களிடம் பழகியது தால் அவர்களைவிட்டுப் பிரியக் கவலையாக உள்ளது'' என்றார் இராசையா.

அதைக்கேட்க வேலாயுதபிள்ளைக்குக் கவலையாக இருந்தது. ஆயிரம் ரூபாவைக் கூடுதலாக மணிவண்ணன் கொடுத்தபோதும் அங்கு செல்ல விரும்பாத இராசையாவின் பண்பை எண்ணிப் பார்த்தார்; ''பெற்றோரை இழந்த பிள்ளைகள் மீது அன்பு பாராட்ட ஒருவர் தேவை. அதை இராசையா கட்டாயம் நிறைவேற்றுவார்'' என்று நினைத்தார்.

மணிவண்ணனுக்கும் இராசையாவின் வார்த்தைகள் கவலையை அளித்தன. அந்தச் சிறுவர் இல்லத்தில் தாயையும் தந்தையையும் இழந்த ரகுராமன் என்ற சிறுவன் இருந்தான். நல்லொழுக்கம் மிகுந்த அவனை மணிவண்ணனுக்கு மிகவும் பிடிக்கும். அவன் பொருட்களைக் கொண்டுவரும் போது அவற்றை இறக்குவதற்கு அவன் துணையாக இருப்பான். அத்துடன் மணிவண்ணனோடு கதைப்பான்.

''அண்ணா, எனது பெற்றோரை இழந்த பின் நான், பல கஷ்ரங்களுக்குள்ளானேன். எனது தந்தையின் சகோதரர் ஒருவரின் வீட்டிலேயே தங்கியிருந்தேன். அவர் நல்லவர். ஆனால் அவரின் மனைவி மிகவும் கொடியவள். எனக்கு வயிறாற உணவு தரமாட்டாள். பாடசாலைக்குக் கூட அனுப்புவதில்லை. வீட்டு வேலைகள் அனைத்தையும் நானே செய்வேன். சித்தப்பா காலையில் வேலைக்குச் சென்றால் இரவு தான் வருவார். நான் பாடசாலைக்குச் செல்லாதது கூட

அவருக்குத் தெரியாது. வீட்டு வேலைகள் முழுவதையும் செய்து கொடுத்தாலும் சித்தி திருப்திப்படமாட்டா. வேலைப்பழுவாலும், சித்தியின் கொடுமைகளாலும் நான் வீட்டைவிட்டுச் சென்றுவிட்டேன். வழியில் என்னைத் தற்செயலாகக் கண்ட தணிகாசலம் அண்ணை எனது நிலையை அறிந்து என்னை இங்கு அழைத்து வந்தார். இவ்வளவு நாட்களும் சுவையான உணவுகள் பல எனக்குக் கிடைத்தன. நல்ல ஆடைகள் கிடைத்தன. வசதியான வாழ்வு கிடைத்தது. பாடசாலைக்குச் சென்று கல்வி பயிலும் வாய்ப்புக் கிடைத்தது. அனால் இராசையா அப்பு வந்த பின்பு தான் குறைவில்லாதஅன்பு கிடைத்தது. இப்பொழுது நாம் மகிழ்ச்சியின் உச்சியில் இருக்கிறோம்'' ரகுராமன் கூறிய வார்த்தைகள் மணிவண்ணனின் செவிகளில் ஒலித்தன. அத்துடன் இராசையாவின் வார்த்தைகள் அவனது நெஞ்சைப் பிளந்தது. அவரது கலங்கிய கண்களும், வாடிய முகமும் கெஞ்சம் கவலையைக் கொடுத்தது.

''ஆயிரம் ரூபா சம்பளம் கூடுதலாகக் கிடைக்கிறது உனக்குச் சந்தோஷம் தானே'' என்று கேட்டார் வேலாயுதபிள்ளை.

இராசையா வெகுநேரம் பேசாது நின்றார். அது விக்னேஸ்வரமூர்த்திக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது; ''என்ன பேசாமல் நிற்கிறாய்?. உனக்கு விருப்பமில்லையா..?'' என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

''எனக்கு விருப்பமில்லை ஐயா, மனச்சாந்தியைப் பணம் அளிப்பதில்லை. பணம்,

பதவி, அந்தஸ்து, அதிகாரம் உள்ள எத்தனை பேர் உலகில் மகிழ்வுடன் வாழ்கிறார்கள்? ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு உதவி செய்து வாழ்வது தான் இன்பமானது. இது இல்லாமையால் தான் மக்களில் பலர் பிரச்சினைப் படுகிறார்கள். நான் இங்கு வந்த பின்பு மிகவும் மகிழ்சியாக இருக்கிறேன். சிறுவர்களுடன் பழகும் போது மனதிற்குப் பேரின்பம் கிடைக்கின்றது. ஐயா உயிர்கள் அனைத்தும் உடம்பை இருப்பிடமாகக் கொண்டவை. சால்பு என்று சொல்லப்படுவது நாணம் என்ற நற்பண்பை இருப்பிடமாகக் கொண்டது. நீங்கள் நல்ல பண்புகளை உடையவர். உங்களுக்கு அபகீர்த்தி ஏற்படுமென்று நீங்கள் கருதினால் நான் இன்றே போய்விடுகிறோன். பெற்றோரை இழந்த பிள்ளைகளைப் பணத்திற்காக விட்டுவிட்டுச் செல்ல எனக்கு மனம் வரவில்லை ஐயா'' என்றார் இராசையா.

விக்னேஸ்வரமூர்த்தி திகைத்துப்போனார்; ``பத்துச் சதத்திற்காகப் பிரச்சினைப்படும் மக்களிடையே இராசையா ஏழையானாலும் எவ்வளவு நல்லவர் பண்பானவர், சால்பு என்று சொல்லப்படுகின்ற நாணம் மிகுந்தவர்'' என்று நினைத்தார்.

``இராசையா இங்குள்ள பிள்ளைகள் மீது அளவிற்கதிகமான பாசத்தை வைத்துவிட்டார். ரகுராமன் இவரின் மீது பற்று வைத்துவிட்டான் அதனால் இராசையா வேலையை விட்டுச் சென்றால் பிள்ளைகள் பாதிக்கப்படுவார்கள். இராசையாவும் பாதிக்கப்படுவார். அதனால் அவர் இங்கு வேலை செய்வதுதான் நல்லது'' என்றான் மணிவண்ணன்.

விக்னேஸ்வரமூர்த்தியின் வியப்பு நீங்கவில்லை. அவர் இராசையாவைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

**1013. ஊனைக் குறித்த உயிரெல்லாம்; நாண் என்னும் நன்மை குறித்தது சால்பு.**

உயிர்கள் யாவும் உடம்பை இருப்பிடமாகக் கொண்டுள்ளன. சான்றாண்மை என்று சொல்லப்படுவது, நாணம் என்று சொல்லப்படும். நல்ல தன்மையை இருப்பிடமாகக் கொண்டது.

## நோயான நடை

“கல்வி கற்றவன் தான் அறிவுடையவன் என்றில்லை. மனிதாபிமானம் உள்ளவர்கள் அனைவரும் அறிவுடையவர்கள் தான். அப்படியான அறிவுடையவர்களுக்கு நாணம் அழகு தரும் சிறந்த ஆபரணமாகும். அந்த ஆபரணம் இல்லையென்றால் அவர்களின் பெருமிதமான நடை ஒரு நோயாகும்” என்று நினைத்தார் வேலாயுதபிள்ளை.

“தீயசெயல்களைச் செய்யவும் எண்ணவும் விரும்பாதவர்கள் தான் நாணமுள்ளவர்கள் அறிவுள்ளவர்கள் பெருமையுள்ளவர்கள். இந்த வகையில் இராசையாவும் நாணமுடையவர். கூடுதலான பணங்கிடைக்கும் என்றால் அந்த இடத்திற்குப் பல தில்லுமுல்லுக்கள் செய்து செல்லத் துடிக்கும்

கற்றோரைவிட, கூடுதலாகப் பணம் கிடைத்தும் பாசமேலீட்டால் அங்கு செல்லக் கவலைப்படும் இராசையாவை நினைத்துப் பார்த்தார் விக்னேஸ்வரமூர்த்தி. அவரால் அதை நம்பமுடியாதிருந்தது. அதை நன்குணர்ந்த வேலாயுதபிள்ளை அதனால் தான் இராசையாவை அனாதை இல்லத்தில் சேர்த்தார். அதை உணராத நான் தான் தவறாக நினைத்துவிட்டேன்'' என்று நினைத்தார் விக்னேஸ்வரமூர்த்தி.

''என்னால் ஐயாவுக்குக் கெட்ட பெயர் வருமானால் நான் உடனே செல்கிறேன். ஒழுக்கநெறி தவறாது பிறருக்காக வாழ்ந்துகொண்டிருக்கும் விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவுக்குக் கெட்ட பெயர் என்னால் வரக்கூடாது'' கலங்கினான் இராசையா.

''மனிதன் உயர்ந்த கொள்கைகளைக் கடைப்பிடித்து மனிதத் தன்மையுடன் வாழவேண்டும். இல்லாவிட்டால் அவனில் ஏதோ ஒரு குறை இருப்பதாகவே மற்றவர்கள் நினைப்பார்கள். மனிதன் சுயநலத்துக்காகப் படைக்கப்பட்டவனல்லன். அவன் பிறருக்குச் சேவை செய்வதற்காகப் படைக்கப்பட்டவன். எந்த வேளையிலும் அவன் பிறருக்காக உழைக்க வேண்டும். இளமை பனியைப் போல உருகிக் கரைந்துவிடும். அதனால் முடிந்தளவு சேவை செய்ய ''வேண்டுமென்று கணபதி மத்திய மகா வித்தியாலய நிறுவுனர் அமரர் வைத்திலிங்கம் அடிக்கடி கூறுவதாக நான் அறிந்துள்ளேன். அதே போல இராசையாவும் சேவை செய்ய நினைப்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

அவர் தனது விருப்பப்படி இங்கேயே வேலை செய்யட்டும்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

இராசையா மகிழ்வுடன் சிரித்தார். விக்னேஸ்வரமூர்த்தியை நினைக்க அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. "அவர் எடுக்கும் முடிவுகளைப் பற்றிப் பிறர் சிந்தித்துக் கூடப்பார்க்கமாட்டார்கள்'' என்று நினைத்தார் வேலாயுதபிள்ளை.

மணிவண்ணனுக்கும் இராசையா அனாதைச் சிறுவர் இல்லத்தில் வேலை செய்வது தான் விருப்பமாக இருந்தது. ரகுராமனைப்போல அன்புக்காக ஏங்கித் தவிக்கும் சிறுவர்களுக்குப் பூரண அன்பு செலுத்த சிலரால் மட்டுந்தான் முடியும். அந்த இல்லக் காப்பாளரான தாமோதரம்பிள்ளை சிறுவர்களுடன் மிகவும் கண்டிப்பாக நடந்து கொள்வதாகவும் அவர்களைத் துன்புறுத்துவதாகவும் செய்தி கசிந்திருந்தது.

"இராசையா பிள்ளைகளுடன் மிகவும் அன்பாகப் பழகுகிறார். பெற்றோரை இழந்த பிள்ளைகள் அவரைத் தமது தந்தையாக நினைத்து வாழ்கிறார்கள். இந்த நிலையில் இராசையாவை வெளியே அனுப்பினால் பிள்ளைகளின் மனோநிலை மிகவும் மோசமாகப் பாதிப்படையும் என்று நான் பயந்தேன் அத்துடன் அவர்கள் மீது அன்பு செலுத்தக் கூடிய ஒரு பண்பானவரை நாம் தேடிக்கண்டு பிடிக்கலாமா? என்று நினைத்தேன். நல்ல வேளை விக்னேஸ்வரமூர்த்தி ஐயா மனம் மாறிவிட்டார்'' என்று மகிழ்ந்தார் வேலாயுதபிள்ளை.

“உண்மை தான் ரகுராமன் இராசையா மீது பேரன்பு வைத்திருக்கிறான். தாயையும், தந்தையையும் இழந்து சித்தியிடம் கொடுமைப்பட்ட ரகுராமன் தற்பொழுது மனநிலை தேறி மகிழ்வுடன் பாடசாலைக்குச் சென்று வருகிறான். அவனது மனநிலை மீண்டும் பாதிக்கப்பட்டால் கரைச்சல். அத்துடன் விடுதிக்காப்பாளர் சிறுவர்களுடன் முரட்டுத்தனமாக நடந்துகொள்கிறார். அவரைத் கண்டியுங்கோ” என்றான் மணிவண்ணன்.

“தாமோதரம்பிள்ளையை அழைத்து நான் கதைத்துள்ளேன். அவர் காவல்துறையில் வேலை செய்தவர். குற்றவாளிகளுடன் கடுமையாக நடந்துகொண்டவர். அதனால் சிறுவர்கள் சிறு சிறு குற்றங்களைச் செய்தால், வளர்ந்த பின்பும் பெரும் குற்றங்களைச் செய்வார்கள் என்ற எண்ணத்துடன் கண்டிப்புடன் நடக்கிறாரே தவிர வேண்டுமென்று நடக்கவில்லை. காலப்போக்கில் திருந்திவிடுவார்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“முன்பை விட இப்போ அவர் இளகிய மனதுடன் செயற்படுகிறார். இன்னும் சில நாட்களில் சரிவரும்” என்றார் வேலாயுதபிள்ளை.

**1014.அணிஅன்றோ நாண்உடைமை சான்றோர்க்கு அ.்.து இன்றேல்**
**பிணி அன்றோ பீடு நடை?**

அறிவுடையவர்களுக்கு நாணமே சிறந்த ஆபரணமாகும். அந்த ஆபரணம் இல்லாது அவர்கள் நடக்கும் பெருமிதமான நடை காண்பவருக்கு நோயாகும்.

## பழிக்கு நாணுவோர்.

வேலாயுதபிள்ளையைத் தேடி குருபரன் வந்தார். அவர் வரும்போது வேலாயுதபிள்ளை வீட்டில் ஆறுதலாக இருந்தார்.

‘‘வாற புதன்கிழமை துடக்குக் கழிக்கப்போறன். வியாழக்கிழமை கீரிமலைக் கடலில் அம்மாவினுடைய அஸ்தியைக் கரைத்துவிட்டு அந்திரட்டி செய்யப்போறன். வந்திடுங்கோ’’ என்றார் மயில்வாகனம்.

‘‘வியாகேசரும் வியாழக்கிழமை செய்யப்போகிறாராம். கனக வாத்தியாரும் அன்றைக்குத் தான் செய்யப்போகிறாராம். நாங்கள் எங்கே போவது? மூன்று பேரும் மூன்று நாட்களுக்குச் செய்தால் மூன்று நாட்களுக்குச் சாப்பிடலாம்’’ என்று சிரித்தார் வேலாயுதபிள்ளை.

‘‘கனகனோடை ஒற்றுமையாக எதையும் செய்யமுடியுமே? அதோடை அவன்ரை மோள் ஆரைக்கட்டினதென்று உனக்குத் தெரியும் தானே. அப்படியிருக்க அங்கை கை நனைக்க முடியுமே....? அவன்ரை வீட்டிலை நான் சாப்பிட்டு இருபது வருடம். ஒழுக்கம் என்பது துப்பரவாயில்லை. முன்பும் அவன் அப்படித்தான். பெண்கள் விஷயத்தில் மிகவும் பலவீனமானவன். வசந்தினி ஆட்டக்காரி. வாட்டசாட்டமான ஆம்பிளை என்றால் அவனை எப்பாடு பட்டென்டாலும் பிடித்துப்போடுவாள். அவள் எத்தனை பேருடன்

தொடர்புள்ளவள் என்று உனக்குத் தெரியும். அப்படிப்பட்டவளிட்டை சாப்பாடு வாங்கிச் சாப்பிடுகிறான். ஒழுக்கமுள்ளவன் அப்படிச் செய்வானே? பிறருக்கு வரும் பழிக்காகவும் தனக்கு வரும் பழிக்காகவும் நாணமடைவோரை நாணத்திற்கு உறைவிடமானவர் என்று உலக மக்கள் சொல்வார்கள். இவன் பிறருக்கு வரும் பழிகளைப் பற்றி நாணப்பட வேண்டாம். தனக்கு வரும் பழிக்காவது வெட்கப்படுகிறான் இல்லையே. இப்ப ஊர்ச் சனம் முழுக்க இவனைப் பற்றித் தான் கதைக்கிறார்கள். பணம் இன்றைக்கு வரும். நாளைக்குப் போய்விடும். மதிப்பு, மரியாதை உயிரைப் போன்றது. போனால் வராது. இவன் சாதாரணமானவனென்றால் பரவாயில்லை. படித்தவன். நல்ல குடும்பத்தில் பிறந்தவன்; பாடசாலை விடயத்தில அப்படி நடக்கலாமா...? ஏழை மக்கள் கூடப் பாடசாலைக்கும் கோயிலுக்கும் உதவி செய்ய வேண்டுமென்று நினைத்துத் தம்மாலான உதவிகளைச் செய்கிறார்கள். இவன் பாடசாலையைக் கொள்ளையடிக்க விரும்புகிறான். கோயிலுக்குப் பிள்ளைகள் வெளிநாடுகளிலிருந்து அனுப்பினாலும் அதைக்கூடக் கொடுப்பதில்லை'' பெருமூச்சு விட்டான் குருபரன்.

''சிலற்றை இயல்பு அது. அதை மாற்ற முடியாது'' என்றார் வேலாயுதபிள்ளை.

''இதென்ன வேலாயுதம் புதுக்கதை சொல்கிறாய். மனிதனுக்குக் கட்டுப்பட்டது தான் மற்றதெல்லாம். தன்ரை மனத்தைத் தான் கட்டுப்படுத்த முடியாவிட்டால், அவன் வேறை எதைக் கட்டுப்படுத்துவான்'' என்றான் குருபரன்.

‘‘மனம் சுத்தமாக இருந்தால் சொல்லும் செயலும் தூய்மையானதாக இருக்கும். நல்ல மனதுடன் தான் செய்யப்போகும் செயலைச் சீர்தூக்கிப் பார்த்தால் தான் நல்லது கெட்டது விளங்கும். நிறக்கண்ணாடியூடாகப் பார்த்தால் கண்ணாடியின் நிறம் தெரியுமே தவிரப் பொருளின் உண்மையான தன்மை தெரியாது. தூய மனம் உள்ளவனுக்குத் தனது குறைகள் தெளிவாகத் தெரியும். அவற்றை அவனால் திருத்திக்கொள்ளவும் முடியும். ஆனால் கனகனுக்கு தனது குறைகள் தெரிவதில்லை. மற்றவர்களின் குறைகள் தான் தெரிகின்றன. அதனால் தான் கனகன் அப்படி நடந்து கொள்கிறான்’’ என்றார் வேலாயுதபிள்ளை.

‘‘ஒரு பாமரனுக்கு இதைச் சொன்னால் நான் ஏற்றுக்கொள்வன். படித்த ஒருவனுக்கு உதைச் சொன்னால், சொல்லுறவனில் தான் குறைபாடிருக்கிறது என்று எண்ணத்தோன்றும். இவன், இராசையாவின் விசயத்தில் நடந்து கொண்டது சரியே?. சாதாரணமாகப் படிப்பறிவில்லாதவனே தன்னிடம் வேலை செய்பவனுக்குக் கஷ்ரம் வந்தால் உதவுவான். மணிவண்ணன் எட்டாம் வகுப்புத் வரை தான் படித்தவன். போன மாதம் அவனிடம் வேலை செய்த கனகராசாவின் மகன் விபத்துக்குள்ளான போது அவனது வைத்தியச் செலவு முழுவதையும் மணிவண்ணன் கொடுத்தவன். இராசையா பதினைந்து வருடங்களாக அவனுடைய வீட்டு வேலைகளைச் செய்கிறான். அவன் கேட்ட பணத்தை வட்டிக்காவது கொடுத்திருக்கலாந்

தானே?. இவனை ஒரு மனிதனென்று நீ கதைக்கிறாய்'' ஆத்திரப்பட்டான் குருபரன்.

''ஏனப்பா நீ என்னோடை சண்டைக்கு வாறாய். கனகன்ரை இயல்பான குணத்தை மாற்ற முடியாது என்று சொன்னால் அதற்கேன் கோபிக்கிறாய்'' என்றார் வேலாயுதபிள்ளை.

## 1015. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு உறைபதி என்னும் உலகு.

பிறருக்கு வரும் பழிக்காகவும் தனக்கு வரும் பழிக்காகவும் அஞ்சி நாணுகின்றவர்கள், நாணத்தின் உறைவிட மானவர்கள் என்று உலகத்தவர் சொல்வர்.

### பாதுகாப்பு வேலி.

ரகுராமன் இராசையாவின் மடியில் படுத்திருந்தான். இராசையா அவனது தலைமுடியை அன்புடன் கோதிக்கொண்டிருந்தார். ஐந்து வருடங்களுக்கு முன்பு ரகுராமன் தனது தாயின் மடியில் தலைவைத்துப் படுத்திருந்த இன்பம் அப்பொழுது அவனுக்குத் தோன்றியது.

''அப்பா, இப்படியான ஓர் உயர்ந்த வாழ்வும், அதனால் பெரும் இன்பமும் எனக்குக் கிடைக்குமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. எனது தந்தை வெளியூரில் தொழில் செய்து வந்தார். அதனால் அவர் வீட்டிற்கு வருவது மிகவும் குறைவு. அவர் வீட்டிற்கு வந்தாலும் எம்மோடு அன்பாகப் பழக அவருக்கு நேரங்கிடைக்க

மாட்டாது. நான் அப்பாவின் மடியில் ஒருபோதும் படுத்தது கிடையாது. அம்மாவின் மடியில் தான் படுத்து உறங்குவேன். அதைவிட இந்த மடி எனக்கு இன்பத்தை அளிக்கின்றது. அம்மாவின் அன்பை நினைவூட்டுகின்றது. நான் முற்பிறப்பில் புண்ணியம் செய்தமையால் தான் பண்புகள் நிறைந்த விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவையும்தணிகாசலம் அண்ணையையும் வேலாயுதபிள்ளை அண்ணையையும் தந்தையாய் அடைந்தேன். உங்களைத் தாயாக அடைந்தேன்'' கண் கலங்கினான் ரகுராமன்.

இராசையா உருகிப்போனார். அவரது கண்கள் கலங்கி கண்களால் கண்ணீர் வழிந்தது ''நீ என்ரை பிள்ளையடா.... என்னுடைய இளைய மகன் பன்னிரண்டு வயதில் விசர்நாய் கடித்து இறந்து போனான். அவன் தான் இப்ப உன்னுருவில் வந்து எனது மடியில் படுத்திருக்கிறான். இறக்கு முன் அவனும் உன்னை மாதிரித்தான் எனது மடியில் படுத்திருப்பான்...''விம்மினார் இராசையா.

''நீங்கள் என்னை விட்டுப் போகக் கூடாது. நீங்கள் வேலையை விடுவதானால் என்னை இங்கிருந்து அழைத்துச் செல்லுங்கள்''

''நான் ஏன் வேலையை விடப்போகிறேன். பண்பான உயர்ந்தவர்களிடம் பணியாற்றும் நான் அவர்களை விட்டுவிட்டுச் செல்வேனா...? நீ நன்றாகப் படிக்க வேண்டும். விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவைப் போல நல்ல குணமுள்ள பண்பாளனாக வளர்ந்து மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும். பரந்த உலகில் கிடைக்க

முடியாத அபூர்வமான பொருட்கள் கிடைத்தாலும் விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவைப் போன்றவர்கள் நாணமாகிய பாதுகாப்பு வேலியை தாண்டி எதையும் செய்யமாட்டார்கள். அவரை மாதிரி நீ வரவேண்டும். என்பது தான் எனது ஆசை'' என்றார் இராசையா.

''கட்டாயம் வருவேன் அப்பா. அம்மாவின் மடியில் நான் படுத்துத் தூங்கும் போது அம்மா அரிச்சந்திரனின் கதை சொல்வா. பஞ்சபாண்டவர்களின் கதை செல்வா, பின் ''அவர்களைப் போல நீயும் வாழ வேண்டும்'' என்றும் சொல்வா. எனக்கு அரிச்சந்திரனின் கதைதான் பிடிக்கும். அக்கதையைச் சொல்லும்படி அம்மாவை அடிக்கடி கேட்பேன். முனிவர்கள் எவ்வளவு கொடியவர்கள். மிகவும் நல்லவனாக வாழ்ந்த அரிச்சந்திரனைக் கொண்டு பொய் சொல்லுவிப்பதற்காக அவனுக்கு எவ்வளவு துன்பங்களைச் செய்தனர். ஏனப்பா அப்படிச் செய்தவை?'' ரகுராமன் ஆவலோடு கேட்டான்.

''முனிவர்கள் அரிச்சந்திரனின் பெருமைகளை உலகிற்கு எடுத்துச் சொல்வதற்காகத் தான் அப்படி நடந்தவர்கள். அவர்கள் அப்படிக் கொடுமையாக நடந்தமையால் தான் அரிச்சந்திரனது புகழ் இன்று வரை நிலைத்திருக்கிறது. முனிவர்கள் வலிமை மிக்கவர்கள் சத்தியம் தவறாதவர்கள் அவர்களது செயல்கள் அனைத்தும் உலக நன்மைக்காகவே செய்யப்பட்டன. அவர்கள் எதைச் செய்தாலும்இ எதைச் சொன்னாலும் தீமை உண்டாகாது. நன்மை தான் வரும். அரிச்சந்திரனது கதை உலக மக்களுக்கு எந்த ஆபத்து

நேர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது என்ற இலட்சியத்தைப் புகட்டுவதற்காகவே முனிவர்களால் நடத்திக்காட்டப்பட்டது. அரிச்சந்திரன் உண்மையை நிலைநிறுத்துவதற்காகத் தனது அரசு, சுகபோகங்கள், மனைவி, மக்கள் அனைத்தையும் தியாகஞ் செய்தான். அதனால் ஓர் இலட்சிய புரிசனாக உயர்ந்த அரசனாக உலகில் நிலைபெற்றிருக்கிறான்'' உணர்ச்சிவசப்பட்டார் இராசையா.

''நீங்கள் சொல்வதொன்றும் எனக்கு விளங்கவில்லை அப்பா. எனக்கு விளங்கும்படி சொல்லுங்கள்'' என்றான் ரகுராமன்.

''நான் உயர் படிப்புப் படித்தனானா உனக்கு விளக்கஞ் சொல்ல? இதெல்லாம் உனக்கு இப்போது விளங்காது. வளர்ந்த பின்பு தான் விளங்கும்'' என்றார் இராசையா.

''அப்பா பல நாட்களாக நான் அரிச்சந்திரனது கதையைக் கேட்கவில்லை. இப்போது சொல்லுங்கோ'' என்று கேட்டான் ரகுராமன். இராசையா அரிச்சந்திரனது கதையைச் சொல்லத் தொடங்கினார்.

**1016. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்**
**பேணலர் மேலா யவர்.**

நாணமாகிய வேலியை தமக்குக் காவலாக அமைத்துக் கொள்ளாமல், மேலான மக்கள் பரந்த உலகில் வாழும் வாழ்க்கையை விரும்பி மேற் கொள்ள மாட்டார்கள்.

## உயிரை விடுவோர்.

“நாணத்தைத் தனக்குரிய சிறந்த பண்பாகக் கொண்டவர்கள், நாணத்தைக் காக்க தமது உயிரை விடுவார்களே தவிர, தமது உயிரைக் காக்க ஒருபோதும் நாணத்தை விடமாட்டார்கள் என்பதற்கு உதாரண புரிசனாக வாழ்ந்து காட்டியவன் அரிச்சந்திரன். அரிச்சந்திரன் அன்று ஒரு பொய்யைச் சொல்லியிருந்தால் அவனுக்கு சகல போகங்களும் கிடைத்திருக்கும். பொய் சொல்லக் கூடாது என்பதற்ககாகத் தனது தர்மபத்தினியையும் அன்பு மகனையும் விற்றவன் அரிச்சந்திரன். அத்துடன் அரசனால் பொய்க்குற்றஞ் சாட்டப்பட்ட தனது மனைவியைக் கொல்லத் துணிந்தவன். அவனை மாதிரி மக்கள் இலட்சியத்துடன் வாழவேண்டும் என்பதற்காகத் தான் அவனது சரித்திரத்திரம் எழுதப்பட்டது. அப்படியான இலட்சிய புரிசர்கள் இன்றும் வாழ்கிறார்கள். நீ படிக்கும் பாடசாலையைக் கட்டியவர் அமரர் வைத்திலிங்கம். அவர் மிகவும் நேர்மையாகவும் ஒழுக்கமுள்ளவராகவும் வாழ்ந்து காட்டியவர். அவருக்குப் பலர் துன்பங்களைச் செய்தனர். இருந்த போதும் அவர் கலங்கவில்லை. துணிவுடன் செயற்பட்டார். அவருடைய சீடர் தான் சுவாமியார்” என்றார் இராசையா.

ரகுராமன் ஆர்வத்துடன் அவர் கூறிய கதையைக் கேட்டுக்கொண்டிருந்தான் “சுவாமியார் இளைஞனாக இருந்த காலத்தில் அவரை ஓர் இளம் பெண் விரும்பினாள். ஆனால் சுவாமியார் விரும்பவில்லை. அதனால்

கோபங்கொண்ட அந்த இளம் பெண் சுவாமியார் தன்னுடன் தகாத முறையில் நடந்து கொள்ள முற்பட்டதாக வைத்திலிங்கத்திடம் சொன்னாள். வைத்திலிங்கம் ஸ்ரீனிவாசன் சுவாமிகள் மீது முழுமையான நம்பிக்கை வைத்திருந்தார். இருப்பினும் இளைஞரான ஸ்ரீனிவாசன் சில சமயம் காதல் வசப்பட்டு தவறாக நடந்திருந்தால் அதைப் பெரிதுபடுத்தாமல் இரகசியமாக அப்பெண்ணுக்குச் ஸ்ரீனிவாசனைத் திருமணம் செய்து கொடுக்கலாமென நினைத்து ஸ்ரீனிவாசனைக் கேட்டார். ஸ்ரீனிவாசன் என்னுடன் படித்தவர். மிகவும் நல்லவர் ஒழுக்கமானவர் தவறு செய்யாதவர். எனது நெருங்கிய நண்பர். அதனால் என்னிடம் வந்து சொன்னார் “இராசா, நான் ஒழுக்கக் கேடானவன் அல்லன். என் மீது கொண்ட காதலால் கீதாஞ்சலி, நான் தன்னுடன் தவறாக நடந்துவிட்டேன் என்று கூறுகிறாள். அதை எனது குருவான வைத்திலிங்கமும் நம்புகிறார். அதனால் அவர் என்னை அழைத்து அவளைத் திருமணஞ் செய்து கொள்ளும்படி கூறுகிறார். அதனால் எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. நான் எந்தக் குற்றமுஞ் செய்யவில்லை. என்னைப் பற்றி அவர் தவறாக நினைத்தமையால் நான் இனி உயிர் வாழவிரும்பவில்லை” என்று அழுதார். நான் திகைத்துவிட்டேன். உடனே நான் அதை வைத்திலிங்கத்திற்குச் சொன்னேன். வைத்திலிங்கம் அதிர்ந்து போனார். உடனே அவர் ஸ்ரீனிவாசனிடம் வந்து தனது தவறை ஒப்புக்கொண்டார். பின்பு ஸ்ரீனிவாசன் அப்பெண்ணுடன் தவறாக நடந்து கொள்ளவில்லை என்று அவளது தந்தை ஒப்புக் கொண்டார்.நாணத்தைத் தமக்குரிய சிறந்த பண்பாகக் கொண்டவர்கள், நாணத்தைக் காக்கஉயிரை விடுவார்களே தவிர, உயிரைக்

காக்க ஒருபோதும் நாணத்தைக் கைவிடமாட்டார்கள். நீயும் நல்லவனாக வாழவேண்டும். தீய செயல்களை மறந்தும் செய்யக்கூடாது'' என்றார் இராசையா.

''நான் ஒருபோதும் தீய செயல்களைச் செய்யமாட்டேன். தீயவற்றை எண்ணவும் மாட்டேன்'' என்றான் ரகுராமன்.

ரகுராமனைக் கட்டியணைத்து முத்தமிட்டார் இராசையா.

''ரகு, விக்னேஸ்வரமூர்த்தி, தணிகாசலம், வேலாயுதபிள்ளை போன்றோர் மிகவும் நல்லவர்கள். ஊருக்கு உழைப்பவர்கள். அவர்களைப் பின்பற்றி நீ வாழ வேண்டும்'' என்று இராசையா கூறிக்கொண்டிருக்கும் போது விக்னேஸ்வரமூர்த்தியும் வேலாயுதபிள்ளையும் அங்கே வந்தனர். அவர்களைக் கண்டதும் ரகுராமனும், இராசையாவும் எழுந்தனர். ரகுராமன் விக்னேஸ்வரமூர்த்தியைப் பார்த்தான். அவனுக்கு அவரைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் போல இருந்தது.

''ரகுராமன் என்னவாம்?'' என்று கேட்டார் வேலாயுதபிள்ளை.

''அவனுக்குச் சின்ன வயதில தாயார் தனது மடியில் இருத்திப் பல நீதிக்கதைகளைக் கூறியிருக்கிறார். அரிச்சந்திரனது கதை அவனுக்கு மிகவும் பிடிப்பாம். அதைச் சொல்லச் சொன்னான். சொன்னேன்'' என்றார் இராசையா.

“மிகவும் நல்லது. ஓய்வான வேளைகளில் மற்றைய சிறுவர்களையும் அழைத்து நீதிக்கதைகளைச் சொல்லுங்கள். அக்கதைகள் மூலம் சிறுவர்களின் உள்ளங்கள் பண்படும்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி. அதைக்கேட்ட இராசையாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

**1017. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்பொருட்டால்**
**நாண்துறவார் நாண் ஆள் பவர்.**

நாணத்தைத் தமக்குரிய பண்பாகக் கொண்டவர்கள் நாணத்தைக் காக்க உயிரை விடுவார்களே தவிர, உயிரைக் காப்பதற்காக நாணத்தைக் கைவிட மாட்டார்கள்.

நாணமடையும் அறம்.

கனகனுக்குச் சாப்பாடு சமைப்பதில் பெரும் சிக்கல் இருந்தது. பதினைந்து வருடங்களாக இராசையா சமைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவனது மனைவி நீண்ட காலமாக நோயாளியாக இருந்தமையால் அவள் சமைப்பதில்லை.அத்துடன் அவனிடம் ஏராளமான பணம் இருந்தது. அதனால் அவன் மற்றவர்களைத் தேவை என்று எப்போதாவது நடந்ததில்லை. இராசையா தினமும் சமைப்பதால் இதுவரை காலமும் அவன் சமையலைப்பற்றிச் சிந்தித்ததில்லை. அதனால் அவனுக்குச் சமைக்கத்

தெரியாது. பலரைச் சமையல் வேலை செய்ய வரும்படி கேட்டும் அவர்கள் வரமறுத்து விட்டனர். சமையல் வேலை செய்யும் சின்னாச்சியைக் கனகன் கேட்டான்.

“வாத்தியார், என்னை இப்போது வீடுகளுக்குச் சென்று சமையல் வேலை செய்யப் பிள்ளைகள்விடுகிறார்கள் இல்லை. நான் சமையல் வேலை செய்வது தங்களுக்கு அவமானமாம். அத்துடன் எனக்கு வயது போய்விட்டது” என்றாள்.

“சமையலுக்கு ஒருவரைப் பிடிக்கும் வரை வந்து சமைத்துத்தா. இராசையா திடீரென்று நின்றதாலை கரைச்சலாக இருக்கு. நாலைந்து நாட்களுக்காவது வா” என்று கேட்டான் கனகன்.

“பிள்ளைகள் சம்மதிக்கமாட்டார்கள். நீங்கள் வேறு யாரையாவது பாருங்கோ” என்று கூறிவிட்டு அவரது பதிலை எதிர்பாராது சென்றுவிட்டாள் சின்னாச்சி.

“எங்களது வீடுகளில் கூலிவேலை செய்து பிளைத்தவர்கள். இப்ப கூலிவேலை செய்யப் பிள்ளைகள் விடாதாம். இந்தப் பிள்ளைகளையெல்லாம் வளர்த்தது எமது வீடுகளில் கூலிவேலை செய்து தானே. அவர்கள் இப்போது வெளிநாடுகளுக்குச் சென்று பணம் சம்பாதித்ததால் இப்ப அவை பெரிய மனிதர்களாகி விட்டனர்” என்று கோபத்துடன் வேலாயுதபிள்ளைக்குச் சொன்னான் கனகன்.

‘‘வாத்தியார், எந்தவேலை செய்தாலும் ஓய்வு என்று ஒன்றிருக்கிறது. சின்னாச்சிக்கு அறுபத்தைந்து வயது. மூன்று நேரமும் சமைக்க அந்த மனிசியாலை முடியாது’’ என்றார் வேலாயுதபிள்ளை.

‘‘அப்படிச் சொல்லலாம் தானே. அதைவிட்டுவிட்டுப் பிள்ளைகளுக்கு மரியாதை இல்லையென்று சொல்லலாமா....? இந்தப் பணம் பொருள் எல்லாம் எப்போ வந்தது’’ என்று கேட்டார் கனகன்.

‘‘பணம் பொருளுடன் யாரும் பிறப்பதில்லை. ஒவ்வொருவரும் முயற்சியாலை தான் அதைத் தேடிக்கொள்ளுறவை. என்னுடைய தகப்பனும் தாயும் கூலி வேலை செய்து தான் என்னை வளர்த்தவை. நான் அரசாங்கத்தில கூலியாகத்தான் வேலை செய்தனான். என்ரை பிள்ளைகள் படித்து உயர்ந்துவிட்டார்கள். இப்ப நான் கூலி வேலை செய்தால் பிள்ளைகளுக்கு அவமானம் வருந்தானே. வயது வந்த பிறகும் பெற்றோரைக் கூலிவேலை செய்ய விடுகிறார்கள் என்று ஊரவர்கள் கதைப்பார்கள். அதற்குப் பிள்ளைகள் பயப்படுவார்கள் தானே’’ என்றார் வேலாயுதபிள்ளை.

‘‘நான் பத்துப் பதினைந்து பேரைக் கேட்டிட்டன். ஒருதரும் சம்மதிக்கிறார்களில்லை’’ கவலைப்பட்டான் கனகன்.

‘‘நாம் நல்ல முறையில் நடந்தால், மற்றவர்களும் நல்ல முறையில் நடப்பார்கள்.

உங்களது தாயாரின் கிரிகைகளை உங்களால் ஒற்றுமையாகச் செய்ய முடியவில்லை. நீங்கள் வீட்டில் சமைப்பதற்கு ஆளில்லை என்று கோயிலில் கிரிகைகளைச் செய்தீகள். உங்களது சகோதரர்கள் தத்தமது வீடுகளில் தனியாகச் செய்தனர். நீங்கள் அவர்களுடன் ஒற்றுமையாக இருந்தால் சகோதரங்களுடன் சேர்ந்து செய்திருக்கலாம் தானே. பாசமிருந்தால் எதையும் செய்யலாம். ஒரு தாய் வயிற்றில் பிறந்த நீங்களே சாதியில் நான் பெரியவன், அவன் கீழானவன் என்று சொல்கிறீர்கள். ஏன் நீங்கள் உங்களின் சகோதரர் வீட்டில் சாப்பிடக்கூடாது. சின்னாச்சியும் இராசையாவும் என்ன சாதி கோவியர்..? அவர்கள் சமைக்கிறதைச் சாப்பிடலாமென்றால் அவையினுடைய சபையில் இருந்து சாப்பிட்டாலென்ன...?''

''வேலாயுதபிள்ளையின் வார்த்தைகள் கனகனுக்குக் கோபத்தை வரவழைத்தது. இருந்தும் அவரால் கோபத்தைச் சாதிக்க முடியவில்லை.

''பிறர் வெட்கப்படும் படியான இழிவான செயல்களை ஒருவன் சிறிது கூட நாணமில்லாமல் செய்வானேயானால், அறம் நாணமடைந்து அவனைக் கைவிட்டுவிடும்'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதுசரியென்று உங்களது நடவடிக்கைகளிலிருந்து தெரிகிறது. ஊரில் கூலி வேலை செய்ய ஆட்களுக்குப் பஞ்சமா என்ன?'' என்று கேட்டார் வேலாயுதபிள்ளை.

அதற்குக் கனகனால் பதில்கூறமுடியவில்லை. தலை குனிந்தான்.

**1018. பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்**
**அறம்நாணத் தக்கது உடைத்து.**

பிறர் வெட்கப் படும் படியான இழிவான செயலை ஒருவன் சிறிதும் நாணமில்லாது செய்வானே யானால், அறம் நாணமடைந்து அவனைக் கைவிட்டுச் செல்லும்.

நன்மை அழிக்கும்.

"கொள்கைகள் இல்லாத வாழ்க்கை திசையறி கருவியில்லாது செல்லும் கப்பலைப் போன்றது. ஒரு மனிதனைவிட்டு தனம், கீர்த்தி, பெருமை யாவும் வெளியே செல்லலாம். ஆனால் நல்லொழுக்கம் வெளியேறினால் அந்தக் குடும்பத்தின் சகல சௌபாக்கியங்களும் வெளியேறிவிடும். நல்லொழுக்கமிருந்தால் மற்றைய எல்லாச் செல்வங்களும் அவனை வந்தடையும். நீங்கள் பாடசாலைக் காணி விடயத்தில் நடந்து கொண்ட முறை சரியானது தானா என்று ஒருமுறை நினைத்துப் பாருங்கள். பாடசாலைக் காணியை ஒரு பெண்தானே பராமரித்தது. அக்காணிக்குள் நின்ற தென்னை மரங்களில் தேங்காய் பறித்தது அந்தப் பெண்தானே. அந்த வளவில்நின்ற தென்னை மரங்களில் கள்ளுச் சீவியவன் அந்தப் பெண்ணிடந்தானே அனுமதி பெற்றான். அத்துடன் அதற்கான பணத்தையும் அந்தப் பெண்ணிடந்தானே கொடுத்தான். தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத்தில் அதற்கான பதிவுகள் யாவும் உள்ளன. நீங்கள் உங்களது பணபலத்தால் அப்பெண்ணை

அக்காணியிலிருந்து வெளியேற்றினீர்கள். அப்பெண் அக்காணியை உரிமை கொண்டாடும்போது எப்படிக் கல்வித் திணைக்களம் விக்னேஸ்வரமூர்த்தியைப் பணம் கொடுக்க அனுமதிக்கும்...?'' என்று கேட்டார் வேலாயுதபிள்ளை.

''நீங்கள் எல்லோரும் விக்னேஸ்வரமூர்த்திக்காகத் தான் கதைக்கிறீர்கள்''

''இல்லை, நாம் நியாயத்தைக் கதைக்கிறோம். விக்னேஸ்வரமூர்த்தி ஒரு போதும் நியாயம் தவறி நடக்கமாட்டார். நல்ல செயல்களைச் செய்வதன் மூலம் நாம் முன்னேற்றமடையலாம். பணம், பொருள் மனிதர்களை விட உயர்ந்தது அல்ல. உங்களிடம் ஏராளமான பணம் இருக்கிறது. அதனால் என்ன பிரயோசனத்தை நீங்கள் அடைந்தீர்கள். பணமுள்ளவன் பண்பாக நடந்தால் தான் மற்றவர்கள் மதிப்பார்கள். தேவைக்கதிகமான பணத்தை வைத்திருப்போர் தீய குணங்களுக்கு அடிமையாகாது நல்ல செயல்களுக்காக அதைப் பயன்படுத்துதல் வேண்டும். அப்படிப் பயன்படுத்தினால் எல்லோரும் மதிப்பார்கள். நல்ல முறையில் வாழ்பவர்களுக்கு கஷ்ரம் ஏற்பட விடமாட்டார்கள். ஒருவன் கொள்கை தவறினால் அவனது குலப்பெருமை கெட்டுவிடும். ஆனால் நாணம் தவறினால் அது நன்மைகள் அனைத்தையும் அழிக்கும். செய்த தவறுகளை உணர்ந்து இனியாவது திருந்தி நடக்க முயற்சி செய்தால் தான் எஞ்சிய காலத்தையாவது மகிழ்வுடன் கழிக்கலாம். இல்லாவிட்டால் கஷ்டப்பட நேரிடும்'' என்றார் வேலாயுதபிள்ளை.

“அப்ப பாடசாலைக்கு காசைத் திருப்பிக் கொடுக்கச் சொல்கிறாயா? உனது கதை அப்படித்தான் இருக்கிறது” என்றான் கனகன்.

“விக்னேஸ்வரமூர்த்தி தனது பணத்தைத்தான் நீதிமன்றத்தில் கட்டினவர். நீ அதைத் திருப்பிக் கொடுத்தாலும் வாங்கமாட்டார். சீராளனும் சிங்காரமும் உன்னிடம் காசு வாங்கினவர்களா...?” வேலாயுதபிள்ளை சொல்லும் போது கனகன் குறுக்கிட்டுக் சொன்னான் “எனக்கு யாரிடமும் கடமைப்பட விருப்பமில்லை. அவர்கள் எனது இனத்தவர்களா எனக்கு உதவி செய்ய? கூலிக்காரர் யார் சாவார்கள் என்று எதிர்பார்த்திருப்பவர்கள். அதனால் தான் அவர்களுடைய கூலிப்பணத்தைத் தெருவில் வீசிவிட்டு வந்தேன்”.

“அந்தப் பணம் தீயது என்று நினைத்து ஒருவர் கூட அதைக் கையால் தொடவில்லை. தொழில் செய்தால் சம்பளத்தை ஒழுங்காகக் கொடுக்க வேண்டும். உனது பணத்தின் மீது ஆசைப்பட்டுத் தொழில் செய்பவர்களானால் நீ சமையலுக்கு ஆள் தேடித் திரியத் தேவையில்லை. விக்னேஸ்வரமூர்த்திக்கு ஓராள் தேவையென்றால் பத்துப் பேர் வருவார்கள்” என்றார் வேலாயுதபிள்ளை.

கனகனின் முகம் சிவந்தது “நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து

என்னைப்பழிவாங்க நினைக்கிறீர்கள் அது உங்களால் முடியாது'' என்றான் கனகன்.

``நாம் ஏன் உங்களைப் பழிவாங்க நினைக்கிறோம்?. இந்தக் கிராமத்தில் உங்களால் என்ன செய்ய முடியும்? உங்களிடம் என்ன திறமை இருக்கின்றது. சேவை செய்தால் தான் பெருமை வரும். சேவை செய்பவர்கள் தான் இன்பத்தை அனுபவிப்பார்கள். மற்றவர்களுக்கு அது புரியாது. ஒருவன் வாழும் முறையைப் பொறுத்துத் தான் சுகதுக்கங்கள் உண்டாகின்றன. ஒருவன் துன்பப்படும் போது இன்னொருவன் உதவவேண்டும். அப்படி யாரும் உதவவில்லை என்றால் அவன் வாழ்ந்த வாழ்க்கை முறையில் ஏதோ ஒரு தவறு ஏற்பட்டிருக்கின்றது என்று தான் கருதவேண்டும்'' என்றார் வேலாயுதபிள்ளை.

---

**1019. குலம்சுடும் கொள்கை பிழைப்பின்; நலம்சுடும்**
**நாணின்மை நின்றக் கடை.**

---

ஒருவன் கொள்கை தவறினால் அத்தவறு அவனுடைய குடிப்பெருமையைக் கெடுக்கும். ஆனால் நாணம் தவறினால் அது அவனை வந்தடையும் நன்மைகள் அனைத்தையும் அழிக்கும்.

மரப்பொம்மை

சங்கரலிங்கம் கனகனின் வீட்டிற்கு வந்தபோது கனகன் குளித்துவிட்டு வந்தான்.

“இனித்தான் மத்தியானச் சாப்பாடு போலத் தெரிகிறது” என்றான் சங்கரலிங்கம்

“ம், வசந்தினி தான் கொண்டுவந்து தந்தவள். அதற்கும் இந்தச் சனம் எத்தனை கதைகளைக் கதைக்குது” என்றான் கனகன்.

“உங்களது சகோதரர்கள் தான் அவளைப் பற்றிக் கேவலமாகக் கதைக்கிறார்கள். குருபரனுக்கு உங்களில் சரியான கோவம். அதை இதில் தீர்க்கிறார்” என்றான் சங்கரலிங்கம்.

“பாரடாப்பா என்ரை நிலைமையை. காசுகொடுத்தாலும் யாரும் எனக்கு வேலை செய்ய வருகிறார்கள் இல்லை. வேலாயுதத்திற்கும், விக்னேஸ்வரமூர்த்திக்கும் பயந்து தான் இவங்கள் எனக்கு வேலை செய்ய மறுக்கிறாங்கள். இரண்டு பேரும் படுகள்ளர். தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிடும் பேர்வழிகள். ஊருக்கு உதவிகள் செய்வது போல நடித்து ஊர்ப்பணத்தை எல்லாம் கொள்ளையடிக்கிறார்கள். இதைச் சனம் கவனத்தில் எடுப்பதில்லை. மயக்கு வார்த்தைகளை நம்பி ஏமாந்து விடுகிறார்கள். சனந் திருந்தாதவரை ஏமாற்றுக்காரர் தமது வித்தைகளைக் காட்டிக்கொண்டிருப்பார்கள்” என்றான் கனகன்.

“நீங்கள் தான் சரி. விக்னேஸ்வரமூர்த்திக்குச் சரியான பாடம் கற்பித்து விட்டீர்கள். நீங்கள் சொன்னது போல வட்டிக்காசும் வாங்கி, நீதிமன்றச் செலவு காசும்

வாங்கிவிட்டீர்கள்'' பெரிதாகச் சிரித்தான் சங்கரலிங்கம்.

''அப்பொழுது அங்கே வந்த சிங்காரம் சொன்னான் ''கடவுளை ஒரு நாளும் ஏமாற்ற முடியாது. உன்ரை மகன் தரம் ஐந்து பரீட்சையில் சித்தியடையவில்லை என்று தானே முதலில் பெறுபேறு வந்தது. விக்னேஸ்வரமூர்த்தி ஐயா பரீட்சைப் பகுதிக்கு எழுதியதாலை தான் உனது மகன் சித்தியடைந்ததாகப் பெறுபேறு வந்தது'' சிங்காரம் கதைத்துக்கொண்டிருக்கும் போது சங்கரலிங்கம் குறுக்கிட்டான் ''அது அவருடைய கடமை'' என்று சங்கரலிங்'கம் கூறும் போது சிங்காரம் குறுக்கிட்டான்; ''ஓ, நீங்கள் எல்லோரும் கடமையைத் தானே செய்கிறீர்கள். உன்ரை மகனுடைய எதிர்காலம் இதோடு முடிந்துவிட்டதா....? விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவுக்குத் துரோகம் செய்தவை ஒருபோதும் தப்பிப்பிழைக்க முடியாது. உன்ரை மகன் அழிந்துபோவான்'' என்றான் சிங்காரம்.

சிங்காரம் அப்படிச் சொன்னதால் சங்கரலிங்கத்திற்குக் கவலை உண்டானது.

''இதைச் சொல்லவே உனக்குக் கவலையாக இருக்கு. நீ செய்கிற தீய செயல்களால் எத்தனை பேர் துன்பப்படுவினம். செத்தவீட்டிற்கென்று விக்னேஸ்வரமூர்த்திக்காகத் தான் நானும் சீராளனும் விறகு தறித்து அடிக்கினனாங்கள். நீ நீதிமன்றத்திற்கு அவரை

இழுத்துப் பழி வாங்கின போதும் அவர் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார்''

''எல்லாம் நடிப்பு. ஊரவர்களுக்குத் தான் பெருந்தன்மையாளர் என்று காட்டிக் கொள்ள இன்னும் எத்தனையோ செய்வார்'' என்றான் கனகன்.

''மனதில் நாணமில்லாதவன் உலகில் நடமாடுவது மரத்தால் செய்த பொம்மைகுக் கயிறு கட்டி ஆட்டி உயிருள்ளது போலக் காண்பிப்பது போன்றது. என்று சொன்ன சிங்காரம் சிறிது நேரம் பொறுத்துச் சொன்னான் ''முத்தையா உனக்கு வீட்டுவேலை செய்யச் சம்மதிக்கிறான். ஏழாயிரம் ரூபா சம்பளமாகக் கொடுப்பாயா...?''

''ஒரு வருடச் சம்பளமோ...?''

சிங்காரம் சிரித்தான் ''உனக்கு வசந்தினியின் சாப்பாடு இனிக்குது. அவள் வீட்டுக்கு வந்தாலென்றால் திருமகள் வந்த மாதிரி. இப்ப ஒரு நாள் கூலி எவ்வளவு தெரியுமா...? ஐநூறு ரூபா உனக்குக் காலையில் ஆறு மணிக்கு வந்து இரவு எட்டுமணி வரை வேலை செய்ய ஆயிரம் ரூபா தர நினைக்கிறாய். மாதத்தில் மூன்று நாட்களுக்குக் கூலி வேலை செய்தால் நீ தாற சம்பளத்தை உழைக்கலாம் என்றான். சிங்காரம்.

கனகன் எதுவும் பேசவில்லை. ''சங்கரலிங்கமும் நீயும் சேர்ந்து தான் ஊரைப் புரட்டுறனீங்கள். ஏன் சங்கரா நீ கனகனுக்குச் சாப்பாடு கொடுத்தால் என்ன....?''.

“நீ ஏன் இப்ப இஞ்ச வந்தனி? உன்னை யார் கூப்பிட்டது? குடித்தால் வீட்டை போய்ப்படு” என்றான் சங்கரலிங்கம்.

“நான் வீதியால் செல்லும் போது இரண்டு பேரும் ஏதோ கள்ளத் திட்டம் போட்டியள். என்னவென்று அறியலாமென வந்தேன். இரண்டு பேரும் செய்கிற அநியாயங்களுக்கு விரைவில் முடிவு காலம் வரும். உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிப்பான்” என்று பாடியவாறு சிங்காரம் நடந்தான்.

“இவனை வேலாயுதம் தான் ஏவி விட்டிருக்கும்” என்றான் சங்கரலிங்கம்.

---

**1020. நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை**
**நாணால் உயிர்மருட்டி யற்று.**

---

மனத்தில் நாண மில்லாதவர்கள் உலகத்தில் வாழ்வது, மரத்தால் செய்த பாவையைக் கயிறு கொண்டு ஆட்டி உயிருள்ளதாகக் காட்டுவதைப் போன்றது.

**சிறந்த பெருமை**

உற்சாகம் இல்லாமல் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் கஜேந்திரனைச் சினத்துடன் கேட்டாள் வித்தியா் “வந்த நேரம் முதல் வானத்தையும் என்னையும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்று உங்களுக்கு என்ன நடந்தது?”

உதடுகள் பிரியாமல் புன்னகைத்தான் கஜேந்திரன். அப்படி அவன் புன்னகைத்தால் மனதில தீர்க்கப்பட முடியாத விடயங்கள் அடங்கியிருக்கின்றன என்று அர்த்தம். ‘‘உற்சாகம் இல்லாமல் இருக்கிறீர்கள். தாடியை மழிக்கும் படி எத்தனை தடவைகள் கூறியிருக்கிறேன். முள்ளம்பன்றி முள் போல முகத்தில் முடிகள் நீட்டிக் கொண்டிருக்கின்றன. மற்றைய நாட்களில் அழகாக ஒழுங்குபடுத்தியிருப்பீர்கள். இன்று எல்லாம் தலை கீழாக இருக்கிறது. உங்களது முகத்தைப் பார்க்க அருவருப்பாக இருகின்றது’’

‘‘அப்ப பார்க்காது விடும்’’ சிரித்தான் கஜேந்திரன்.

ஒரு கனத்தில் வித்தியாவின் கண்கள் கலங்கி முத்துக்களாக பொலபொலவென உதிர்ந்தன; ‘‘என்ன...? என்ன..?’’ பரபரத்தான் கஜேந்திரன். ‘‘நான் என்ன சொல்லிவிட்டேன் என்று அழுகிறீர். எனது முகத்தைப் பார்க்க அருவருப்பாக இருக்கிறது என்றீர். அதனால் தான் பார்க்கவேண்டாம் என்றேன்’’. வித்தியாவின் கையைப் பிடித்தான் கஜேந்திரன்.

அவள் எதுவும் பேசாது அவனது நெஞ்சில் சாய்ந்து விம்மினாள்.

‘‘இன்று உம்மைச் சந்திப்பேன் என்று நான் எண்ணவில்லை. உம்மைச் சந்திப்பதற்காக வந்தால் தான் நான் எனது தாடியை வெட்டி ஒழுங்குபடுத்திவருவேன். இன்று இந்தப் பாதையால்

செல்லும் போது உம்மைக் கண்டேன். அதனால் தான் தாடியை ஒழுங்கு செய்யவில்லை''.

''பல்கலைக்கழகத்தில் படிக்கும் நீங்கள் தினமும் தாடியை சீர் செய்து, அழகாக வைத்திருக்க வேண்டும்'' என்றாள் வித்தியா.

''அதற்கெல்லாம் எனக்கு எங்கே நேரமிருக்கிறது?. காலையில் சமையல். பின் அம்மாவைக் கவனிக்க வேண்டும், தோட்டத்திற்குச் செல்ல வேண்டும், பல்கலைக்கழகத்திற்குச் செல்ல வேண்டும். பின் இரவு பத்து மணி வரை பரமேஸ்வரனின் தொழிற்சாலையில் வேலை செய்ய வேண்டும். இவற்றுக்கு மத்தியில் நான் எப்படிக் கண்ணே தாடியைத் தினமும் சீர் செய்ய முடியும்''.

''அதற்காகத்தான் மழித்து விடும்படி கூறுகிறேன்'' என்றாள் வித்தியா.

''எமது திருமணம் நிச்சயிக்கப்பட்ட பின்பு தான் தாடியை மழிப்பேன். அதுவரை அது உமது நினைவாக எனது முகத்தில் இருக்கட்டும்''.

''நீங்கள் பாவம். உங்களுக்கு எவ்வளவு வேலைகள். எப்படி இவற்றையெல்லாம் செய்கிறீர்கள்?'' என்று கலங்கினாள் வித்தியா.

''அன்பே, தன் குடும்பப் பெருமைக்குரிய கடமைகளைச் செய்ய ஒரு போதும் தவறமாட்டேன் என்று ஒருவன் முயற்சி மேற்கொள்கின்ற பெருமையைவிடச் சிறந்த

பெருமை உலகில் எதுவும் இல்லை. எனது தந்தையார் ஒரு விவசாயி. போதிய வருமானம் இல்லாதவர். தாய் நோயாளி. அவரைக் கவனித்தல் வேண்டும். அம்மாவின் நோய் தீர்க்க மருந்து வகைகள் வாங்க வேண்டும். அதற்காக இரவிலும் உழைக்கிறேன். நான் படித்தால் தான் எனது குடும்பம் பெருமையடையும். உம்மை ஒரு வைத்தியருக்குத் திருமணம் செய்து வைக்க உமது தாயார் எண்ணியிருக்கிறார். அவருக்குச் சமனான உத்தியோகத்தனாக வரவேண்டும் என்று எண்ணித் தீவிரமாக படிக்கிறேன். அப்பொழுது தான் உம்மையும் எமது பிள்ளைகளையும் நல்ல முறையில் வாழ வைக்க முடியும். எனது தந்தை தன் குடும்பப் பெருமைக்குரிய கடமைகளை நல்ல முறையில் செய்திருந்தால் நான் கஷ்ரப்பட்டிருக்க மாட்டேன்'' என்றான் கஜேந்திரன்.

''வித்தியா நெருக்கமாக அரக்கி வந்தாள். அந்த நெருக்கம் கஜேந்திரனை உணர்ச்சி வசப்படச் செய்தது. ''நீர் இன்று அழகாக இருக்கின்றீர்'' என்றான்.

''நான் அழகாக இருக்கிறேன் என்று சொல்ல வேண்டாம் என்று எத்தனை தடவை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். ஆண்கள் பெண்களை ஏமாற்றுவதற்காக இப்படிச் சொல்வார்கள். இதை நம்பக்கூடாது என்று அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். அதைவிட உள்ள அழகு தானே என்னிடம் இருக்கும். அது எப்படிக் கூடிக் குறையும்'' வித்தியா சீறினாள்.

“உள்ள அழகுதான் இருக்கும். ஆனால் பார்வையின் தன்மை வேறுபட்டிருக்கும். நீர் இன்று என்ன சொன்னீர் நினைத்துப் பாரும்”

“என்ன சொன்னான்?” யோசித்தாள் வித்தியா.

“இன்று என்னைப் பார்க்க அசிங்கமாக இருக்கிறது என்றீர். முன்பு உள்ளது போலத்தானே நான் இன்றும் இருக்கிறேன்”.

“இல்லைத் தாடி வளர்ந்திருக்கின்றது”.

“அது போல உமது அழகு இன்று கூடி இருக்கின்றது”.

“உமது இன்றைய நினைவைக் கவிதையாகக் கூறுகிறேன்” என்ற கஜேந்திரன் கவிதை ஒன்று சொன்னான்.

வித்தியா கஜேந்திரனை பாசம் பொங்கப் பார்த்தான். உடல் சிலிர்த்து உணர்வுகள் பொங்கின.

“மனிசி தன்னுடைய அழகைப்பற்றிச் சொல்லக்கூடாதென்றால் ‘சொல்’ என்றுதான் அர்த்தம்” சிரித்தான் கஜேந்திரன். சிணுங்கினாள் வித்தியா.

“ஓங்கிய மூங்கில் மெல்லிய தோளாம்
தளிரை மிஞ்சும் மேனியின் பசுமை

முத்தாய் ஒளிரும் முக்கனிப் பற்கள்
மலரைப் பழிக்கும் மன்மத மோகினி
வேலை விஞ்சிய கூரிய கருவிழி
கொண்ட எந்தன் கோகுலவாணி''

**1021. கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுஉடையது இல்.**

தனது குடிப்பெருமைக்கு உரிய கடமைகளைச் செய்வதற்கு ஒரு போதும் சோர்வு அடைய மாட்டேன். என்று ஒருவன் முயற்சி செய்கின்ற பெருமையை விட மேலான பெருமை வேறு எதுவும் இல்லை.

**உறுதியுடைய முயற்சி.**

அன்று இராசகோபால் கட்டிய புதிய மாடிவீடு குடிபுகுதல் விழா நடந்தது. அந்தக் கிராமம் அன்று இராசகோபாலின் வீட்டில் கூடியிருந்தது; ''இராசகோபால் திருந்தியது தான் திருத்தம். ஒரு வருடத்திற்கு முன் அவனது மனைவி வள்ளியம்மை பிள்ளைகளைத் தூக்கிக் கிணற்றில் போட்டுவிட்டுத் தானும் குதிக்கப்போறன் என்றவள். அதைக் கேள்விப் பட்டு நீங்கள் இராசகோபாலின் வீட்டிற்குச் சென்று கம்பால் அவனை அடித்தீர்கள். அந்த அடியால் தான் அவன் திருந்தியவன். கலியாணம் கட்டிப் பத்துப்

பன்னிரண்டு வருடங்கள் உழைக்காமல் தெருத்தெருவாக அலைந்தவன், இன்றைக்கு மாடி வீடு கட்டிக் குடி புகுந்துள்ளான். அதை நினைக்க மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்றார் வேலாயுதபிள்ளை.

தணிகாசலம் பூரண மகிழ்வுடன் சிரித்தார் ''பாவம் வள்ளியம்மை அவளுடைய கஷ்ரம் சொல்லக் கூடியதில்லை. அவள் கூலி வேலைகளுக்குச் சென்று ஐந்தைப் பத்தைக் கொண்டுவர அவன் அதைக் களவெடுத்துக் கொண்டு போய்விடுவான். அவள் வாழைத்தோட்டத்திற்கு நீர் பாய்ச்ச, அவன் வாழைக்குலையை வெட்டி விற்றுவிடுவான். பிள்ளைகளுக்குப் பாடசாலைக்கு வேண்டிய உபகரணங்கள் எதுவும் வாங்கிக் கொடுப்பதில்லை. பிள்ளைகள் பாடசாலையில் மற்றப் பிள்ளைகளின் உபகரணங்களைக் களவெடுத்துவிடுவார்கள். அதனால் தினமும் பிரச்சினை. இப்ப இராகோபால் பாடசாலைக்கு எவ்வளவு உதவி செய்கிறான் தெரியுமா...? கண்படக்கூடாது'' என்றார் தணிகாசலம்.

''சிறந்த முயற்சி, நிறைந்த அறிவு என்பனவற்றுடன் இடைவிடாது முயற்சியில் ஈடுபட்டால் எந்தக் குடியும் உயர்வடையும். இராசகோபால் நன்றாகப் படித்தவன். அதைவிட வள்ளியம்மை படித்தவள். அந்த நேரம் க.பொ.த சாதாரணப் பரீட்சையில் இந்த மாவட்டத்தில் அவள் தானே சிறந்த பெறுபேற்றைப் பெற்றவள். அவளை உயர்தரப் பரீட்சை எடுக்க விடாமல் இவன் கூட்டிவந்துவிட்டான். வள்ளியம்மையின் தாய் மனிசி சாகும்வரை அதைச் சொல்லிச் சொல்லி அழுதது.

அவள் படித்திருந்தால் இன்றைக்குப் பெரிய பதவியில் இருந்திருப்பள். ஆனால் இன்று பெரும் படிப்புப் படித்தவர்களைவிட இராசகோபால் வசதியாக இருக்கிறான்'' என்றார் வேலாயுதபிள்ளை.

அப்போது கஜேந்திரன் அங்கு வந்தான்; ‘‘கஜேந்திரன் இல்லாவிட்டால் வள்ளியம்மை பெரும் கஷ்டப்பட்டிருப்பள். அவன் அவளைத் தனது சகோதரியாக எண்ணி எவ்வளவு உதவிகளைச் செய்தவன். கஜன் இப்படி உயர்ந்த நிலைக்கு இராசகோபால் வருவானென்று நீ நினைத்தனியா...?'' என்று கேட்டார் தணிகாசலம்.

கஜேந்திரன் சிரித்தான். அவனது கண்களுக்கு அவர்கள் குடியிருந்த அந்தப் பழைய வீடு தெரிந்தது. பதினைந்து இருபது வருடகாலமாகச் சுண்ணாம்மையே காணாத சுவர், குன்றும் குழியுமான தரை, உக்கிப்போன கூரை, எப்பொழுது பொறிந்துவிடும் என்று சொல்ல முடியாத வெடிப்புக்கள் மிகுந்த சுவர், மழைக்காலங்களில் தகரப்பேணிகளை வைத்து மழைநீரைச் சேகரிக்கும் நிலை. அந்த நினைவுடன் இராசகோபாலின் புதிய மாடி வீட்டைப் பார்த்தான் கஜேந்திரன். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. பல வர்ணப் பூச்சுக்களை உடைய சுவர். கூரையில் அழகான மின்விசிறிகள். பளிங்கு போன்ற தரை, வீடு முழவதும் ஒளிரும் வண்ணவண்ண மின்குமிழ்கள். இதெல்லாம் இராசகோபாலின் உழைப்பின் பரிசு'' என்று எண்ணியவாறு வீட்டுக்குள் சென்றான் கஜேந்திரன்.

“வா, கஜன். இப்பத்தான் உனக்கு நேரம் கிடைத்ததா....? என்னை மனிசனாக்கியவன் நீ. நீயே பிந்தி வந்தால் எப்படி?. பந்தியில் அமர்ந்து சாப்பிடு” என்றான் இராசகோபால்.

கஜேந்திரன் புன்னகைத்தவாறு இராசகோபாலைப் பார்த்தான். அவன் மாப்பிளையைப் போல பட்டு வேட்டியும் பட்டுச் சட்டையும்அணிந்திருந்தான். அவனுக்கு அருகில் வள்ளியம்மை கன்னிப் பெண்ணைப் போலப் பொலிவுடன் நின்றாள். அரசகுமாரியைப் போல விலையுயர்ந்த பட்டுச்சேலை அணிந்திருந்தாள். கழுத்து முட்ட நகை. கைநிறையக் காப்பு. முன்பு எலும்பும் தோலுமாக இருந்த அவள் அன்று பொங்கிப் பூரித்திருந்தாள்.

“தம்பி சாப்பிட வா... நீ செய்த உதவிகளை நாங்கள் மறக்கமாட்டம். நான் உன்னை எனது உடன் பிறந்த சகோதரனாகத்தான் நினைத்துள்ளேன். அக்காவின் குடிபுகலுக்கு இப்போது தான் வரமுடிந்ததா...?” என்று கேட்டாள் வள்ளியம்மை.

“என்னக்கா செய்வது?. எனது நிலைமை உங்களுக்குத் தெரியுந் தானே....” கலங்கினான் கஜேந்திரன்.

---

**1022. ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்**
**நீள்வினையால் நீளும் குடி.**

---

விடாமுயற்சி, நிறைந்த அறிவு என்ற இரண்டையும் கொண்டு இடைவிடாது செய்கின்ற

செயல்களால் ஒருவனுடைய குடிப் பெருமை உறுதியாய் உயர்வடையும்.

## தெய்வத்தின் உதவி.

"எல்லாம் மகா கணபதியின்ரை அருள் தான் அண்ணை. நான் எதைச் செய்தாலும் மகா கணபதியை வணங்கிவிட்டுத் தான் செய்வேன். எனது முயற்சிகளுக்கு அவர் உறுதுணையாக எப்போதும் இருந்து வருகிறார். இரண்டு வருடயங்களுக்கு முன்பு எனது பிள்ளைகள் ஒரு நேரச்சாப்பாட்டிற்கு வழியில்லாமல் அலைந்ததுகள் கஷ்டப்பட்டதுகள் பசிக்கொடுமையைத் தாங்கமுடியாது களவெடுத்ததுகள். எனது மனைவி மிகவும் நல்லவள் குலமகள், அவள் என்றபடியால் எல்லாக் கஷ்டங்களையும் தாங்கினாள். வேறு பெண்ணாக இருந்தால் உயிரை விட்டுவிடுவாள்" உணர்ச்சி வசப்பட்டான் இராசகோபால்.

"ஏன் வள்ளியம்மையும் பிள்ளைகளைத் தூக்கிக் கிணற்றில் போட்டுவிட்டுத் தானும் குதிக்கப்போறணெண்டு தானே சொன்னவள். அதைக் கேட்டுப் பெறுக்க முடியாத தணிகாசலம் உனக்குக் கண்டபடி அடித்தவர்" என்றார் வேலாயுதபிள்ளை.

இராசகோபால் சிரித்தான் "அந்த அடிதான் என்னை மனிதனாக்கியது".

"ஒருவன் முயற்சி செய்தால் தெய்வமும் அவனோடு சேர்ந்து உழைக்கும் என்று சொல்வார்கள். நான் முயற்சி செய்த போது

தெய்வமும் என்னோடு சேர்ந்து உழைத்தது. பின் நான் முயற்சி இல்லாமல் சோம்பியிருந்து இன்பங்களை அனுபவித்தபோது தெய்வமும் என்னைவிட்டு அகன்றுவிட்டது. அதனால் தான் நான் நட்டமடைந்தேன்; மனந்தளர்ந்தேன். அந்த மனத்தளர்ச்சியால் தான் எனது தொழிற்சாலையை கணநாதனிடம் கொடுத்தேன்'' என்றார் பரமேஸ்வரன்.

''காலம் பிழைத்தால் கடவுளால் கூட உதவ முடியாது என்று சொல்வார்கள். ஆனால் குருக்கள் அப்படிச் சொல்லவில்லை. ஒருமுறை எனக்கு வாகனங்களை ஏற்றி வந்த கப்பல் தாண்டுவிட்டது. அதை என்னால் தாங்க முடியவில்லை. தற்கொலை செய்துகொள்வோமா என்று கூட நினைத்தேன். பெருந்தொகையான பொருட்கள் கடலுள் தாண்டதால் எனக்கு பெருங்கடன் ஏற்பட்டது. துயரத்துடன் மகா கணபதி ஆலயத்திற்கு வந்தேன். எனது நிலையை உணர்ந்த குருக்கள் சொன்னார் ''மணி எல்லாம் கடவுளின் செயல். உனக்குள் கடவுள் இருக்கிறார். கடவுளுக்குள் நீ இருக்கிறாய். உன்னைப் படைத்து, நீ வாழ உலகைப் படைத்த இறைவன் உன்னையும் இயக்கி உலகையும் இயற்குகிறான். நீ எதைச் செய்யும் போதும் அதை நீ செய்வதாக நினைக்காதே. உன்னுள் இருக்கும் கடவுள் செய்வதாக நினைத்துக்கொள். உனது குறிக்கோளையும் இலட்சியத்தையும் மனதில் நிறுத்திக் கொண்டு செயலாற்று. வாழ்க்கை என்ற வியாபாரத்தில் நட்டமும் உண்டு. இலாபமும் உண்டு. ஒருமுறை பெருகும் மறுமுறை வற்றும். கிரதோசம் என்று எண்ணாதே கெட்ட காலம் என்றும் எண்ணாதே முடியாது என்றும்

எண்ணாதே. நீ மிகுந்த அறிவுள்ளவன். முயற்சி செய். உனது முயற்சிக்குக் கடவுள் உதவி செய்வார் மகாகணபதியை நினைத்து அவருக்கு அர்ச்சித்த அறுகை உனது காதில் வைத்துக்கொண்டு செயலாற்று எல்லாம் நல்ல படிமுடியும்'' என்றார். அதன் பின் நான் முயற்சிக்கும் போது மகா கணபதிக்கு அர்ச்சித்த அறுகைக் காதில் வைத்துக்கொண்டே செயலாற்றுவேன். அப்போது மகா கணபதி என்னுடன் இருக்கிறார் என்ற எண்ணம் எனது மனதில் இருக்கும். அதனால் எனக்கு நட்டம் ஏற்படவில்லை'' என்றான் மணிவண்ணன்.

''மாமா எனக்கு ஒரு கதை சொல்வார். ''ஓர் ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் தினமும் கடவுளை மெய்யன்போடு வழிபடுவான். அவனது அன்பில் மெய்மறந்த கடவுள் அவனுக்கு முன்தோன்றி ''பக்தா உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார். அதற்கு அந்தக் குடியானவன் ''எனக்கு மாடமாளிகைகள் வேண்டும், பணம் வேண்டும்'' என்று கேட்டான். கடவுள் ''உனக்குத் தேவையான அனைத்தும் கிடைக்கும்'' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். நாட்கள் கழிந்தனவே தவிர அக்குடியானவனுக்கு எதுவும் கிடைக்கவில்லை. அதனால் மீண்டும் அவன் மெய்யன்போடு கடவுளைத் தொழுதான். மீண்டும் அவன் முன் கடவுள் தோன்றினார். கடவுளைக் கண்டு மகிழ்ந்த குடியானவன் ''கடவுளே நீங்கள் தருவதாகக் கூறிச் சென்றளவையும் எனக்குக் கிடைக்கவில்லை'' என்றான்.

கடவுள் சிரித்துவிட்டுச் சொன்னார் “பித்தனே முயற்சி உள்ளவர்களுக்குத் தான் தெய்வம் வரிந்து கட்டிக்கொண்டு உதவி செய்யும். நீ ஏதாவது ஒரு தொழிலைச் செய். சகல ஐஸ்வரியங்களும் உன்னை வந்தடையும்” என்று கூறிவிட்டு மறைந்தாராம். என்றான் மணிவண்ணன்.

**1023. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும்.**

எனது குடியை உயர்த்துவேன் என்று முயலும் ஒருவனுக்குத் தெய்வம், வரிந்து கட்டிக் கொண்டு வந்து உதவி செய்யும்.

## நினைத்தது நிறைவேறும்.

“அருமையான கதை. எங்களது ஊரில் பலர் இப்படித்தான் வாழ்கிறார்கள். எந்த நேரமும் கடவுளை வணங்கி, ‘அது தா இது தா’, என்று வேண்டுதல் செய்வதைத் தவிர முயற்சி செய்வதில்லை. நேற்றுச் சுப்பையா என்னைக் கோயிலடியில் கண்டு ஒரே ஒப்பாரி. தான் எல்லா விரதத்தையும் அனுஷ்டிக்கிறாராம். கோயிலில் தொண்டு செய்கிறாராம். மகா கணபதி மீது நம்பிக்கை வைத்திருக்கிறாராம். ஆனால் மகா கணபதி தனக்கு உதவி செய்வதில்லையாம். கோயில் வாசலுக்கு வராத பலருக்கு

அள்ளிக்கொடுக்கிறாராம்.'' என்றார் வேலாயுதபிள்ளை.

''அவருக்கு மணிவண்ணன் சொன்ன கதையைச் சொல்லுங்கோ. முயற்சி செய்யாமல் எல்லோருக்கும் ஆலய வாசலில் கூடி இருந்து பிரார்த்தனை செய்தால் தேவைகள் பூர்த்தியாகுமா? தான் முன்னேற வேண்டும் என்று நினைத்துக் கடுமையாக உழைப்பவனுக்கு அவன் எதிர்பார்த்ததை விடக் கூடுதலான இலாபம் கிடைக்கும். நான் சென்றவருடம் மிகவும் கஷ்டப்பட்டு வெங்காயம் நட்டனான். மிகவும் கடுமையாக உழைத்தேன். மற்றைய வருடங்களைவிட மூன்று மடங்கு இலாபம் கிடைத்தது'' என்றான் நவராசா.

அப்போது தணிகாசலத்துக்கு அருகே வந்த இராசகோபால் தயங்கினான்.

அவனது தயக்கத்தை உணர்ந்த தணிகாசலம் ''என்ன?'' என்று கேட்டார்.

''பரமேஸ்வரன் ஐயாவுடைய தொழிற்சாலையில் நீங்கள் தான் எனக்குத் தொழில் பெற்றுத் தந்தனிங்கள். அந்தத் தொழிலை விடலாமென நினைக்கிறேன். அங்கு வேலை செய்யும் நேரத்தில் நான் தோட்டத்தில் உழைத்தால் அங்கு பெறும் சம்பளத்தைவிட பத்து மடங்கு சம்பாதிப்பேன்'' என்றான் நவராசா.

''தன்குடி உயர்வதற்காகச் செயல்களை விரைந்து முயன்று செய்வோருக்கு

அவர் ஆராயாமலே அச்செயல் தாமே நிறைவேறும்'' என்று சொல்வார்கள். முன்பு நீ சோம்போறியாக இருந்த காலத்தில் உன்னை நான் நம்பவில்லை. இப்போ உன் குடியை உயர்த்துவேன் என்ற நினைப்போடு முயற்சிக்கிறாய். அதனால் உனது விருப்பப்படி செய்'' என்றார் தணிகாசலம்.

''முயற்சி என்பது அத்திபாரம் போன்றது. அத்திபாரம் இல்லாமல் கட்டிடம் நிற்காது. அத்திபாரத்தைப் உறுதியாகக் கட்டல் வேண்டும். பலமான அத்திபாரத்தின் மீது எத்தனை அடுக்கு மாளிகைகளையும் கட்டலாம். பொதுவாகச் செயலுக்குத் தேவையான அயராத முயற்சி பலரிடம் இருப்பதில்லை. அவர்கள் தெய்வத்தை நம்பிக்கொண்டு முயற்சிக்காமல் இருக்கிறார்கள். தெய்வத்தை நம்பாதவன் கூடக் கடும் முயற்சி எடுத்தால் தான் நினைத்ததை அடையலாம்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''இப்பொழுது இராசகோபால் அண்ணை பெரிய முதலாளி. எனக்கு ஏதாவது வேலை தாருங்கோ'' என்று கெஞ்சினான் கஜேந்திரன்.

''உனக்கு வேலை தரமுடியாது. நீ சோம்போறி'' என்றான் இராசகோபால்.

''என்னுடைய தம்பியை நீங்கள் குறை சொல்கிறீர்களா....? கஜன், நீ வேலை செய்ய வேண்டாம். நான் மாதம் தோறும் ஐயாயிரம் ரூபா தருகிறேன்'' என்றாள் வள்ளியம்மை.

அப்பொழுது வித்தியாவும் அவளது தாயாரும் அங்கு வந்தனர். வித்தியா பச்சை நிறச் சேலை அணிந்திருந்தாள். அந்தச் சேலையை அவள் அணிந்ததை அவன் இதுவரை காணவில்லை. வித்தியா அவனைக் கடைக்கண்களால் பார்த்தாள். அவன் கண் சிமிட்டினான். அவளுக்கு அடக்கமுடியாத சிரிப்பு வந்தது. மற்றவர்கள் கண்டுவிடுவார்கள் என்ற பயத்தால் சிரமப்பட்டு அதை அடக்கினாள். அதை வேலாயுதபிள்ளை கண்டுவிட்டார்.

“தற்கால இளைஞர்களுக்கு பெரியவர்கள் இருக்கும் போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரிவதில்லை. காதலிப்பது தவறல்ல. காதல் என்றால் என்னவென்று தெரியாது பெரியவர்கள் முன் அநாகரிகமான முறையில் நடந்து கொள்கின்றனர். எதைக் காதல் என்று இவன் நினைக்கின்றான். பெரியவர்களை மதியாது நடப்பது தான் காதல் என்று நினைக்கிறானா...? அன்று துவிச்சக்கரவண்டியில் அவளை ஏற்றிக் கொண்டு சென்றான். இன்று பல பெரியவர்களுக்கு மத்தியில் கண்ணடிக்கிறான். இதுதான் காதலா...? படித்தவன் அதுவும் பல்கலைக்கழகத்தில் படிப்பவன் எதிர்காலத்தில் உயர்ந்த உத்தியோகத்தனாக வர இருப்பவன் இப்படிச் செய்யலாமா....?” என்று நினைத்தார் வேலாயுதபிள்ளை.

வேலாயுதபிள்ளையின் முகமாறுதலைக் கவனித்த கஜேந்திரன் மெல்ல எழுந்து அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

அப்பொழுது அங்கே வந்த வள்ளியம்மை சிரித்தவாறு கேட்டாள் “மனிசியோட கதைக்கப்போறியா.....?” அதைக்கேட்ட கஜேந்திரன் திகைத்துப் போனான்.

**1024. சூழாமல் தானே முடிவுஎய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு.**

தனது குடியை உயர்த்துவதற்கான செயலை விரைவாக முயன்று செய்பவர்களுக்கு, அவர்கள் ஆராய வேண்டிய நிலை இல்லாமலே நினைத்தது தானாகவே நிறைவேறும்.

## உலகத்தின் சொந்தக்காரன்

கஜேந்திரன் வெட்கப்பட்டான்; “வீதிகளில் துவிச்சக்கரவண்டியில் ஏற்றிக்கொண்டு செல்ல வெட்கமில்லை. கடற்கரையில் கட்டியணைத்தபடி இருக்க வெட்கமில்லை. நான் கதைக்கப் போகிறாயா...? என்று கேட்டால் வெட்கமா?” சிரித்தாள் வள்ளியம்மை.

அப்பொழுது விக்னேஸ்வரமூர்த்தி அங்கு வந்தார். அவரைக் கண்ட வள்ளியம்மை அவசரமாகச் சென்றாள்.

இராசகோபால் எழுந்து ஓடிவந்து விக்னேஸ்வரமூர்த்தியின் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டான். “நீங்கள் தான் ஐயா என்னுடைய தெய்வம். என்னைக் கற்பித்தது போல எனது பிள்ளைகளைக் கற்பிக்காமல் இடைநடுவில்

சென்றுவிட்டீர்கள். நீங்கள் சென்றபின்பு பாடசாலையின் தரம் குறைந்துவிட்டது'' என்றான்.

''அப்படிச் சொல்லக்கூடாது. நான் இன்னும் மூன்று வருடங்கள் தான் கடமையாற்ற முடியும். நான் கடமை புரிந்த பதினாறு வருடங்களில் அரசாங்கத்திடமிருந்து எந்த ஓர் உதவியும் கிடைக்கவில்லை. பதினாறு வருடங்களாக ஒரு நாற்காலி கூடத்தரவில்லை. அரசால் ஒதுக்கப்படும் தளபாடங்களும் கட்டடங்களும் வசதியுள்ள பாடசாலைகளுக்கும், இலஞ்சம் கொடுக்கும் பாடசாலைகளுக்கும், செல்வாக்குள்ள அதிபர்கள் இருக்கும் பாடசாலைகளுக்கும் தான் கொடுக்கப்பட்டன. நான் நலன்விரும்பிகளிடம் தான் உதவி பெற்று, தளபாடங்கள் வாங்கினேன், கட்டிடங்கள் கட்டினேன், பாடசாலையை அபிவிருத்தி செய்தேன். இப்பொழுது நான் கல்வித் திணைக்களத்தில் கடமை புரிவதால் எமது பாடசாலைக்குக் கட்டிடங்கள், தளபாடங்கள், நூல்கள், நூல் நிலையம் என்பவற்றைத் தரக்கூடியதாக இருக்கிறது. அறுபது வருடங்களுக்கு முன்பு கட்டிய எமது மண்டபக் கூரை நிலத்தில் விழுந்துவிடுமோ எனப் பயந்தேன். தற்பொழுது அதைத் திருத்தப் பணம் ஒதுக்கியுள்ளேன். அத்துடன் நான் இருக்கும் வரை இப்பாடசாலைக்கு என்னாலான உதவிகளைச் செய்வேன்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''அது எனக்குத் தெரியும் ஐயா, நீங்கள் தீமை செய்பவர்களுக்கும் நன்மை செய்பவர். நீங்கள் அதிபராக இருக்கும் போது உங்களைப் புகழ்ந்தவர்கள் எல்லோரும்

இப்பொழுது இகழ்கிறார்கள். அவதானமாக இருங்கள்'' என்றான் இராசகோபால்.

விக்னேஸ்வரமூர்த்தி சிரித்தார். பின் சொன்னார்; ''ஒருவனுக்குக் கடமை செயய்யத்தான் உரிமை இருக்கிறது. பயனை அனுபவிப்பதற்கல்ல. எல்லாவற்றிற்கும் காலம் பதில் சொல்லும். அந்தரங்கமாக ஒருவன் எதைச் செய்தாலும் அது ஒரு நாள் வெளிப்படும். நீ கவலை கொள்ளாது உற்சாகத்துடன் உழை'' என்றார்.

அப்பொழுது சுவாமியார் வந்தார். சுவாமியாரைக் கண்டதும் அங்கிருந்தவர்கள் எழுந்து நின்றனர். சுவாமியார் பூசையறைக்குச் சென்று சில கணங்கள் பூசை செய்தார். இராசகோபாலும் வள்ளியம்மையும் பிள்ளைகளும் அவரது பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தனர். அவர்களை ஆசீர்வதித்த சுவாமியார் சொன்னார்; ''இன்று உன்னைப் பாராட்டி வாழ்த்தவே இங்கு வந்தேன். குற்றமில்லாதவனாய் தன்குடி உயரவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் உழைத்து வாழ்பவனை உலகத்தவர் சொந்தமாக எண்ணிச் சூழ்ந்து கொள்வார்கள். இன்று இங்கு வந்தவர்களைப் பார்த்தால் அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது. முயற்சியால் முன்னேறிய நீ சமூக சேவையும் செய்ய வேண்டும். சமூகத்திற்குச் செய்யும்சேவை மிகவும் பிரதானமானதாகும். சமூகத்தின் அன்பை எப்பொழுதும் பெற்றிருத்தல் வேண்டும். சமூகத்திற்கு என்னென்ன வேண்டுமென்று இங்குள்ள பெரியவர்களுக்குத் தெரியும். அவர்களிடம் கேட்டு அறிந்து சேவை செய். நல்லவர்களுடன் கூடியிருந்தால் எப்பொழுதும் மகிழ்ச்சியுடன்

இருப்பாய். மரம் பழுத்ததும் வரும் வௌவால்களைப்போல நீ செல்வந்தனானதும் பலர் வருவார்கள் அவதானமாக இரு'' என்றார் சுவாமியார்.

அன்று மாலை வசந்தினி தனது வீட்டில் இருக்கும் ஒருவனுடன் இராசகோபாலின் வீட்டிற்கு வந்தாள். அப்போது கெங்காதரன் அங்கு இருந்தான். அவள் சென்ற பின் சொன்னான் தன்குடி உயர்வதற்காக உழைத்து வாழ்பவனை உலகத்தவர் சொந்தமான எண்ணிச் சூழ்ந்து கொள்வார்கள். அப்படி அவர்கள் சூழ்ந்திருக்கும் வேளையில் நீ குற்றம் இல்லாதவனாக இருந்தால் தான் உயர்வடைவாய். வசந்தினி கெட்டவள். பசையுள்ளவர்களைப் பிடிப்பதில் வல்லவள். உனது வீட்டிற்கு நாலைந்து முறை வந்ததாக அறிந்தேன். அவள் வெட்கம், ரோசம், மானம் எதுவும் இல்லாதவள். நீ எப்படிப் பேசினாலும் கோபிக்கமாட்டாள். வசிகரமாகக் கதைத்து ஏமாற்றிவிடுவாள்'' என்றான் கெங்காதரன்.

**1025. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
**சுற்றமாச் சுற்றும் உலகு.**

குற்றமில்லாதவனாய்த் தன் குடி உயர்வதற்கான செயல்களைச் செய்து வாழ்கின்றவனை உலகத்தவர் தமது இனத்தவனாக நினைத்துச் சூழ்ந்து கொள்வர்.

**நல்ல ஆண்மை.**

“வீடு குடிபுகுதல் காரணமாக நாலைந்து நாட்கள் வந்தவள் தான். அதற்காக நான் அவளின் மீது மோகமுற்றுவிடுவேன் என்று நினைக்காதே. வள்ளியம்மையைக் காதலித்துத் தான் நான் திருமணஞ் செய்தேன். அவள் எனக்காக எவ்வளவோ தியாகஞ் செய்தவள். அவளுக்குத் துரோகஞ் செய்ய நினைக்கக் கூடமாட்டன்” என்றான் இராசகோபால்.

“அது எனக்குத் தெரியும். ஆனால் அவள் அப்படியானவள் அல்ல. அவள் உன்னைத் தனது வலையில் வீழ்த்திவிடுவாள். அவள் எனது கடைக்கு வரும் போது பலர் புத்திமதி சொன்னார்கள். உன்னைப் போலத்தான் நானும் சொன்னேன். ஆனால் காலப்போக்கில் அவளது மயக்கு மொழியில் மயங்கிவிட்டேன். அவள் தான் என்னைப் பலாத்காரமாகப் பிடித்தவள். அதனால் என்னால் மீழ முடியவில்லை”

“மீழமுடியவில்லை என்கிறாய். அப்ப இப்பவும் தொடர்பிருக்கா...?” என்று கேட்டான் இராசகோபால்.

“இல்லை. ஆனால் மனதின் ஒரு மூலையில் லேசான வலி இருக்கிறது. அவள் விபச்சாரி என்று தெரிந்து தான் நான் அவளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டேன். அவள் முன்பும் பலருடன் தொடர்புள்ளவள். இப்பொழுதும் பலருடன் தொடர்பு வைத்திருப்பவள். இப்போது யாரோ ஓர் இளைஞன் வந்து அகப்பட்டிருக்கிறான். அவள் காலத்திற்குக் காலம் விதம் விதமான இளைஞர்களைப் பிடித்து விடுவாள். இப்போது

அவள் உன்னைச் சுற்றி வட்டமிடுகிறாள். கவனமாக இருந்து கொள். இல்லாவிட்டாள் உனது குடியை ஆளும் பொறுப்பை அவள் ஏற்றுவிடுவாள். நான் அவளின் வலையில் சிக்கியிருந்த போது எனது குடும்பத்தை அவள் தான் ஆண்டவள்..'' என்றான் கெங்காதரன்.

''நான் பொறுப்புக்கள் எதுவும் இல்லாமல் வீட்டில் படுத்திருந்த போது வள்ளியம்மை தான் குடும்பப் பொறுப்புக்கள் அனைத்தையும் ஏற்று நடத்தினவள். அப்பொழுது வீட்டில் நடப்பது எதுவும் எனக்குத் தெரியாது. ஆனால் இப்பொழுது எல்லாப் பொறுப்புக்களையும் நான் ஏற்றுவிட்டேன். வள்ளியம்மைக்குக் கரைச்சல் கொடுக்கக் கூடாது என்று தீர்மானித்துவிட்டேன்'' என்றான் இராசகோபால்.

''நான் திருமணமானதும் சகல பொறுப்புக்களையும் அப்பா என்னிடம் ஒப்படைத்துவிட்டார். அதனால் நான் நினைத்தபடி வாழ்ந்து பலவற்றை இழந்து விட்டேன். எனது போக்கை அறிந்த அப்பா என்னிடமிருந்த பொறுப்புக்களைத் தான் எடுத்துக்கொண்டார். அதனால் தான் எனது சொத்துக்கள் தவறின. நீ நினைப்பதைப் போன்றவள் அல்ல வசந்தினி. பலர் கூடியிருக்கும் சபையில் கூட அவர்களுக்குத் தெரியாது ஓர் ஆணுடன் உறவு வைக்கக் கூடியவள். அவளது கணவன் வீட்டில் இருக்கும் போது அவள் அவனை ஏமாற்றிவிட்டுப் பல முறை என்னுடன் உறவு கொண்டவள். அவள் எதற்கும் அஞ்சமாட்டாள். துணிந்தவள் இல்லாவிட்டால் ஊரில் நடைபெறும் நல்ல கெட்ட விடியங்களுக்கு

ஊர் பேர் தெரியாதவனுடன் சோடியாக வருவாளா?'' என்று கேட்டான் கெங்காதரன்.

அப்போது வள்ளியம்மை தேநீர் கொண்டுவந்து கெங்காதரனுக்குக் கொடுத்துவிட்டுச் சொன்னாள் ‘‘ஊரில் உள்ள எல்லோரும் பகலில் வந்தனர். நீங்கள் ஏன் வரவில்லை?''

‘‘வேலை கொஞ்சம் அதிகமாக இருந்தது. இன்று இரவு முழுவதும் நின்றுவிட்டுப் போகிறேன்'' என்று சிரித்தான் கெங்காதரன்.

‘‘நீ, இங்கு நிற்க, உனது தகப்பனார் மீண்டும் நீ வசந்தினியின் வீட்டுக்குச் சென்றுவிட்டாயென்று நினைப்பார்'' என்று காதுக்குள் குசுகுசுத்தான் இராசகோபால்.

‘‘அவர்கள் நினைக்கமாட்டார்கள். சென்ற மாதம் அப்பா பொறுப்புக்கள் எல்லாவற்றையும் மீண்டும் என்னிடம் ஒப்படைத்துவிட்டுச் சொன்னார் ‘‘கெங்கா, தான் பிறந்த குடியை ஆளும் சிறப்பினைத் தான் பெற்றிருப்பதே நல்ல ஆண்மையாகும். அதனால் பொறுப்புக்களை மீண்டும் உன்னிடம் ஒப்படைக்கிறேன். நீ செயலாற்றும் திறனைப் பார்த்து நான் மகிழ வேண்டும். உனது மனைவி தனது தேவைகளை என்னிடம் சொல்லித் தான் அவற்றை நிறைவேற்றி வந்தாள். ஒரு பெண் தனது கணவனிடம் தான் தனது தேவைகளை உரிமையுடன் தெரிவித்தல் வேண்டும். அதேபோல கணவன் பாசமிகுதியுடன் அவளது தேவைகளை நிறைவேற்ற வேண்டும். அது தான் ஆழுமையுள்ள

குடும்பம். அக்குடும்பத்தில் தான் அன்பு நிறைந்திருக்கும்'' என்றவர்.

''உண்மை தான். முன்பு எனது தேவைகளை நானே எண்ணிப் பார்ப்பேன். சலிப்பும் வெறுப்பும் தான் வரும். இப்போது நான் அவரிடம் கேட்கும் போதும்இ அவர் என்னிடம் கேட்கும் போதும் எல்லையில்லாத மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஒரு பெண் தன் கணவனால் அன்புடன் ஆளப்படவேண்டியவள்'' என்றாள் வள்ளியம்மை.

**1026. நல்ஆண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்ஆண்மை ஆக்கிக் கொளல்.**

ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று சொல்லப்படுவது என்னவென்றால், தான் பிறந்த குடியை ஆளும் சிறப்பை தனக்கு உண்டாக்கிக் கொள்வதாகும்.

## வல்லமை உள்ளவன்.

அன்று பௌர்ணமி தினம். பூரண சந்திரன் வானத்தில் உலாவிக்கொண்டிருந்தான். முகில்கள் வானத்தில் இல்லாமையால் அவனது பூரண ஒளி பூமியைப் பகலாக்கிக் கொண்டிருந்தது. மேல்மாடியில் அமைந்த விசாலமான அறையில் இருந்த பஞ்சனையில் இராசகோபால் படுத்திருந்தான். அவனுக்கு அருகில் இரவு உடையில் வள்ளியம்மை அமர்ந்திருந்தாள்.

''இப்படி ஒரு காலம் வருமென்று நான் கனவு கூடக் கண்டதில்லை. வேலை எதுவுஞ்

செய்யாமல் நீங்கள் சோம்பியிருந்த போது நாம் வாழ்ந்த இரவல் வீட்டை நினைத்துப் பார்த்தேன். காற்றுப் பலமாக வீசினால் பயம் மழை பெய்தால் பயம். இப்படிப் பயந்து பயந்தே சீவித்த நாம் இன்று மாடி வீட்டில் பாதுகாப்புடன் மகிழ்வாக இருப்பதை நினைக்க ஆச்சரியமாக இருக்கிறது. இப்படிச் சகல வசதிகளோடும் வாழ்வதை எனது அம்மா பார்த்தால் எவ்வளவு சந்தோசப்படுவா. ‘‘ஒருநாளும் நீ உருப்பட மாட்டாய். அவன் உழைக்க முடியாத சோம்போறி. நீயும் பிள்ளைகளும் நஞ்சு குடித்துத்தான் சாவீர்கள்’’ என்று அம்மா அடிக்கடி சொல்வா. உங்களது தந்தை தினமும் கவலைப்படுவார் ‘‘வள்ளியம்மை எனக்கிருக்கும் சொத்தைப் பராமரித்தாலே இவன் குபேரனாக வாழ்வான். இராப் பகலாக வேலை செய்யாமல் தூங்க இவனுக்கு எப்படி மனம் வருகிறது?. மழை காலத்தில் பிள்ளைகள் எழும்பிக் குந்திக்கொண்டு இருப்பதைப் பார்க்க என்னால் பொறுக்கமுடியவில்லை. அதைவிட எப்படி இவன் சாப்பாட்டில்லாமல் இருக்கிறான்’’ என்று கவலைப்படுவர். இப்போது நாம் இருக்கும் நிலையைப் பார்த்தால் எவ்வளவு சந்தோஷப்படுவார்’’ என்றாள் வள்ளியம்மை.

‘‘தாய் தந்தையர்களுக்கு நான் கடமை செய்யவில்லை. என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய எனது தந்தைக்கு நான் உழைத்து ஒரு நேரச் சோறு கூடக்கொடுக்கவில்லை. அதைவிட எனது செயல்களால் அவர்கள் வாழும் போது ஒரு நிமிடங்கூட நிம்மதியாக இருக்கவில்லை. கடைசிக் காலத்தில் அவர் ஈடுவைத்த காணியை மீண்டது

அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது'' என்று கலங்கினான் இராசகோபால்.

''நீங்கள் அறிவுடையவர். காலத்தின் கொடுமையால் தான் சோம்பியிருந்துவிட்டீர்கள்.....? நிறுத்தினாள் வள்ளியம்மை.

''ஏதோ சொல்ல நினைக்கிறீர். சொல்லும்... சொல்லும்...? என்றான் இராசகோபால்.

''சொன்னால் செய்வீர்களா...?'' நிமிர்ந்து அவனை ஏக்கத்துடன் பார்த்தாள் வள்ளியம்மை.

''உமக்கு என் மீது ஏன் திடீரெனச் சந்தேகம் வந்தது? நீர் கேட்டு நான் எதையாவது செய்யாது விட்டிருக்கிறேனா...?''

''இது எனது விஷயமல்ல.......''

''எனது விஷயம், உமது விஷயம் என்று இப்போது தான் புதுக்கதை கூறுகிறீர். உமது விஷயமில்லாவிட்டால் ஏன் என்னுடன் கதைக்கிறீர்?'' என்றான் இராசகோபால்.

இராசகோபாலை நிமிர்ந்து பார்த்துக் கவர்ச்சியாகச் சிரித்தாள் வள்ளியம்மை; ''முன்பு உமக்குச் சிரிக்கவே தெரியாது. இப்போ உமது சிரிப்பு கன்னிப் பெண்ணின் கவர்ச்சியான சிரிப்புப் போல இருக்கிறது. அது சரி நீர் சொல்ல வந்ததைச் சொல்லவில்லையே''.

மீண்டும் சில கணங்கள் தாமதித்த வள்ளியம்மை சொன்னாள் ‘‘போர்களத்தில் அஞ்சாமல் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் வீரனைப் போல, தன் குடும்பத்தவர்கள் கஷ்டப்பட்டால் அவர்களைத் தாங்கவேண்டிய பொறுப்பு தக்க வல்லமை உள்ளவனையே சாரும். நீங்கள் சகல வல்லமையும் பொருந்தியவர். உங்களது சகோதரி மிகவும் கஷ்ரப்படுகிறாள். புரிசனுக்குப் போதிய வருமானம் இல்லை. அவருக்கு நீங்கள் ஒரு நல்ல வேலை கொடுங்கள். அத்துடன் அவர்களது பிள்ளைகள் சிறிய தொரு பாடசாலையில் தான் கல்வி கற்கிறார்கள். அவர்களது படிப்புச் செலவை ஏற்று, அவர்களைக் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்த்துவிடுங்கள்’’ என்றாள் வள்ளியம்மை.

‘‘விக்னேஸ்வரமூர்த்தி ஐயா பதவி ஊயர்வு பெற்றுச் சென்ற பின் அப்பாடசாலையின் கல்வித் தரம் குறைந்துவிட்டதாகக் கதைக்கிறார்கள். தங்கையின் பிள்ளைகளையும் எமது பிள்ளைகளையும் பட்டணத்திலுள்ள பிரபல பாடசாலையில் சேர்ப்போம். அது சரி உமது சகோதரர்களும் கஷ்ரப்படுகிறார்கள் தானே. அவர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்வதென்று சொல்லவில்லையே’’ என்றான் இராசகோபால்.

‘‘மூத்தண்ணைக்கு நல்ல வீடு இல்லை. இருக்கிற வீட்டைத் திருத்திக் கொடுப்பம். தங்கையின் பிள்ளைகளின் படிப்புச் செலவைக் கொடுப்பம்’’ என்றாள் வள்ளியம்மை.

“சரி” என்றான் இராசகோபால்.

**1027. அமர் அகத்து வன்கண்ணர் போலத் தமர் அகத்தும் ஆற்றுவார் மேற்றே பொறை.**

போர்களத்தில் வீரர்களுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை அஞ்சாமல் ஏற்றுக் கொள்ளும் வீரனைப் போல, தன்குடிப்பிறந்தாரைக் காப்பாற்றும் பொறுப்பை வல்லமை உள்ளவனே ஏற்றுக் கொள்வான்.

## காலம் இல்லை.

இராசகோபாலும் வள்ளியம்மையும் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயக் குருக்களின் வீட்டிற்கு வந்தனர். அப்போது அவர் யாரோ ஒருவரின் சாதகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் வீட்டின் பின் பக்கத்தில் மருத்துவம் பார்ப்பதற்கும் சோதிடம் சொல்வதற்கும் தனியான ஒரு மண்டபத்தை அமைத்திருந்தார். அம்மண்டபத்துள் தான் குருக்கள் சோதிடம் சொல்வார். ஒருவருக்குச் சோதிடம் சொல்லும் போது மற்றவர் அங்கு வரக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தார். ஒருமுறை அவர் ஊரிலுள்ள ஒருவரின் பெண்ணுக்குத் திருமணப்பொருத்தம் பார்க்கும் போது கனகன் அங்கிருந்தான். அவர் இருப்பதனால் குருக்கள் தயங்கினார். ஆனால் வந்தவர் ‘அவர் இருந்தாலும் பரவாயில்லை கூறுங்கள்’ என்று சொன்னார். அப்பெண்ணுக்குப் பிள்ளைப் பாக்கியம்

இல்லையென்று குருக்கள் சொன்னார். அதை அன்று மாலையே சம்பந்தப்பட்ட மாப்பிள்ளையின் தகப்பனுக்குக் கனகன் சொல்லிவிட்டான். அதனால் அத் திருமணம் குழம்பிவிட்டது. பின் அதனால் பெருஞ் சண்டையும் மூண்டது. ‘படித்தவன் ஆசிரியராக இருந்து புத்திமதிகள் கூறுபவன், இப்படிச் செய்துவிட்டானே’ என்று பெண்ணின் தந்தை வெகுகாலம் சொல்லிச் சொல்லித் துன்பப்பட்டவர். அதன் பின்பு குருக்கள் ஒருவருக்குச் சோதிடம் சொல்லும் போது இன்னொருவரை அந்த இடத்தில் இருக்க அனுமதிப்பதில்லை.

உள்ளே சாதகம் பார்த்தவன் வெகு நேரமாகக் குருக்களுடன் கதைத்துக் கொண்டிருந்தான். அதனால் பொறுமை இழந்த இராசகோபால் அடிக்கடி எழுந்து உலாவினான்.

வெகு நேரத்தின் பின் சோதிடம் பார்த்துக்கொண்டிருந்தவன் வந்து “உங்களைக் குருக்கள் வரட்டாம்” என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

உள்ளே சென்ற இராசகோபாலையும் வள்ளியம்மையையும் குருக்கள் வரவேற்றார் “வாருங்கோ. இரண்டு பேரும் வந்திருக்கிறியள். பெரிய விஷயம் போலத் தெரிகிறது” என்றார் குருக்கள்.

“ஓம் குருக்கள். புதிதாக நான் ஒரு தொழிலைத் தொடங்கலாம் என்று நினைத்திருக்கிறேன். காலையில் எட்டுமணிக்கு

கணநாதனது தொழிற்சாலைக்குச் சென்றால் மாலை நான்கு மணிவரை அங்கு வேலை செய்ய வேண்டும். அதைவிட்டுவிட்டுச் சொந்தமாக தொழில் செய்ய நினைக்கிறேன். கணநாதனது தொழிலைவிட்டால் தோட்டத்தையும் நல்லபடியாகக் கவனிக்கலாம்'' என்றான் இராசகோபால்.

''மூத்த மகனின் சாதகத்தைக் கொண்டு வந்தியா?'' என்று கேட்டார் குருக்கள்.

''இந்தாருங்கோ'' என்று நீட்டினான் இராசகோபால்.

''திருகோண நட்டத்திரம். இப்ப அவனுக்கு அட்டமத்துச் சனி நடக்கிறது. செய்யும் தொழிலை விடச் செய்யும்; நட்டமடைய வைக்கும். ஒரு வருடத்திற்கு நீ கணநாதனது தொழிலை விடுவது நல்லதல்ல. புதுத்தொழிலை ஆரம்பிக்கக் கூடாது. மீறி ஆரம்பித்தால் உள்ளதையும் இழக்கவேண்டிய நிலை ஏற்படும்'' என்றார் குருக்கள்.

''இளைய மகனின் குறிப்பைப் பாருங்கோ குருக்கள்'' என்றான் இராசகோபால்.

''தந்தையின் தொழில் சுகநலம் பற்றிப் பார்ப்பதானால் மூத்த மகனின் குறிப்பைத் தான் பார்க்க வேண்டும். தாயின் நிலை பற்றிப் பார்க்கவேண்டுமானால் தான் இளைய மகனின் சாதகத்தைப் பார்க்க வேண்டும். பெண்பிள்ளைகளின் சாதகத்தைப் பெற்றோரின் எந்த விஷயத்திற்கும் பார்ப்பதில்லை. அதைத்

திருமணத்தின் போது மட்டும் பொருத்தம் பார்ப்பார்கள்'' என்றார் குருக்கள்.

இராசகோபாலின் மனம் துவண்டு போனது. ''குருக்கள் சொல்வது தப்பாது நடக்கும்'' என்று யோசித்தவாறு எழுந்தான் இராசகோபால் 'இராசகோபால் அடுத்த சித்திரைக்குப் பிறகு தொழிலைத் தொடங்கு. அதற்கு முன் தொடங்கினால் பெரும் நட்டம் ஏற்படும்'' என்றார் குருக்கள்.

இராசகோபால் சோர்வுடன் வந்து மகாகணபதியை வணங்கினான் ''இப்போ என்ன அவசரம் அடுத்த வருடம் வரை பொறுத்திருங்கோ'' என்றாள் வள்ளியம்மை.

மகாகணபதியை வணங்கிவிட்டுத் திரும்பிப் பார்த்தான். சுவாமியார் அரசமர நிழலில் இருந்தார். இராசகோபால் சுவாமியாரின் அருகில் வந்து சுவாமியாரின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். சுவாமியார் புன்னகைத்தார். ''இன்று உனது முகம் சோர்ந்திருக்கிறது. குருக்கள் கூடாதவற்றைச் சொல்லிவிட்டாரா....?''

''ஆம் சுவாமி. புதிதாக ஒரு தொழிலை ஆரம்பிக்கலாமென நினைத்தேன். அவர் அடுத்த வருடம் சித்திரை மாதத்தின் பின் தொடங்கட்டாம்'' துக்கப்பட்டான் இராசகோபால்.

''மகனே, தம் குடி உயர்வடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன்

உழைப்பவர்களுக்கு இன்ன காலம் என்று ஒன்று இல்லை. சோம்பல் கொண்டவனும், தன்னம்பிக்கை இல்லாமல் பயப்படுபவனும் தான் காலத்திற்குப் பயப்படுவான். நீ உன் குடி உயரவேண்டுமென்று உற்சாகமாக உழைப்பவன். அதனால் அஞ்சாமல் புதுத் தொழிலைத் தொடங்கு'' என்றார் சுவாமியார்.

''குருக்கள் எனது மூத்த மகனின் சாதகத்தைப் பார்த்துவிட்டு ''அவனுக்கு அட்டமத்தச் சனியென்றும் புதிய தொழிலைத் தொடங்க வேண்டாம்'' என்றும் சொன்னார்''.

''மகனே, ஊக்கமில்லாதவன் தான் காலத்தைப் பார்ப்பான். மகாகணபதி மீது பாரத்தைப் போட்டுவிட்டுத் தொழிலைத் தொடங்கு'' என்று கூறிய சுவாமியார் கண்களை மூடினார்.

---

**1028. குடிசெய்வார்க்கு இல்லை பருவம்; மடிசெய்து மானம் கருதக் கெடும்.**

---

தனது குடியின் உயர்வுக்காகச் செயலாற்றுபவர்களுக்கு உரிய காலம் என்று ஒன்றும் இல்லை. சோம்பல் கொண்டு தம் மானத்தைக் கருதுவாரானால் குடிப்பெருமை கெடும்.

## துன்பமில்லா உடம்பு

''பரம்பரை பரம்பரையாகக் குருக்களின் குடும்பத்தினர் தான் இவ்வூரவர்களுக்குச் சோதிடம் பார்ப்பது. குருக்களின் தகப்பனையும் பேரனையும் விடக்

குருக்கள் நன்றாகச் சோதிடம் பார்ப்பார் என்று ஊரவர்கள் சொல்வார்கள். முன்பு நீங்கள் வேலையில்லாமல் இருந்த போது ஒரு நாள் நான் உங்களுடைய சாதகத்தையும் மூத்தவனின் சாதகத்தையும் குருக்களிடம் கொண்டுவந்து காட்டினேன். அப்போது அவர் 'நாங்கள் இன்னும் சில வருடங்களில் பெருங்கோடீஸ்வரராக இருப்போம்' என்று கூறியவர். அதை நான் உங்களின் அப்பாவுக்கும் சொன்னனான். அவர் விழுந்து விழுந்து சிரித்தவர். நான் அதை மறந்திட்டன். இப்போது தான் நினைவுக்கு வருகிறது. அதனால் ஒரு வருடம் பொறுத்துப் புதிய தொழிலைத் தொடங்குங்கள். இப்போது நாம் மிகவும் வசதியுள்ளவர்களாக வாழ்கிறோம். பேராசைப்படக் கூடாது. படிப்படியாக முன்னேறுவோம். தயவு செய்து அவசரப்படாதைங்கோ'' என்றாள் வள்ளியம்மை.

''வள்ளி, சுவாமியார் முக்காலமும் உணர்ந்தவர். அவரின் பிரசங்கங்களை நீ கேட்பதில்லையா....? கடவுள் ஒருவனுக்கு உதவி செய்யத் தொடங்கினால் அவன் அட்டமியில் தொழில் தொடங்கினாலும் இலாபமடைவான். மகா கணபதியை நான் மனமுருகி வேண்டினேன். எனக்கு அருள் செய்வதற்காகத்தான் சுவாமியார் அந்த நேரம் அங்கிருந்தார். மற்றைய நாட்களில் இரவுப் பூசையின் பின்பு தானே சுவாமியார் அரசமர நிழலில் வந்தமர்வார். இன்று எமக்காகத்தான் மகா கணபதி சுவாமியாரை அரச மரத்தின் கீழ் சென்று அமரச் செய்துள்ளார்'' என்றான் இராசகோபால்.

''தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். கொஞ்ச நாட்களுக்குப்

பொறுத்திருப்பதால் நட்டமேதுவும் வரப்போவதில்லை. இப்போது தான் நாங்கள் பெரியதொரு மாடிவீடு கட்டி குடிபுகுந்துள்ளோம். அடுத்துப் பெரிய தொழிலைத் தொடங்கினால் சனம் நாவூறு பார்த்துவிடும். சனத்தின்ரை கண்பட்டால் காரணமின்றியே நோய்கள் வந்துவிடும்'' கெஞ்சினாள் வள்ளியம்மை.

''சுவாமியாரின் வாக்கு மகா கணபதியின் வாக்கு என்பதை நீர் நம்புகிறீரா....?'' என்று கேட்டுவிட்டு நிறுத்தினான் இராசகோபால்.

''சுவாமியாரின் வாக்கு மகா கணபதியின் வாக்கில்லையென்று நான் சொன்னனானா....?'' கவலையோடு கேட்டாள் வள்ளியம்மை.

''பிறகு ஏன் என்னைத் தடுக்கிறாய்?'' என்று கேட்டான் இராசகோபால்.

அப்போது தணிகாசலம் அங்கு வந்தார் ''இவர் ஒரு தொழிலை ஆரம்பிக்கப்போகிறாராம். குருக்கள் அடுத்த சித்திரைக்குப் பின்பு ஆரம்பிக்குமாறு கூறினார். மூத்தவனுக்கு அட்டமத்துச் சனி நடக்கிறது. தொழிலைத் தொடங்கினால் பெரும் நட்டமேற்படுமாம்''.

''சித்திரை வரை பொறுத்திரன். ஏன் அவசரப்படுகிறாய்...?'' என்றார் தணிகாசலம்.

“நான்கு மணிக்குச் சுவாமியார் எப்பொழுதாவது அரசமர நிழலில் காரணமின்றி இருப்பாரா....?” என்று கேட்டான் இராசகோபால்.

“இல்லை. அவா் தேவை ஏற்பட்டால் தான் இருப்பார்” என்றார் தணிகாசலம்.

“கேட்டுக்கொள்ளும். நான் குருக்களிடம் சோதிடம் பார்த்துவிட்டு நான்கு மணிக்கு வந்து மகா கணபதியை மனமுருகி வணங்கிவிட்டுத் திரும்பிப் பார்த்தேன். சுவாமியார் இருந்தார். மகிழ்வுடன் அவரின் அருகே சென்றேன். அவா் என்னைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டுச் சொன்னார் “மகனே, தம்குடி உயா்வடைய வேண்டும் என்ற உயா்ந்த நோக்குடன் உழைப்பவர்களுக்கு காலம் என்று ஒன்றில்லை. அதனால் உனது புதிய தொழிலைத் தொடங்கு” என்றார். அதை நம்பி நான் தொழிலைத் தொடங்க வள்ளியம்மை விடுறாள் இல்லை.

“குருக்கள் சாதகத்தைக் கணித்துச் சொல்வார். சுவாமியார் செய்யவேண்டியவற்றைச் சொல்லுவார். சுவாமியார் சொன்னால் செய்யலாம். சுவாமியாரின் நாவில் மகாகணபதி இருக்கிறார். நீ பயப்படாமல் தொழிலைத் தொடங்கு” என்றார் தணிகாசலம்.

“இப்ப தான் பெரிய வீடு கட்டிக் குடிபுகுந்தனாங்கள். உடனே புதிய தொழிலைத் தொடங்கினால் சனங்களின் கண்பட்டுவிடும்” என்றால் வள்ளியம்மை.

தணிகாசலம் பெரிதாகச் சிரித்தார்; "இப்பவும் நீ மூடநம்பிக்கைகளோடு தான் வாழ்கிறாய். மற்றவர்களால் எமக்கு இன்பத்தையோ, துன்பத்தையோ தரமுடியாது. அத்துடன் தன்னுடைய குடும்பத்திற்குத் துன்பங்கள் வராமல் நீக்கப் பெரும் முயற்சி செய்கிறவன் உடம்புக்கு எக்காரணம் கொண்டும் துன்பம் வராது; நோயும் தாக்காது" என்றார் தணிகாசலம்.

**1029. இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்**
**குற்றம் மறைப்பான் உடம்பு?**

தனது குடிக்கு எந்தக் குற்றமும் வராமல் நீக்க முயல்கின்றவனின் உடம்பு துன்பத்திற்கு இலக்காகுமோ..?

## மரம் போல விழும்

தணிகாசலம் அப்படிச் சொல்லிய போதும் வள்ளியம்மைக்கு நம்பிக்கை பிறக்கவில்லை என்பதை இராசகோபால் உணர்ந்துகொண்டான். 'தன் அன்புக்குரியவளின் மனதைத் திருப்திப்படுத்திய பின்பே புதிய தொழிலைத் தொடங்க வேண்டும்' என்று நினைத்தான்.

அன்று வெள்ளிக்கிழமை இரவுப் பூசைக்கு இராசகோபாலும் வள்ளியம்மையும் அர்ச்சனைப் பொருட்களுடன் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தனர். இரவுப் பூசை முடிந்து, விபூதி பிரசாதம் பெற்றுக் கொண்ட மக்கள் சுவாமியாரிடம் சென்றனர்.

இராசகோபாலும் வள்ளியம்மையும் அர்ச்சனைத் தட்டைப் பெறுவதற்காக அங்கு நின்றனர். அப்பொழுது குருக்கள் அர்ச்சனைத் தட்டுடன் வந்தார்; ‘‘வள்ளியம்மை, உனது மகனின் சாதகத்தை கணித்துப் பார்த்த போது அவனுக்கு அட்டமத்துச் சனி நடைபெறுவது தெரிந்தது. அட்டமத்துச் சனி நட்டத்தையும், பொருள் அழிவையும் தான் கொடுப்பான். ஆனால் சுவாமியாரின் ஆசி அனைத்தையும் கொடுக்கும். மகா கணபதி, தான் சொல்லவேண்டியவற்றைச் சுவாமியாரின் வாய் மூலம் சொல்கிறார். ஆகையால் நீங்கள் பயமின்றித் தொழிலைத் தொடங்கலாம். அத்துடன் ஒருவனுக்குத் துன்பம் வரும்போது அருகில் இருந்து தாங்க வல்ல நல்ல ஆள் இல்லாத குடிதான் கோடாரியால் வெட்டப்பட்ட மரத்தைப் போல விழும். இராசகோபாலுக்கு உதவி செய்ய எத்தனை பேர் காத்திருக்கிறார்கள். தணிகாசலம், வேலாயுதபிள்ளை, பரமேஸ்வரன், மணிவண்ணன் என்று பலர் இருக்கிறார்கள்’’ என்றார் குருக்கள்.

உணர்ச்சியில் பெருக்கோடு வள்ளியம்மை நிமிர்ந்து குருக்களைப் பார்த்தாள். திடீரென்று குருக்களின் முகத்தில் தும்பிக்கை முளைத்திருந்தது; ‘‘மகா கணபதி தான் தனது மனக்குறை நீக்கச் சொல்கிறார்’’ என்று நினைத்தாள்.

‘‘தம்பி உள்ளவன் சண்டைக்கு அஞ்சான்’’ என்று பெரியவர்கள் கூறுவார்கள். சில நாட்களுக்கு முன் கனகவாத்தியாரின் தாயார்

காலமானார். விறகு தறித்து, மயானத்துக்குக் கொண்டு சென்று அடுக்கக் கூட ஆட்கள் இல்லை. மூன்று பேர்தான் சுடலைக்குச் சென்றார்கள். அதைவிட வெட்கக்கேடு பிரேதம் ஒரு வீட்டில் இருந்தால் அடுப்பு மூட்டக்கூடாது. அயலவர்கள் தான் உணவு கொடுக்க வேண்டும். ஆனால் அன்று சமைத்துத் தான் சாப்பிட்டவை. சமூகத்தோடு நல்லுறவு வைத்திருந்தால் துன்பப்படும் வேளைகளில் ஓடி வந்து உதவுவார்கள். இராசகோபாலுக்கு உதவ பலர் காத்திருக்கிறார்கள். உங்களுக்குத் துன்பம் வந்தால் நானே உதவி செய்வேன்'' என்றார் குருக்கள்.

''மிகவும் நன்றி ஐயா'' என்று கூறிக் குருக்களிடம் விடைபெற்றுக்கொண்டு சுவாமியார் அருளுரை வழங்கும் அரசமரத்தடிக்கு வந்தான் இராசகோபால். அப்பொழுது மக்கள் எழுந்து சென்று கொண்டிருந்தார்கள்.

இராசகோபாலைக் கண்ட மணிவண்ணன், இராசகோபாலின் அருகில் வந்தான் ''கோபால், ஒரு புதுத்தொழில் தொடங்குவதானால் சோதிடம் பார்க்கத்தான் வேண்டும். சோதிடம் தான் வாழ்க்கை இல்லை. நான் தொழில் செய்யும் போது சோதிடர்கள் எனக்குப் பெரும் இலாபம் வருமென்று கூறியபோதெல்லாம் எனக்கு நட்டம் தான் வந்தது. முயற்சி உடையவனுக்குத் தெய்வம் வரிந்துகட்டிக்கொண்டு உதவி செய்யும். அத்துடன் நாம் நட்டமடையும் போது தகுந்த ஆலோசனைகளை வழங்கவும், உதவிகள் செய்யவும் நல்ல மனிதர்கள் வேண்டும். உனக்கு உதவி செய்யப் பலர் இருக்கிறார்கள். அதனால் நீ

தாமதியாது தொழிலைத்தொடங்கு'' என்றான் மணிவண்ணன்.

''உங்களது ஆலோசனைக்கு நன்றி. எனக்குத் துன்பம் வந்தால் நான் உங்களிடம் தான் வருவேன்'' என்றான் இராசகோபால்.

''தாராளமாக வா. இருபத்திநான்கு மணிநேரமும் உனது வருகைக்காக எனது வீட்டுக் கதவுகள் திறந்திருக்கும்'' என்றான் மணிவண்ணன்.

வீட்டுக்கு வந்த வள்ளியம்மைக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அன்று இரவு உணவைக் குழைத்து அவனது கையில் கொடுத்தாள்.

''மனிசியின் கைபட்டால் பச்சைத்தண்ணியும் பஞ்சாமிர்தமாகும்''. என்றான் இராசகோபால்.

''காதலிக்கும் போது பெண்களை மயக்க ஆண்கள் அவர்களைப் பற்றிப் புகழ்வார்கள். இப்ப நான் கிழவி. என்னை ஏன் புகழ்கிறீர்கள்'' என்றாள் வள்ளியம்மை.

''நீர் கிழவியோ....? இப்ப பார்த்தாலும் கன்னிப் பெண் என்று தான் எல்லோரும் சொல்வார்கள். எமது வம்சம் தழைக்க இன்னும் நாலைந்து பிள்ளைகள் எனக்குத் தேவை'' விசிலடித்தான் இராசகோபால்.

“போங்கோ...... எந்த நேரமும் உங்களுக்கு அந்த நினைவு தான். புதுத்தொழிலைத் தொடங்கினால் என்ன செய்யப் போகிறீர்கள்” என்று கேட்டாள் வள்ளியம்மை.

“புதுத்தொழில் தொடங்கினாலும் உம்மீதுள்ள மோகம் குறையாது” என்றான் இராசகோபால்.

**1030. இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்து ஊன்றும்
நல்ஆள் இலாத குடி.**

துன்பம் வரும்போது அருகில் இருந்து உதவி செய்ய நல்ல ஆளில்லாத குடி, துன்பம் என்ற கோடாரியால் அடியில் வெட்டி வீழ்த்தப்பட்ட மரம் போல விழுந்து விடும்.